# 2000

# பாராளுமன்றப் பொதுத் தேர்தலும், சிறுபான்மை சமூகத்தினரும்.





24
ன்னா
SL/PR

## புன்னியாமீன்

புன்னியாமீன் எழுதிய 60 வது நூல்

# 2000

# பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் சிறுபான்மை சமூகத்தினரும்.

(ஓர் ஆய்வு)


## பீ. எம். புன்னியாமீன்

B.A. (Cey) Dip in Journ (Ind) S.L.T.S.



வெளியீடு

சிந்தனை வட்டம்

14 உடத்தலவின்னை மடிகே உடத்தலவின்னை 20802

ஸ்ரீலங்கா

Tel : 08 - 497246 / 08 - 493746 / 070- 800480 / 078-680645

Fax: 08 - 497246

E Mail : chinthanai _ vatt @ hot mail. com / 9to 9 com @ slt net .lk

சிந்தனை வட்டத்தின் 114 வது வெளியீடு

2000 பாராளுமன்றப் பொதுத்தேர்தலும்
சிறுபான்மை சமூகத்தினரும்.
(ஓர் ஆய்வு)

நூலாசிரியர்: **பீ. எம் புன்னியாமீன்**
B.A. (Cey) Dip in Journ (Ind) S.L.T.S.

முதலாம் பதிப்பு : 2000. 11. 11

பதிப்புரிமை:
**MRS. MAZEEDA PUNIYAMEEN**
**14, Udatalawinna Madige,Udatalawinna - 20802**
**Tel : 070 - 800480/ 08 - 497246/**
**078 - 680645 / 08 - 493746**
**Fex : 0094 - 8- 497246**
**E-mail : chinthanai _ vatt@hotmail .com**
**9 to 9 com @ slt net. lk**

கணனிப் பதிவு :
Miss Z. Munawwara Nawaz
**Udatalawinna Communication**
**14, Udatalawinna Madige,**
**Udatalawinna - 20802**

அச்சுப் பதிவு :
C.G.M. Express Print Shop
**127, Madawala Road, Katugastota.**
**Tel : 08 - 497339.**

புத்தக அமைப்பு
: என். எல். எஸ். ஸலாஹுத்தீன்
: செல்வி ஜே. ஜெஸீமா
உடத்தலவின்னை கொம்யுனிகேஷன்

# Rs 120/ =



# வெளிநாடுகளில் வாழும் இலங்கையருக்கான

## விசேட பதிப்பு

***விலை:***
இந்தியா : இந்தியன்ரூபா 100
பிரான்ஸ் : பிரெங்க் 30
ஐக்கிய இராச்சியம் : ஸ்ரேலிங்பவுண் 02
ஐக்கிய அமெரிக்கா : 03 டொலர்
குவைட் : 01 தினார்
சவூதிஅரேபியா : 12 சவூதி ரியால்
கட்டார் : 10 கட்டார் ரியால்
ஐக்கிய அரபு எமிரேட்ஸ் : திர்ஹம் -10
ஓமான் : ஓமான் ரியால் 01
பஹ்ரேன் : பஹ்ரேன் தினார் 01
ஜெர்மன் : 120 மார்க்
ஜப்பான் : 350 யென்

# இப்புத்தகம்

இலங்கையின் அரசியலைத் தெரிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கும்.

**B.A**
**G.A.Q.**
**G.C.E. (A/L)**

அரசறிவியல் மாணவர்களுக்கும் ஏற்புடையது.

## விசேட நன்றி

செல்வி R.B.M. மஹ்ரூப்.
செல்வி M.J.S. சரீனா.

மத்தியமாகாண சபையின் விவசாய, கமநலசேவை உணவு, கூட்டுறவு, மீன்பிடி (நன்நீர்) இளைஞர் விவகார, முஸ்லிம்கல்வி, முஸ்லிம் கலாசார அமைச்சு. பேராதனை.



## நூலாசிரியர்

# புன்னியாமீன்

அவர்களின் நூல்களைப் பெற்றுக்கொள்ளவும்,

## சிந்தனை வட்ட

வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளவும்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

P.M. PUNIYAMEEN,
14, Udatalawinna Madige,
Udatalawinna- 20802
Sri lanka.

Tel : 0094 - 8- 497246 / 493746
0094 -70- 800480
0094 - 78 - 680645
Fax : 0094 - 8 - 497246
E- mail : 9 to 5 com @ slt net. lk

**அகில இலங்கை விநியோகஸ்தர்கள்**

Poobalasingham Book Depot,
340, Sea Street,
Colombo - 11 Srilanka. Tel : 0094 - 1 422231

# பரபரப்பாக விற்பனையாகின்றது.

## 21 ம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்

99 சனாதிபதித் தேர்தல் ஒரு மதிப்பீடு

120 /

பிரதிகள் தேவையானோர்
மணியோடர் / டிராப்ட் / காசோலை
அனுப்ப வேண்டிய முகவரி

P.M. PUNIYAMEEN,
14, Udatalawinna Madige,
Udatalawinna- 20802
Sri lanka.

Tel : 0094 - 8- 497246 / 493746
0094 -70- 800480
0094 - 78 - 680645
Fax : 0094 - 8 - 497246
E-mail:9to9com @ sltnet.lk

வங்கி கணக்கு இலக்கம் : 01 - 0235792 - 01
Commercial Bank- Kandy




# 2000

## பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் சிறுபான்மை சமூகத்தினரும்.

### நூன்முகம்.

11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. 1977ம் ஆண்டு முதல் 1994 -ம் ஆண்டு வரை 17 ஆண்டு கால ஐக்கிய தேசியக் கட்சியின் பாலன யுகம் முடிந்துவிட்டபிற்பாடு 1994 - ம் ஆண்டு முதல் பொதுசன ஐக்கிய முன்னணியின் பாலன யுகம் ஒன்று ஆரம்பமாகி விட்டதை உறுதிப்படுத்துவதைப் போல 11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன. 1994 -ம் ஆண்டில் 105 ஆசனங்களை வென்றெடுத்த பொதுசன ஐக்கிய முன்னணி : ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், திரு சந்திரசேகரன் தலைமையிலான சுயேற்சை அணி என்பனவற்றுடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்தது. நிறைவேற்று அதிகாரமிக்க சானாதிபதி திருமதி சந்திரிக்கா குமாரதுங்க அவர்களின் அதிகார பலத்தினால் ஆறு ஆண்டுகள் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிலைத்திருந்தது. கடந்த பொதுத்தேர்தல் மூலமாக அடுத்து வரும் ஆறு ஆண்டுகளுக்கும் மக்கள் அவ்வதிகாரத்தை பொதுசன ஐக்கிய முன்னணிக்கே வழங்கியுள்ளனர். இந்த 2000 ஆண்டு பொதுத்தேர்தலில் 107 ஆசனங்களை வென்றெடுத்த பொதுசன ஐக்கிய முன்னணி தனது அரசாங்க பலமான 113 ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய ஐக்கிய முன்னணி (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்), ஈழமக்கள் ஜனநாயக முன்னணி (EPDP) ஆகிய சிறுபான்மை கட்சிகளின் ஒத்துழைப்புடன் மீண்டும் அரசாங்கத்தை அமைத்துள்ளது.

தேர்தல் பிரசாரகாலங்களில் சில பேரினவாதக்கட்சிகளும், இனவாதக்கட்சிகளும் சிறுபான்மையினரைப் புண்படுத்தும் வகையிலே தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன. இவை இலங்கையின் சிங்கள பௌத்தப் பேரினவாதத்தை நிலைநிறுத்தவே அங்கீகாரம் கோரி நின்றன.

தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும்.

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.
சிறுபான்மைப் பிரதிநிதிகள் அரசர்களானார்கள்.
ஆனால் -
1994 -ம் ஆண்டு சூழ்நிலை வேறு.
2000- ம் ஆண்டு சூழ்நிலை வேறு.
1994 -ம் ஆண்டுத் தேர்தலில் தேர்தல் பிரசார காலங்களில் தலைதூக்கிய இனவாதப் பிரசாரப் போக்குகள் தேர்தல் முடிந்த பின்பு ஓய்ந்தன.

ஆனால் ...

2000- ம் ஆண்டுத் தேர்தலின் பின்பு அப்பிரசார நடவடிக்கைகள் வேறுவடிவம் பெற்றுத் தொடர்கின்றன.
சாதாரண காலங்களில் உரிமைகளுக்கு சாவு மணியடித்துவிட்டு தேர்தல் காலங்களில் மட்டும் சொப்பன உலகைக் காட்டும் மூன்றாம் உலக ஜனநாயகத்திற்கு எமது இலங்கையும் விதிவிலக்கல்ல.

பேரினவாதிகளின் கனவுக்கோட்டைகளை மட்டும் மையப்படுத்தாமல், சிறுபான்மையினரது ஏக்கத்தவிப்புக்களையும் சிந்திக்க வேண்டிய சக்தியை பேரினவாதப் பின்னணிகள் எப்போது பெற்றுக்கொள்ளப் போகின்றன?

ஆம் -
11 வது பாராளுமன்றத் தேர்தலும் ஆராயப்பட வேண்டியதே.

## 10வது பாராளுமன்றம் கலைக்கப்படல்

சுதந்திர இலங்கையின் 10வது பாராளுமன்றமானது இலங்கையின் நிறைவேற்று சனாதிபதி மேதகு சந்திரிக்கா குமாரதுங்க அவர்களினால் 2000 - 08 - 18 -ம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. 1994- 08 - 16 -ம் திகதி நடைபெற்ற 10 -வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 105 ஆசனங்களை வென்றெடுத்து சிறுபான்மைக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் (1994 - 08 -24 -ம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டேயில் அமைந்துள்ள இலங்கைப் பாராளுமன்றக் கட்டிடத்தில்) பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பதவிக்காலம், அரசியல் அமைப்பின் (62 ம் உறுப்புரையின் 2 -ம் உப பந்தியின்) பிரகாரம் 2000 - 08 - 24 ம் திகதி நள்ளிரவுடன் முடிவடையும். அரசியல் அமைப்பின் 70 -ம் உறுப்புரை 1 - ம் உப பந்தியின் படி பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தினைக் குடியரசின் சனாதிபதி பெற்றுள்ளார். எனவே பதவிக்காலம் முடிவதற்கு ஏழுதினங்களுக்கு முன்பாக சனாதிபதி 10-வது பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

## தேர்தல் மாவட்டங்களை வரையறை செய்தல்.

அரசியல் அமைப்பின் 96 -ம் உறுப்புரை 1 -ம் உப பிரிவு பின்வருமாறு கூறுகின்றது ''ஜனாதிபதியால் அமைக்கப்படும் தேர்தல் வரையறை ஆணைக்குழு இலங்கையை 20க்குக் குறையாததும், 24க்கு மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களதாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும்."

1978 - 11 - 29 -ம் திகதி திரு ஜி. பி. ஏ. சில்வா தலைமையில் சனாதிபதி மேதகு ஜே. ஆர். ஜயவர்தனா அவர்களினால் தேர்தல் தொகுதி வரையறை ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவின் அறிக்கை 1981 தேர்தல் தொகுதி வரையறை ஆணைக்குழு அறிக்கை எனப்படுகிறது. இவ்வறிக்கையின் படி (26 ம் பக்கம்) இலங்கை 22 தேர்தல் மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டது.அன்று வரையறை செய்யப்பட்ட 22 தேர்தல் மாவட்டங்களுமே இன்று வரை தேர்தல் மாவட்டங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. 11 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலும் இலங்கையில் வரையறை செய்யப்பட்டிருந்த தேர்தல் மாவட்டங்களாவன.

**மேல்மாகாணம்**
இல 01 - கொழும்பு தேர்தல் மாவட்டம்.
இல 02 - கம்பஹா தேர்தல் மாவட்டம்.
இல 03 - களுத்துறை தேர்தல் மாவட்டம்.

**மத்திய மாகாணம்**
இல 04 - கண்டி தேர்தல் மாவட்டம்.
இல 05 - மாத்தளை தேர்தல் மாவட்டம்.
இல 06 - நுவரெலியா தேர்தல் மாவட்டம்.

**தென் மாகாணம்**
இல 07 - காலி தேர்தல் மாவட்டம்.
இல 08 - மாத்தறை தேர்தல் மாவட்டம்.
இல 09 - ஹம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டம்.

**வட மாகாணம்**
இல 10 - யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.
இல 11 - வன்னி தேர்தல் மாவட்டம்.




இலங்கையில் தேர்தல் மாவட்டங்கள்.

கிழக்கு மாகாணம்
இல - 12 மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்.
இல - 13 திகாமடுல்லை தேர்தல் மாவட்டம்.
இல - 14 திருகோணமலை தேர்தல் மாவட்டம்.

வடமேல் மாகாணம்
இல 15 - குருநாகலை தேர்தல் மாவட்டம்.
இல 16 - புத்தளம் தேர்தல் மாவட்டம்.

வட. மத்திய மாகாணம்
இல 17 - அனுராதபுர தேர்தல் மாவட்டம்.
இல 18 - பொலநறுவை தேர்தல் மாவட்டம்.

ஊவா மாகாணம்
இல 19 - பதுளை தேர்தல் மாவட்டம்.
இல 20 - மொனராகலை தேர்தல் மாவட்டம்.

சப்ரகமுவ மாகாணம்
இல 21 - இரத்தினபுரி தேர்தல் மாவட்டம்.
இல 22 - கேகாலை தேர்தல் மாவட்டம்.

## பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்.

அரசியலமைப்பின் 62 -ம் உறுப்புரை 1-ம் உப பிரிவின் படி இலங்கைப்பாராளுமன்றத்தின் மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அமைக்கப்பட்ட பல்வேறு தேர்தல் மாவட்டங்களின் தேருநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 196 உறுப்பினர்களைப் பாராளுமன்றம் கொண்டிருக்க வேண்டும்.

1988-ம் ஆண்டில் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 14 -ம் திருத்தத்திற்கமைய பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 225 ஆக அதிகரிக்கப்பட்டன. இந்த 225 பிரதிநிதிகளும் பின்வரும் ஒழுங்கில் தெரிவுசெய்யப்படுவர்.

1, இலங்கையின் முழுவாக்காளர் தொகையும் கருத்திற் கொள்ளப்பட்டு 160 பிரதிநிதிகள் மாவட்டரீதியில் தெரிவுசெய்யப்படுவர்.

2, ஒரு மாகாணத்திற்கு 4 என்ற வீதம் 9 மாகாணங்களுக்கும் 36 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர்.
(இந்த 196 பிரதிநிதிகளும் (160 + 36 )இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களினால் மாவட்டரீதியாக நேரடியாகத் தெரிவுசெய்யப்படுவர்)

3, மீதான 29 உறுப்பினர்களும் தேசியபட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

## சுதந்திர இலங்கையின் 11 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கு நியமனப் பத்திரங்களைக் கோரல்.

இலங்கையின்11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்காக வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2000 ஆகஸ்ட் 28 ம் திகதிமுதல் 2000 செப்டம்பர் 04 ம் திகதி நண்பகல் 12 மணிவரை என தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது. மேலும் நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் தெரிவத்தாட்சி அதிகாரிகள் வேட்புமனுக்களை கடமை நேரத்தில் ஏற்றுக்கொள்வார்கள் எனவும் செப்டம்பர் 04 -ம் திகதி பிற்பகல் 1.30 மணிக்குப் பின்னரே வேட்பாளர்களுக்கான இலக்கங்களும், சுயேட்சைக்குழுக்களுக்கான சின்னங்களும் ஒதுக்கப்படுமெனவும், இத்தினத்தன்று நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம் எனவும் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்கையில் குறித்த தேர்தல் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையுடன் மூன்றைக் கூட்டி வரும் தொகைக்கிணங்க பட்டியல் தயாரித்து அப்பட்டியலையே தாக்கல் செய்தல் வேண்டும்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதித்தினமான 4ஆம் திகதிக்குள் 22 தேர்தல் மாவட்டங்களுக்கும் 29 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 99 சுயேட்சைக் குழுக்களும் நியமனப்பத்திரத்தை தாக்கல்செய்தன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகள் 318 வேட்புமனுக்களையும், 99 சுயேட்சைக் குழுக்கள் 99 வேட்புமனுக்களையும் தாக்கல் செய்தன. இதன்படி 417 வேட்புமனுக்களை தேர்தல் திணைக்களம் ஏற்றுக்கொண்டது.

அரசியல் கட்சி உட்பட சுயேற்சைக் குழுக்களின் மொத்த வேட்பாளர்கள் எண்ணிக்கை 5048 ஆகும். இதில் 3883 வேட்பாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிமூலமாகவும், எஞ்சிய 1165 வேட்பாளர்களும் சுயேட்சைக் குழுக்கள் மூலமாகவும் போட்டியிட்டனர்.

## 11 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாவன.

2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட 29 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களும், அக்கட்சிகளைக் குறிக்கும் ஆங்கில சுருக்க எழுத்துக்களும் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து இடம்பெறும் தேர்தல் முடிவுகளில் ஆங்கில சுருக்கக் குறியீடு மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

| | |
|---|---|
| பொதுசன ஐக்கிய முன்னணி | (P.A) |
| ஐக்கிய தேசியக் கட்சி | (U.N.P) |
| மக்கள் விடுதலை முன்னணி | (J.V.P) |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | (E.P.D.P) |
| ஐக்கிய லலித் முன்னணி | (N.L.F) |
| ஐக்கிய சிங்கள மகாசபை | (E.S.M.S) |
| தேசிய தொழிலாளர் சங்கம் | (N.W.C) |
| மக்கள் விடுதலை ஒற்றுமை முன்னணி | (P.F.F.) |
| தேசிய மக்கள் கட்சி | (N.P.P) |
| தேசிய ஐக்கிய முன்னணி | (N.U.A) |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | (U.L.F) |
| தமிழீழ விடுதலை இயக்கம் | (T.E.L.O) |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | (T.U.L.F) |
| புதிய இடதுசாரி முன்னணி | (N.L.F) |
| பிரசைகள் முன்னணி | (P.P.) |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | (D.U.N.F) |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி | (S.L.M.K) |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | (D.P.L.F) |
| இடதுசாரி ஜனநாயக முன்னணி | (L.D.A) |
| பஹுஜன நிதஹஸ் பெரமுனை | (B.N.P) |
| முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி | (M.U.L.F) |
| ருஹுணு மக்கள் கட்சி | (R.J.P) |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | (C.W.C) |
| லிபரல் கட்சி | (L.P) |
| ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | (S.L.P.F) |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | (A.C.T.C) |
| சோஷலிஸ சமத்துவக் கட்சி | (J.S.P) |
| சிஹல உருமய | (S.U) |
| சிங்கள மகா சம்மத பூமி புத்திர கட்சி | (S.M.B.P) |

22 தேர்தல் தொகுதிகளிலும் முன்குறிப்பிட்ட கட்சிகளுள் 04 அரசியல் கட்சிகள் போட்டியிட்டன. அவையாவன ஐக்கியதேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, பிரஜைகள் முன்னணி, சிஹல உருமய என்பனவாகும்.

பொதுசன ஐக்கிய முன்னணி யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய 21 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்டது.

ஆகக் கூடுதலான சுயேட்சைக்குழுக்கள் நுவரெலியா தேர்தல் மாவட்டத்திலே போட்டியிட்டன. இங்கு 09 சுயேட்சைக்குழுக்கள் தேர்தல் களத்தில் குதித்தமை குறிப்பிடத்தக்கது.

இல 01 - கொழும்பு தேர்தல் மாவட்டத்திலே அதிக எண்ணிக்கையான அரசியல் கட்சிகளும், சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. இத்தேர்தல் மாவட்டத்தில் 20 அரசியல் கட்சிகளும், 05 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டமை இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரு வரலாற்றுப் பதிவாகும். இம்மாவட்டத்தில் 575 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில்; மிலேனியத்தில் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றப்பொதுத் தேர்தல் பல வழிகளிலும் வரலாற்றுப் பதிவுகளை ஏற்படுத்தத்தக்கதாகவே காணப்பட்டது. 11ம் பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் போட்டி விபரங்களை கீழே சுருக்கமாகத் தொகுத்துள்ளேன்.

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 12,071,062 |
| தபால் வாக்குகள் | 253,193 |
| போட்டியிட்ட அரசியல் கட்சிகள் | 29 |
| அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை | 3883 |
| சுயேற்சைக் குழுக்கள் | 99 |
| சுயேட்சைக்குழுக்களின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை | 1165 |



| | |
|---|---|
| 11 வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில்போட்டியிட்ட மொத்த வேட்பாளர் தொகை | 5,048 |
| தெரிவாகும் பாராளுமன்ற உறுப்பினர்கள் | 196 |
| தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் | 29 |
| வாக்குச் சாவடிகள் | 9,946 |
| வாக்கு எண்ணும் நிலையங்கள் | 810 |

இலங்கை பலகட்சிமுறை நிலவும் ஒரு நாடாகும். மொத்தமாக 46 அரசியல்கட்சிகள் தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பிரதானமாகக் கொண்டுள்ள பொதுசன ஐக்கிய முன்னணியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் சுற்றியே வாக்காளர்கள் திரள்வதினால் இருகட்சிமுறைப் போக்கினைத் தான் பெரும்பாலும் பிரதிபலித்து வருவதைக் காணமுடிகின்றது.

## தேசிய பட்டியல் தாக்கல் செய்தல்.

நியமனப்பத்திரம் தாக்கல் செய்த நேரத்தில்; இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளான பொதுசன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தாக்கல் செய்த தேசிய பட்டியல் பின்வருமாறு.

### *பொதுசன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல்.*

லக்ஷ்மன்கதிர்காமர்.
அலவி மௌலானா.
ரொனி டி மெல்.
விஜயபாலமெண்டிஸ்.
பட்டிவீரக்கோன்.
மொஹமட் ஹனிபா.
லெஸ்லி குணவர்தன.
ராஜகொள்ளுரே.
கே. மாரிதுத்து.
மேர்வின் சில்வா.
ரோஹன வீரசிங்க.
ஜெஸீமா இஸ்மாயில்.
பீ. ஓ. கிரிவெந்தனிய.
சோம வீரசந்திரசிறி.

ஜயம்பதிவிக்கிமரட்ண.
பீ. எம். பொடி அப்புஹாமி.
ஹரேந்திர கொராயா.
ரத்னசிறி ராஜபக்ஷ.
மனோரி முத்தட்டுவேகம.
ஆர் சின்னலெப்பை.
எஸ் கவிந்தென்ன.
வரதராஜப்பெருமாள்.
எம். பாவா.
ஏ. கந்தப்பா.
எஸ். எஸ் சஹபந்து.
ஆனந்த குணதிலக்க.
லெஸ்லி தேவேந்திர.
கமலா ரணதுங்க.
சீரத் கோங்கஹே

## ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல்

கே. என். சொக்ஸி
ஏ. எச். எம். அஸ்வர்.
ஆரியவங்ஸ திஸாநாயக்க.
ஏ. எம். டி. ராஜன்.
மலிந்தமொரகொட.
தஹம்விமலசேன.
தயாகோவின்ன.
எட்வர்ட் சில்வா.
எச். ஏ. விமலசூரிய.
ஹரல்ட் ஹேரத்.
ஹென்றி ஜயமஹா.
கே. கனகராஜா.
கே. வேலாயுதம்.
ஆனந்த கொடிக்கார.
சிறிமல் டி மெல்.
ஜயந்த சில்வா.
அப்துல் மஜீத்.
எம். எஸ். செல்லச்சாமி.
ஐ. எம். ஜுனைதீன்.
யசேந்திர பக்மீவெவ
பி. பி. தேவராஜ
பி. பாலசுப்பரமணியம்.



லக்ஷ்மன் ரணசிங்க.
ரவீந்ர ரந்தெனிய.
ஜயபிரிய சில்வா.
சிறிநாத் குமாரசிங்க.
திலக்மாரப்பன
ரி. எம் அப்பாஸ்
எம். அத்தநாயக்கா.

# ஒரே பார்வையில்

# 11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள்.

11 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 2000 - 10 - 10- ம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நாடுபூரா அமைந்திருந்த 9,946 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்றன.

**விகிதாசார தேர்தல் முறைக்கமைய இலங்கையில் நடைபெற்ற மூன்றாவது தேர்தல் இதுவாகும்.** 1989 -ம் ஆண்டில் விகிதாசார தேர்தல் முறைக்கமைய முதலாவது தேர்தல் நடைபெற்றது. இரண்டாவது தேர்தல் 1994 -ம் ஆண்டில் நடைபெற்றது.

இதுவரை விகிதாசார முறைக்கமைய நடைபெற்ற மூன்று தேர்தல் முடிவுகளும் (தேர்தல் மாவட்டரீதியாக) தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000

## இல 1 கொழும்பு தேர்தல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள் | : | 20 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | : | 1,385,547 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | : | 1,053,644 (76.05%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | : | 39,424 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 1,014,220 |



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்






| Political party/ independent group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| UNP | 440,684 | 43.45% | 10 |
| PA | 394,146 | 38.86% | 8 |
| JVP | 78,133 | 7.70% | 2 |
| SU | 49,671 | 4.90% | 0 |
| NUA | 27,067 | 2.67% | 0 |
| ACTC | 5,238 | 0.52% | 0 |
| CWC | 4,588 | 0.45% | 0 |
| NLF | 3,877 | 0.38% | 0 |
| PP | 2,879 | 0.28% | 0 |
| NPP | 1,400 | 0.14% | 0 |
| MULF | 1,321 | 0.13% | 0 |
| SMBP | 1,228 | 0.12% | 0 |
| Ind 3 | 808 | 0.08% | 0 |
| ULF | 684 | 0.07% | 0 |
| LP | 497 | 0.05% | 0 |
| SEP | 389 | 0.04% | 0 |
| Ind 2 | 357 | 0.04% | 0 |
| DUNF | 355 | 0.04% | 0 |
| SLMK | 244 | 0.02% | 0 |
| Ind 5 | 179 | 0.02% | 0 |
| RJP | 143 | 0.01% | 0 |
| Ind 4 | 109 | 0.01% | 0 |
| SLPF | 90 | 0.01% | 0 |
| Ind 1 | 75 | 0.01% | 0 |
| PFF | 58 | 0.01% | 0 |
| | | | |
| Valid | 1,014,220 | 96.26% | |
| Rejected | 39,424 | 3.74% | |
| Polled | 1,053,644 | 76.05% | |
| Registered | 1,385,547 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொது சன ஐக்கிய முன்னணி | 4,69,642 (50.94%) | - |
| ஐக்கிய தேசியக்கட்சி | 3,85,100 (41.77%) | 3,74,530 (51.67%) |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 42,734 (4.63%) | 76,966 (10.62%) |
| ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி | 11,454 (1.24%) | - |
| சுயேட்சை | 9,251 (1.00%) | - |
| நவ சமசமாஜ கட்சி | 2,050 (0.22%) | - |
| தமிழ் ஈழ விடுதலை முன்னணி | 1,115 (0.12%) | - |
| ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் | 589 (0.6%) | - |
| ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி | - | 2,05,053 (28.29%) |
| ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - | 29,308 (4.04%) |
| ஐக்கிய சோஷலிச முன்னணி | - | 31,873 (4.4%) |
| ஐக்கிய இலங்கை ஜனநாயக கட்சி | - | 7,112 (0.98%) |

| | | |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 12,35,959 | 10,87,891 |
| செல்லுபடியானவை | 9,21,933 | 7,24,842 |
| நிராகரிக்கப்பட்டவை | 36,635 (3.82%) | 35,273 (4.64%) |
| அளிக்கப்பட்டவை | 9,58,568 (77.55%) | 7,60,115 (69.87%) |

பதினோராவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் 20 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 5 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. இலங்கைத் தேர்தல் வரலாற்றில் ஆகக்கூடுதலான அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் ஒரு தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் 469,642 (50.94%) வாக்குகளைப் பெற்று பொதுசன ஐக்கிய முன்னணியால் வெற்றியீட்ட முடிந்த போதிலும் கூட 2000ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 440,684 (43.45%) வாக்குகளைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியது. இங்கு பொதுசன ஐக்கிய முன்னணியால் 394,146 (38.86%) வாக்குகளையே பெற முடிந்தது. அதே நேரத்தில் 1994 பொதுத் தேர்தலில் நான்கு தொகுதிகளில் (கொழும்பு வடக்கு, பொரளை, கொழும்பு மத்தி, கொழும்பு மேற்கு) வெற்றியீட்டிய ஐக்கிய தேசியக் கட்சி 2000 பொதுத் தேர்தலில் 8 தொகுதிகளில் வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

1999 டிசம்பரில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி 474,310 (49.18%) வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 425,185 (44.08%) வாக்குகளையும், மக்கள் விடுதலை முன்னணி 44,009 (4.56%) வாக்குகளையும் பெற்றன.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ள 15 தேர்தல் தொகுதிகளிலும் பிரதான கட்சிகள் பெற்ற வாக்குகள் வருமாறு:



| இல | தொகுதி. | ஐக்கிய தேசியக் கட்சி | | பொதுசன ஐக்கிய முன்னணி. | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | கொழும்பு வடக்கு | 33,212 | 59.68 | 13,422 | 24.11 |
| 2 | கொழும்பு மேற்கு | 15,480 | 59.79 | 4,999 | 19.30 |
| 3 | கோட்டை. | 22,207 | 42.78 | 20,249 | 39.01 |
| 4 | கொழும்பு மத்தி | 57,578 | 55.41 | 20,414 | 19.64 |
| 5 | தெஹிவளை. | 19,646 | 46.65 | 14,382 | 34.15 |
| 6 | கொழும்பு கிழக்கு | 22,232 | 49.85 | 13,922 | 31.22 |
| 7 | பொரளை. | 19,588 | 48.81 | 14,025 | 34.94 |
| 8 | இரத்மலானை | 18,556 | 40.23 | 17,886 | 38.78 |
| 1 | மஹரகம. | 28,952 | 35.51 | 36,995 | 45.38 |
| 2 | கடுவெல. | 35,792 | 37.17 | 43,474 | 45.15 |
| 3 | கெஸ்பாவை. | 34,978 | 37.00 | 41,977 | 44.40 |
| 4 | கொலன்னாவை | 30.522 | 41.32 | 32,394 | 43.65 |
| 5 | ஹோமாகமை. | 33,930 | 38.43 | 41,330 | 46.81 |
| 6 | அவிஸ்ஸாவளை | 26.671 | 39.14 | 33,986 | 49.88 |
| 7 | மொரட்டுவை. | 35,570 | 42.07 | 36,883 | 43.62 |

1994ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியில் 11 பிரதிநிதிகளும் ஐக்கிய தேசியக் கட்சியில் 09 பிரதிநிதிகளும் தெரிவுசெய்யப்பட்டனர். 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வாக்காளரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வருமாறு.

## ஐக்கிய தேசியக் கட்சி – 10 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | ரணில் விக்கிரமசிங்க. | 363,668 |
| 2 | ரவி கருணாரத்ன. | 145,593 |
| 3 | முஹம்மட் மஹரூப். | 65,400 |
| 4 | கருணாசேன கொடித்துவக்கு. | 60,318 |
| 5 | காமினி லொக்குகே. | 58,009 |
| 6 | M.H. முஹம்மட் | 49,239 |
| 7 | லிலந்த பெரேரா. | 48,849 |
| 8 | டிரோன் பெர்னாண்டோ. | 41,439 |
| 9 | ஜயந்த பெரேரா கெடகொட. | 39,241 |
| 10 | சம்சன் சில்வா. | 38,894. |

பொதுசன ஐக்கிய முன்னணி– 08 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | G.L. பீரிஸ் | 139,123 |
| 2 | தினேஷ் குணவர்தன. | 114,795 |
| 3 | A.H.M. பௌசி. | 100,200 |
| 4 | ஜீவன் குமாரதுங்க. | 88,620 |
| 5 | பந்துல குணவர்தன. | 70,537 |
| 6 | இந்திக குணவர்தன. | 70,341 |
| 7 | பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர. | 62,237 |
| 8 | சந்தன கத்திரிஆரச்சி. | 61,301 |

மக்கள் விடுதலை முன்னணி(J.V.P.)– 02 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | விமல் வீரவங்ச | 13,284 |
| 2 | நிமல் உபதிஸ்ஸ. | 5,714 |






# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
# இல 2 கம்பஹா தேர்தல் மாவட்டம்

தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 18
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் : 1,253,416
அளிக்கப்பட்ட வாக்குகள் : 999,099 (79.71%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் : 37,390
செல்லுபடியான வாக்குகள் : 961,709



## கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்



| Political party/ Independent group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 470,018 | 48.87% | 10 |
| UNP | 378,328 | 39.33% | 7 |
| JVP | 73,110 | 7.60% | 1 |
| SU | 20,297 | 2.11% | 0 |
| NUA | 11,013 | 1.14% | 0 |
| NLF | 3,502 | 0.36% | 0 |
| SMBP | 1,463 | 0.15% | 0 |
| ULF | 1,093 | 0.11% | 0 |
| PP | 774 | 0.08% | 0 |
| DUNF | 473 | 0.04% | 0 |
| Ind. 1 | 270 | 0.02% | 0 |
| Ind. 3 | 265 | 0.02% | 0 |
| IND. 5 | 233 | 0.02% | 0 |
| LP | 232 | 0.02% | 0 |
| IND. 4 | 177 | 0.01% | 0 |
| SLPF | 149 | 0.01% | 0 |
| Ind. 2 | 137 | 0.01% | 0 |
| PFF | 99 | 0.01% | 0 |
| RJP | 76 | 0.00% | 0 |
| Total valid votes | 961,709 | 96.25% | 18 |
| Rejected votes | 37,390 | 8.74% | |
| Total polled | 999,099 | 79.71 | |
| Registered No. of electors | 1,253,416 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொதுசன ஐக்கிய முன்னணி | 5,09,030(56.79%) | - |
| ஐக்கிய தேசியக்கட்சி | 3,75,631(41.91%) | 3,85,733 (54.14%) |
| ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 11,627(1.30%) | - |
| ஐக்கிய இலங்கை ஜனநாயகக்கட்சி | - | 10,549 (1.48%) |
| ஐக்கிய சோசலிச முன்னணி | - | 21,665 (3.04%) |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | - | 2,94,490 (41.34%) |
| பதியப்பட்ட வாக்குகள் | 11,40,808 | 9,69,638 |
| செல்லுபடியானவை | 8,96,288 | 7,12,437 |
| நிராகரிக்கப்பட்டவை | 33,553 (3.60%) | 32,497 (4.36%) |
| அளிக்கப்பட்டவை | 9,29,841 (81.5%) | 7,44,934 (76.82%) |



# கம்பஹா தேர்தல் மாவட்டம்.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 5 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. 1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 509,030 (56.79%) வாக்குகளையும், 1999 சனாதிபதித் தேர்தலில் 532,796 (56.58%) வாக்குகளையும், 2000 பொதுத் தேர்தலில் 470,018 (48.87%) - வாக்குகளையும் பெற்று கம்பஹா தேர்தல் மாவட்டத்தைத் தொடர்ந்தும் பொதுசன ஐக்கிய முன்னணியே வெற்wpaFldி வந்துள்ளது. அதே நேரத்தில் 1994,1999 தேர்தல்களில் கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ள 13 தேர்தல் தொகுதிகளிலும் பொதுசன ஐக்கிய முன்னணியே வெற்றியீட்டியது. இருப்பினும் இத்தேர்தலில் நீர்கொழும்பு,வத்தளை இரண்டு தேர்தல் தொகுதிகளிலும் பொதுசன ஐக்கிய முன்னணி தோல்வியைத் தழுவியுள்ள நிலையில் ஒப்பீட்டளவில் நோக்கும் போது முன்னைய இரண்டு தேர்தல்களைவிட இத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியின் கோட்டை எனக் கருதிவந்த கம்பஹா மாவட்டத்தில் ஒரு சரிவு நிலை ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் பிரதான கட்சிகள் பெற்ற வாக்குகள் வருமாறு:

| இல | தொகுதி. | பொதுசன ஐக்கிய முன்னணி. | | ஐக்கிய தேசியக் கட்சி | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | மினுவாங்கொட | 38,350 | 49.61 | 30,025 | 38.84 |
| 2 | ஜா-எல | 38,150 | 47.54 | 33,089 | 41.23 |
| 3 | மஹர | 40,884 | 50.17 | 30,031 | 36.85 |
| 4 | தொம்பே | 35,897 | 53.28 | 25,053 | 37.18 |
| 5 | கட்டானை | 42,316 | 53.66 | 30,157 | 38.24 |
| 6 | திவுலபிட்டிய | 32,294 | 46.12 | 28,894 | 43.95 |
| 7 | கம்பஹா. | 45,394 | 53.55 | 27,794 | 32.78 |
| 8 | பியகம | 30,828 | 45.40 | 27,052 | 39.84 |
| 9 | களனி | 24,734 | 42.85 | 24,045 | 41.66 |
| 10 | மீரிகம | 33,116 | 45.73 | 30,025 | 41.46 |
| 11 | அத்தனகலை | 42,537 | 54.81 | 23,248 | 29.95 |
| 1 | வத்தளை | 29,015 | 42.79 | 32,570 | 48.03 |
| 2 | நீர்கொழும்பு | 24,826 | 41.04 | 28,983 | 47.92 |

1994ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியில் 11 பிரதிநிதிகளும் ஐக்கிய தேசியக் கட்சியில் 07 பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர். அத் தேர்தலில் சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் 464,588 விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். இலங்கையின் பாராளுமன்ற தேர்தல் வரலாற்றில் சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளே இன்னும் சாதனையாக இருந்து வருகின்றது. 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வாக்காளரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வருமாறு.

## பொதுசன ஐக்கிய முன்னணி– 10 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | சுசில் பிரேம் ஜயந்த. | 165.905 |
| 2 | ஜயராஜ் பொ்னாண்டோ புள்ளே. | 138,852 |
| 3 | பீலிக்ஸ் பெரேரா. | 96,222 |
| 4 | பண்டுகாபய டயஸ் பண்டாரநாயக்கா. | 92,182 |
| 5 | ரெஜி ரணதுங்க. | 79,510 |
| 6 | சரத் கீர்த்தி ரத்ண. | 77,420 |
| 7 | லயனல் குணவர்தனா. | 59,775 |
| 8 | சரத்சந்திர பெரமுனகமகே. | 52,410 |
| 9 | நீல ரூபசிங்க. | 55,500 |
| 10 | ஆனந்த முனசிங்க. | 48,803 |

## ஐக்கிய தேசியக் கட்சி – 07 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | கரு ஜயசூரிய | 237,381 |
| 2 | அனுர பண்டாரநாயக்கா. | 99,530 |
| 3 | ஜயலத் ஜயவர்தனா. | 82,130 |
| 4 | ஜோன் அமரதுங்க. | 67,104 |
| 5 | எட்வர்ட் குணசேகர. | 65,157 |
| 6 | ஜோசப் மைக்கல் பெரேரா. | 59,646 |
| 7 | ராஜபக்ச சுரனிமல. | 49,697 |

## மக்கள் விடுதலை முன்னணி(J.V.P.)– 01 பிரதிநிதி.

| | | |
|---|---|---|
| 1 | H.M. விஜித ஹேரத் | 8,823 |

மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாபா A.R. அன்ஜான் உம்மா கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு 3,008 விருப்பு வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்திற்கு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் பாராளுமன்றத்திற்குத் தெரிவான முதல் முஸ்லிம் பெண் இவராவார்.



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 3 களுத்துறை தேர்தல் மாவட்டம்

தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 10
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் : 697,656
அளிக்கப்பட்ட வாக்குகள் : 570,250 (81.73%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் : 25,732
செல்லுபடியான வாக்குகள் : 5,44,518



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்



| Political party/ Independent Group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 255,175 | 46.86% | 5 |
| UNP | 217,215 | 39.89% | 4 |
| JVP | 38,373 | 7.04% | 1 |
| SU | 15,619 | 2.85% | 0 |
| NUA | 11,943 | 2.19% | 0 |
| NLF | 2,934 | 0.53% | 0 |
| PP | 642 | 0.11% | 0 |
| SMBP | 637 | 0.11 | 0 |
| Ind 4 | 400 | 0.07% | 0 |
| DUNF | 292 | 0.05% | 0 |
| LDA | 255 | 0.04% | 0 |
| Ind 5 | 196 | 0.03% | 0 |
| Ind 1 | 171 | 0.03% | 0 |
| SLMK | 168 | 0.03% | 0 |
| Ind 3 | 123 | 0.02% | 0 |
| Ind 2 | 118 | 0.02% | 0 |
| JSP | 113 | 0.02% | 0 |
| SLPF | 65 | 0.01% | 0 |
| PFF | 41 | 0.00% | 0 |
| RJP | 38 | 0.00% | 0 |
| Total valid votes | 544,518 | 85.46% | 10 |
| Rejected votes | 25,732 | 4.5% | - |
| Total polled | 570,250 | 81.73% | - |
| Registered | 697,656 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொதுசன ஐ.முன்னணி | 2,71,754 (53.77%) | - |
| ஐக்கிய தே.கட்சி | 2,21,115 (43.75%) | 1,60,069 (49.84%) |
| ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 6.238 (1.24%) | - |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 5.914 (1.17%) | 2,690 (0.84%) |
| பகுஜன நிதஹஸ் பக்ஷய | 339 (0.07%) | - |
| ஐக்கிய இலங்கை ஜ.க | - | 1,611 (0.50%) |
| ஐக்கிய சோசலிச முன்னணி | - | 12,342 (3.84%) |
| ஸ்ரீ.சுதந்திரக்கட்சி | - | 1,31,510 (40.94%) |
| ஸ்ரீ.மு.காங்கிரஸ் | - | 12,971 (4.04%) |
| பதியப்பட்ட வாக்குகள் | 6,46,199 | 5,70,193 |
| செல்லுபடியானவை | 5,05,360 | 3,21,193 |
| நிராகரிக்கப்பட்டவை | 26,397(4.79%) | 20,139 (5.20%) |
| அளிக்கப்பட்டவை | 5,30,757 (82.13%) | 3,41,332 (59.86%) |



# களுத்துறை தேர்தல் மாவட்டம்.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் களுத்துறை தேர்தல் மாவட்டத்தில் 15 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 5 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. 1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 271,754 (53.77%) வாக்குகளையும், 1999 சனாதிபதித் தேர்தலில் 281,217 (52.88%) வாக்குகளையும், 2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 255,175 (46.86%) வாக்குகளையும் பெற்று பொதுசன ஐக்கிய முன்னணியே வெற்றியீட்டி வந்துள்ளது. அதே நேரத்தில் மேற்குறிப்பிட்ட 3 தேர்தல்களிலும் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள 8 தொகுதிகளிலும் பொதுசன ஐக்கிய முன்னணியே வெற்றியீட்டியுள்ளது.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் களுத்துறை தேர்தல் மாவட்டத்தில் பிரதான கட்சிகள் பெற்ற வாக்குகள் வருமாறு:

| இல | தொகுதி. | பொதுசன ஐக்கிய முன்னணி. | | ஐக்கிய தேசியக் கட்சி | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | பாணதுறை | 30,848 | 43.07 | 25,994 | 36.29 |
| 2 | பண்டாரகமை | 35,860 | 48.47 | 27,434 | 37.08 |
| 3 | ஹொரணை | 36,659 | 52.18 | 27,259 | 38.80 |
| 4 | புலத்சிங்கள | 24,308 | 47.86 | 22,812 | 44.92 |
| 5 | மத்துகமை | 29,968 | 47.37 | 25,518 | 40.34 |
| 6 | பேருவளை | 30,179 | 43.40 | 29,392 | 42.27 |
| 7 | களுத்துறை | 31,469 | 45.49 | 26,641 | 38.51 |
| 8 | அகலவத்தை | 28,531 | 45.84 | 27,665 | 44.45 |

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வாக்காளரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வருமாறு:

## பொதுசன ஐக்கிய முன்னணி– 05 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | ரத்ணசிரி விக்ரமநாயக்க. | 148,705 |
| 2 | ரெஜினோல்ட் குரே. | 67,945 |
| 3 | டியுடர் தயாரத்ன. | 63.636 |
| 4 | குமார வெல்கம. | 60.394 |
| 5 | எதிரிவீர பிரேமரத்ன. | 53,690 |

### ஐக்கிய தேசியக் கட்சி – 04 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | மஹிந்த சமரசிங்க. | 82,511 |
| 2 | இம்தியாஸ் பாக்கீர் மாக்கார். | 74,555 |
| 3 | ராஜித சேனாரத்ன. | 73,382 |
| 4 | அபேரத்ன பதிரகே. | 47,271 |

### மக்கள் விடுதலை முன்னணி(J.V.P.)– 01 பிரதிநிதி.

| | | |
|---|---|---|
| 1 | M.D. நந்தன குணதிலக்க | 6,402 |

1994 பாரளுமன்றப் பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி 6 பிரதிநிதிகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 4 பிரதிநிதிகளையும் பெற்றமை குறிப்பித்தக்கதாகும்.






## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 4 கண்டி தேர்தல் மாவட்டம்

தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 12
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் : 812,478
அளிக்கப்பட்ட வாக்குகள் : 646,676 (79.59%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் : 41,748
செல்லுபடியான வாக்குகள் : 604,928



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்



| Political party/ Independent Group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 282,282 | 46.66% | 6 |
| UNP | 243,623 | 40.27% | 5 |
| NUA | 32,023 | 5.29% | 1 |
| JVP | 21,565 | 3.56% | 0 |
| SU | 10,999 | 1.81% | 0 |
| CWC | 6,108 | 1.00% | 0 |
| NLF | 2,820 | 0.46% | 0 |
| PP | 1,304 | 0.21% | 0 |
| NUW | 1,066 | 0.17% | 0 |
| ESMS | 757 | 0.12% | 0 |
| SMBP | 708 | 0.11% | 0 |
| DUNF | 323 | 0.05% | 0 |
| LP | 301 | 0.04% | 0 |
| Ind 2 | 264 | 0.04% | 0 |
| Ind 4 | 179 | 0.02% | 0 |
| SLMK | 161 | 0.02% | 0 |
| Ind 5 | 123 | 0.02% | 0 |
| Ind 1 | 103 | 0.01% | 0 |
| RJF | 78 | 0.01% | 0 |
| JSF | 76 | 0.01% | 0 |
| Inc 3 | 65 | 0.01% | 0 |
| Total valid | 604,928 | 93.54% | 12 |
| Rejected | 41,748 | 6.45% | |
| Total polled | 646,676 | 79.59% | |
| Registered | 812,478 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| ஐக்கிய தேசியகட்சி | 3,01,824(52.35%) | 2,04,975 (61.72%) |
| பொதுஜனமுன்னணி | 2,67,683(46.43%) | - |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 3,495(0.60%) | - |
| ஸ்ரீலமுற்போக்கு முன்னணி | 3072(0.53%) | - |
| சுயேட்சை-1 | 270(0.05%) | - |
| சுயேட்சை-2 | 208(0.04%) | - |
| ஐக்கிய இலங்கை ஜன | - | 1315 (0.4%) |
| ஐக்கிய சோஸலிச முன்னணி | - | 5,147 (1.53%) |
| ஸ்ரீலசுதந்திரக்கட்சி | - | 1,05,977 (31.91%) |
| ஸ்ரீலமுஸ்லிம் காங்கிரஸ் | - | 14,697 (4.43%) |
| பதிவுசெய்யப்பட்டவாக்குகள் | 7,26,182 | 6,28,317 |
| செல்லுபடியானவை | 5,76,552 | 3,32,109 |
| நிராகரிக்கப்பட்டவை | 31,019(5.11%) | 22,374 (6.31%) |
| அளிக்கப்பட்டவை | 6,07,571(83.67%) | 3,54,483 (56.42%) |



# கண்டி மாவட்டம்.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கண்டி தேர்தல் மாவட்டத்தில் 16 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 05 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. பதினோராவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பெரிதும் பரபரப்பை ஏற்படுத்திய மாவட்டமே கண்டி தேர்தல் மாவட்டமாகும். தேர்தல் வன்முறைகள் மிகைத்துக் காணப்பட்ட அதேநேரத்தில் பல வாக்களிப்பு நிலையங்களில் பலாத்காரமாக வாக்குகளைப் பிரயோகித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளர் திரு. தி.மு. ஜயரத்ன, தேசிய ஐக்கிய முன்னணி இணைத்தலைவர்களுள் ஒருவரான அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற பலாத்கார வாக்குப் பிரயோகத்தைப் பகிரங்கமாக எதிர்த்திருந்தமையும் அவதானிக்கத் தக்கதாகும். பொதுசன ஐக்கிய முன்னணியின் பிரபல அமைச்சரொருவரினால் நடத்தப்பட்டது. எனக் கூறப்படும் தேர்தல் வன்முறையுடன் கூடிய இத்தேர்தல் மாவட்டத்தில் PA 282.282 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது. 1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 301,824 (52.35%) வாக்குகளைப் பெற்று கண்டி தேர்தல் மாவட்டத்தை UNP வெற்றியீட்டியதுடன் 13 தேர்தல் தொகுதிகளுள் 11 தேர்தல் தொகுதிகளையும் UNP யே வெற்றி கொண்டது. அதே நேரத்தில் 1999 டிசம்பர் ஜனாதிபதி தேர்தலில் PA 308,187 (50.29%) வாக்குகளைப் பெற்று 10 தொகுதிகளை வெற்றி கொண்ட அதே நேரத்தில் 276,360 (45.10%) வாக்குகளைப் பெற்ற UNP யால் ஹாரிஸ்பத்துவ, மஹநுவர, செங்கடகல, ஆகிய தொகுதிகளையே வெற்றி கொள்ள முடிந்தது.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கண்டி தேர்தல் மாவட்டத்தில் பிரதான கட்சிகள் பெற்ற வாக்குகள் வருமாறு:

| இல | தொகுதி. | பொதுசன ஐக்கிய முன்னணி. | | ஐக்கிய தேசியக் கட்சி | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | யட்டிநுவர | 21,798 | 45.95 | 20,405 | 43.02 |
| 2 | கம்பளை | 29,140 | 53.64 | 19,769 | 36.39 |
| 3 | ஹேவாஹெட்ட | 18,695 | 48.26 | 16,021 | 41.35 |
| 4 | உடதும்பறை | 17,897 | 54.04 | 13,825 | 41.75 |
| 5 | நாவலப்பிடிய | 30,259 | 58.26 | 16,089 | 30.97 |
| 6 | கலகெதர | 16,051 | 46.71 | 15,399 | 44.82 |
| 7 | தெல்தெனிய | 13,881 | 51.15 | 10,373 | 38.22 |
| 8 | உடுநுவர | 19,988 | 41.92 | 19,591 | 41.09 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | பாத்ததும்பரை. | 24,235 | 55 15 | 13,805 | 31.41 |
| 1 | குண்டசாலை | 21,906 | 44 04 | 22,106 | 44.45 |
| 2 | மஹநுவரை | 7,254 | 28 83 | 12,460 | 49.52 |
| 3 | செங்கடகல | 17,342 | 39 41 | 20,096 | 45.68 |
| 4 | ஹாரிஸ்பத்துவ. | 34,177 | 39 05 | 35,828 | 40.94 |

1994ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் 07 பிரதிநிதிகளையும், பொதுசன ஐக்கிய முன்னணி 05 பிரதிநிதிகளையும் பெற்றது. 2000ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வருமாறு:

## பொதுசன ஐக்கிய முன்னணி– 6 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | அனுருந்த ரத்வத்தை | 152,511 |
| 2 | தி. மு. ஜயரத்ன | 85,711 |
| 3 | மஹிந்தானந்த அலுத்கமகே | 71,653 |
| 4 | சரத் அமுனுகம | 68,738 |
| 5 | லக்ஷ்மன் கிரிஎல்ல | 57,424 |
| 6 | ஏதிரிவீர வீரவர்தன | 35,388 |

## ஐக்கிய தேசியக் கட்சி – 05 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | கெஹெலிய ரபுக்வெல | 154,403 |
| 2 | திஸ்ஸ அத்தனாயக்கா | 73,111 |
| 3 | காதர் ஹாஜியார் | 58,365 |
| 4 | M.H.M. ஹலீம் | 45,177 |
| 5 | லகி ஜயவர்தனா | 30,880 |

## தேசிய ஐக்கிய முன்னணி (NUA)– 01 பிரதிநிதி.

| | | |
|---|---|---|
| 1 | றவூப் ஹக்கீம் | 28,332 |



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
# இல 5 மாத்தளை தேர்தல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: | 5 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | : | 292,652 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | : | 233,816 (79.89%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | : | 15,719 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 218,097 |



## கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்



| Political party/ Independent Group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 110,213 | 50.53% | 3 |
| UNP | 91,836 | 42.10% | 2 |
| JVP | 10,673 | 4.89% | 0 |
| NLF | 2,350 | 1.07% | 0 |
| SU | 1,458 | 0.66% | 0 |
| ESMS | 369 | 0.16% | 0 |
| PP | 346 | 0.15% | 0 |
| LP | 179 | 0.08% | 0 |
| SMBP | 158 | 0.07% | 0 |
| DUNF | 144 | 0.06% | 0 |
| SLMK | 96 | 0.04% | 0 |
| JSP | 86 | 0.03% | 0 |
| INDP | 75 | 0.03% | 0 |
| SLPF | 65 | 0.02% | 0 |
| PFF | 49 | 0.02% | 0 |
| Total valid votes | 218,097 | 93.27% | 5 |
| Rejected votes | 15,719 | 6.72% | - |
| Total polled | 233,816 | 79.89% | - |
| Registered No. of electors | 292,652 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொதுசன ஐக்கிய முன்னணி | 1,02,680 (49.85%) | - |
| ஐ.தே.கட்சி | 1,00,121 (48.61%) | 88,869 (63.81%) |
| சுயேட்சை | 1728 (0.83%) | - |
| ஸ்ரீ ல முற்போக்கு முன்னணி | 1,433 (0.69) | - |
| ஐ.இ.ஜனநாயகக் கட்சி | - | 2,350 (1,69%) |
| ஐக்கிய சோசலிச முன்னணி | - | 2,344 (1.68%) |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | - | 42,717 (32.82%) |
| பதியப்பட்டவாக்குகள் | 2,59,271 | 2,14,938 |
| செல்லுபடியானவை | 2,05,962 | 1,39,280 |
| நிராகரிக்கப்பட்டவை | 12,654 (5.78%) | 11,927 (7.89%) |
| அளிக்கப்பட்டவை | 2,18,616 (84.31%) | 1,51,207 (70.35%) |



# மாத்தளை மாவட்டம்.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் குதித்தன. 1994பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் P.A 102,680 (49.85%) வாக்குகளைப் பெற்று மாத்தளை மாவட்டத்தில் வெற்றி கொண்டது.(தொகுதி ரீதியாக 2 தொகுதிகளை மாத்திரமே வெற்றியீட்டியது.) ஆனால் 1999 சனாதிபதித் தேர்தலில் P.A நான்கு தொகுதிகளிலும் வெற்றியீட்டியதுடன் மாவட்ட ரீதியில் 111,232 (51.42%) வாக்குகளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

பதினோராது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் பிரதான கட்சிகள் பெற்ற வாக்குகள் வருமாறு:

| இல | தொகுதி. | பொதுசன ஐக்கிய முன்னணி. | | ஐக்கிய தேசியக் கட்சி | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | ரத்தொட்டை | 27,615 | 52.51 | 21,331 | 40.56 |
| 2 | லக்கலை | 23,692 | 58.17 | 14,941 | 36.68 |
| 3 | தம்புள்ளை | 35,421 | 49.36 | 30,455 | 42.44 |
| 1 | மாத்தளை | 19,877 | 43.56 | 22,089 | 48.41 |

1994ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது பொதுசன ஐக்கிய முன்னணியில் 03 பிரதிநிதிகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 02 பிரதிநிதிகளையும் வென்றெடுத்தன. 2000ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோர்.

## பொதுசன ஐக்கிய முன்னணி– 3 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | ஜனக பண்டார | 42,366 |
| 2 | மொன்றி கொபல்லாவ | 40,397 |
| 3 | நந்த மித்ர ஏக்கநாயக்கா. | 39.585 |

## ஐக்கிய தேசியக் கட்சி – 02 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | ரன்ஜித் அலுவிஹார | 62,911 |
| 2 | எலிக் அலுவிஹார | 60,419 |

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 6 நுவரெலியா தேர்தல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள் | : | 7 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | : | 405,414 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | : | 335,955 (82.86%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | : | 35,149 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 300,806 |



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்






| Political party/ Independent group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 158,018 | 52.53% | 4 |
| UNP | 126,486 | 46.04% | 3 |
| JVP | 6,299 | 2.09% | 0 |
| NUW | 4,671 | 1.55% | 0 |
| PP | 2,445 | 0.81% | 0 |
| SU | 1,161 | 0.38% | 0 |
| LDA | 294 | 0.09% | 0 |
| LP | 294 | 0.09% | 0 |
| DUNF | 224 | 0.07% | 0 |
| Ind 9 | 142 | 0.04% | 0 |
| Ind 4 | 110 | 0.03% | 0 |
| SMBP | 108 | 0.03% | 0 |
| Ind 3 | 93 | 0.03% | 0 |
| JSP | 66 | 0.02% | 0 |
| SLMK | 66 | 0.02% | 0 |
| Ind 1 | 58 | 0.01% | 0 |
| Ind 7 | 57 | 0.01% | 0 |
| Ind 8 | 50 | 0.01% | 0 |
| Ind 5 | 44 | 0.01% | 0 |
| Ind 6 | 40 | 0.01% | 0 |
| PFF | 33 | 0.01% | 0 |
| RJP | 25 | 0.00% | 0 |
| Ind 2 | 22 | 0.00% | 0 |
| Total valid votes / Total seats | 300,806 | 89.53% | 7 |
| Rejected votes | 35,149 | 10.46% | |
| Totalled polled | 335,955 | 82.86% | |
| Registered No. of electors | 405,414 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| ஐக்கிய தேசிய கட்சி | 1,75,478(58.12%) | 1,09,853(63.34%) |
| பொ.ச ஐக்கிய முன்னணி | 97,658(32.35%) | - |
| சுயேட்சை | 27.374(9.07%) | - |
| ஸ்ரீ.ல.மு.முன்னணி | 928(0.30%) | - |
| ம.ஐ.முன்னணி | 490(0.16%) | - |
| ஐ.சோ.முன்னணி | - | 4,214(2.43%) |
| ஐ.ம.விடுதலை முன்னணி | - | 10,309(6.06%) |
| ஸ்ரீ. ல. சுதந்திரகட்சி | - | 47,128(27.18%) |
| ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ் | - | 1,720(0.99%) |
| பதியப்பட்ட வாக்குகள் | 3,86,668 | 2,29,319 |
| செல்லுபடியானவை | 3,01,918 | 1,73,424 |
| நிராகரிக்கப்பட்டவை | 21,592(6.67%) | 13,600(7.27%) |
| அளிக்கப்பட்டவை | 3,23,510(83.66%) | 1,87.024(81.49%) |

# நுவரெலியா மாவட்டம்.

1994ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 175,478 (58.12%) வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை ஹங்குரன்கெத்த, வலப்பனை ஆகிய தொகுதிகளையும் வெற்ற கொண்டது. இத் தேர்தலில் 97,658 (32.35%) வாக்குகளைப் பெற்ற பொதுசன ஐக்கிய முன்னணியால் வலப்பனை தேர்தல் தொகுதியை மாத்திரமே வெற்றி கொள்ள முடிந்தது. அதே நேரம் 1999 சனாதிபதித் தேர்தலிலும் 152,836 (48.88%) வாக்குகளைப் பெற்று இம் மாவட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெற்றது.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் குதித்தன. இத் தேர்தலில் முதற் தடவையாக நுவரெலியா மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி கொண்டமை குறிப்பித்தக்கதாகும். (இத்தேர்தலில் அதிகளவில் சுயேட்சைக்குழுக்கள் போட்டியிட்ட மாவட்டம் இதுவாகும்).

| இல | தொகுதி. | பொதுசன ஐக்கிய முன்னணி. | | ஐக்கிய தேசியக் கட்சி | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | கொத்மலை | 21,623 | 49.94 | 20,283 | 46.84 |
| 2 | நுவரெலியா-மஸ்கெலியா | 75,788 | 47.84 | 71,854 | 45.35 |
| 3 | ஹங்குராங்கெத | 32,859 | 72.90 | 10,470 | 23.23 |
| 4 | வலப்பனை | 24,390 | 51.39 | 21,144 | 44.55 |

விருப்பு தெரிவின் அடிப்படையில் 1994 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 5 பிரதிநிதிகளையும், பொதுசன ஐக்கிய முன்னணி 2 பிரதிநிதிகளையும், சனநாயக மக்கள் முன்னணி (சுயேச்சை- 1) 1 பிரதிநிதியையும் வெற்றி கொண்டது. 2000 பொதுத் தேர்தல் முடிவின் படி விருப்புத் தெரிவின் அடிப்படையில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் அமைந்த முறை வருமாறு:



### பொதுசன ஐக்கிய முன்னணி– 4 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | S.P. திஸாநாயக்க | 78,903 |
| 2 | ஆறுமுகம் தொண்டமான் | 61,779 |
| 3 | முத்து சிவலிங்கம் | 55,673 |
| 4 | சண்முகம் ஜெகதீஸ்வரம் | 50,735 |

### ஐக்கிய தேசியக் கட்சி – 03 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | நவின் திஸாநாயக்க | 55,587 |
| 2 | பெரியசாமி சந்திர சேகரன் | 54,681 |
| 3 | சுப்பையா சதாசிவம் | 47,472 |



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 7 காலி தேர்தல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள் | : | 10 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | : | 678,508 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | : | 551,142 (81.23%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | : | 22,794 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 528,348 |



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்






| ஸ்ரீ. ல. முற்போக்கு முன்னணி | 4990(0.7%) | - |
| ம. ஐ. முன்னணி | 2886(0.4%) | 2,848(0.53%) |
| ஐ. இ. ஜனநாயககட்சி | - | 13,759(2.56%) |
| ஐ. சோ. கட்சி | - | 11,059(2.06%) |
| ஸ்ரீ. ல. சு. கட்சி | - | 1,93,526(36.35%) |
| பதியப்பட்டவை | 8,76,591 | 7,84,991 |
| செல்லுபடியானவை | 7,07,279 | 5,37,916 |
| நிராகரிக்கப்பட்டவை | 30,071(4.07%) | 34,212(5.98%) |
| அளிக்கப்பட்டவை | 7,37,350(84.11%) | 5,72,128(72.88%) |

# குருனாகல் மாவட்டம்.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் குருனாகலை தேர்தல் மாவட்டத்தில் 17 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 02 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் குருனாகலைத் தேர்தல் மாவட்டத்திலும், புத்தளம் தேர்தல் மாவட்டத்திலும் (வடமேல் மாகாணம்) 1997ம் ஆண்டு நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் களங்கத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது. விசேடமாக வடமேல் மாகாண சபைத் தோர்தலின் போது கட்டவிழ்க்கப்பட்ட தேர்தல் வன்முறைகள் பலவந்த தேர்தல் நடவடிக்கைகள் போன்றன பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்க்கு ஒரு வடுவாகவே இருந்து வருகின்றது.

2000ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பிரதான கட்சிகளான P.A, UNP தொகுதிரீதியாகப் பெற்ற வாக்குகள் வருமாறு:

| இல | தொகுதி. | பொதுசன ஐக்கிய முன்னணி. | | ஐக்கிய தேசியக் கட்சி | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | பிங்கிரிய | 25,696 | 48.33 | 23,852 | 44.36 |
| 2 | தம்பதெனிய | 28,865 | 48.63 | 25,527 | 43.00 |
| 3 | தொடங்கஸ்வத்தை | 18,208 | 45.13 | 16,951 | 42.01 |
| 4 | கல்கமுவ | 31,133 | 52.09 | 24,541 | 41.06 |
| 5 | பொல்கஹவெல | 21,421 | 46.16 | 20,788 | 44.79 |
| 6 | பண்டுகஸ்நுவர | 20,847 | 47.23 | 19,348 | 43.83 |
| 7 | வாரியபொல | 21,184 | 47.97 | 18,932 | 42.74 |
| 8 | கட்டுகம்பொல | 30,492 | 52.29 | 23,173 | 39.74 |
| 9 | நிக்கவெரட்டிய | 25,831 | 48.21 | 22,752 | 42.47 |
| 10 | யாபாஹுவ | 30,832 | 48.17 | 28,227 | 44.10 |
| 1 | ஹிரியாலை | 23,423 | 43.31 | 25,875 | 47.84 |
| 2 | மாவத்தகமை | 21,075 | 42.98 | 22,502 | 45.89 |
| 3 | குருணாகலை | 20,826 | 42.11 | 23,046 | 46.60 |
| 4 | குளியாப்பிட்டிய | 25,374 | 43.55 | 26,570 | 45.60 |

குருனாகலை தேர்தல் மாவட்டத்தில் மொத்தம் 14 தேர்தல் தொகுதிகளுண்டு. 1994-ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் கல்கமுவை, நிக்கவெரட்டிய, யாப்பாஹுவ, வாரியபொல, பண்டுவஸ்நுவர, பிங்கிரிய, கட்டுகம்பொல, தம்பதெனிய, குருணாகலை, மாவத்தகமை, தொடங்கஸ்வத்தை ஆகிய தொகுதிகளை P.A வெற்றி கொண்டது. 1994-ம் ஆண்டு தேர்தலில் ஹியால, குளியாபிட்டிய, பொல்கஹவெல ஆகிய தொகுதிகளையே ஐக்கிய தேசியக் கட்சியால் வெற்றிபெற முடிந்தது.

1994ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது பொதுசன ஐக்கிய முன்னணி 08 பிரதிநிதிகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 07 பிரதிநிதிகளையும் வென்றெடுத்தன. 2000ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் விருப்புத் தெரிவு வாக்குகளின் அடிப்படையில் தெரிவான பிரதிநிதிகள் வருமாறு.

## பொதுசன ஐக்கிய முன்னணி– 08 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | S.P. நாவின்ன | 81,259 |
| 2 | ஜயரத்ன ஹேரத் | 61,858 |
| 3 | ஆனுர யாபா | 60,456 |
| 4 | சாளிந்த திசாநாயக்க | 52,727 |
| 5 | சரத் முணசிங்க | 51,561 |
| 6 | சோமா குமாரி தென்னகோன் | 49,476 |
| 7 | ரன்ஜித் நவரத்ண | 49,174 |
| 8 | முனிதாஸ பிரேமசந்திர | 48,908 |

## ஐக்கிய தேசியக் கட்சி – 06 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | காமினி ஜயவிக்ரம பெரேரா | 131,846 |
| 2 | பெஸ்டர்ஸ் பெரேரா | 94,385 |
| 3 | பியசோம உபாலி | 54,756 |
| 4 | ரோஹித போகொல்லாகம | 51,595 |
| 5 | அமர பியசீலி ரத்நாயக்கா | 51,458 |
| 6 | இந்திக்க பண்டார | 49,963 |

## மக்கள் விடுதலை முன்னணி(J.V.P.)– 01 பிரதிநிதி.

| | | |
|---|---|---|
| 1 | நிமல் ஹேரத் | 3,407 |

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 16 புத்தளம் தேர்தல் மாவட்டம்

தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 8
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் : 412,474
அளிக்கப்பட்ட வாக்குகள் : 301,739 (73.15%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் : 15,044
செல்லுபடியான வாக்குகள் : 286,695



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்



# Puttalam District

| Political party/ independent group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 138,747 | 48.39% | 5 |
| UNP | 118,566 | 41.35% | 3 |
| NUA | 12,317 | 4.29 | 0 |
| JVP | 11,256 | 3.92% | 0 |
| NLF | 1,959 | 0.68% | 0 |
| SU | 1,915 | 0.66% | 0 |
| PP | 865 | 0.30% | 0 |
| ESMS | 341 | 0.11% | 0 |
| Ind 2 | 224 | 0.07% | 0 |
| PFF | 114 | 0.03% | 0 |
| Ind 1 | 103 | 0.03% | 0 |
| Ind 3 | 86 | 0.03% | 0 |
| SLMK | 60 | 0.02% | 0 |
| SLPF | 58 | 0.02% | 0 |
| JSP | 42 | 0.01% | 0 |
| RJP | 42 | 0.01% | 0 |
| Total valid votes / Total seats | 286,695 | 95.01% | 8 |
| Rejected votes | 15,044 | 4.98% | |
| Totalled polled | 301,739 | 73.15% | |
| Registered No. of electors | 412,474 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொதுசன ஐ. மு | 1,50,605(53.64%) | - |
| ஐ. தே. கட்சி | 1,27,671(45.47%) | 1,39,309(62.62%) |
| ஸ்ரீ. ல. முற்போக்கு முன்னணி | 1,615(0.57%) | - |
| ம. ஐ. முன்னணி | 838(0.29%) | - |
| ஐ. இ. ஐ. முன்னணி | - | 1,137(0.51%) |
| ஐ. சோ. முன்னணி | - | 3,398(1.53%) |
| ஸ்ரீ. ல. சு. கட்சி | - | 71,687(32.22%) |
| ஸ்ரீ. ல. முஸ்லிம் காங்கிரஸ் | - | 6,253(2.81%) |
| பதியப்பட்டவை | 3,80,192 | 3,18,755 |
| செல்லுபடியானவை | 2,80,729 | 2,22,475 |
| நிராகரிக்கப்பட்டவை | 13,144(4.47%) | 13,205(5.6%) |
| வழங்கப்பட்டவை | 2,93,873(77.29%) | 2,35,680(73.94%) |



# புத்தளம் மாவட்டம்

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் புத்தளம் தேர்தல் மாவட்டத்தில் 13 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 03 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன.

2000ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பிரதான கட்சிகளான P.A, UNP என்பன தொகுதிரீதியாகப் பெற்ற வாக்குகள் வருமாறு:

| இல | தொகுதி. | பொதுசன ஐக்கிய முன்னணி. | | ஐக்கிய தேசியக் கட்சி | |
|---|---|---|---|---|---|
| | | வாக்குகள் | % | வாக்குகள் | % |
| 1 | வென்னப்புவ | 29,146 | 50.14 | 25,218 | 43.38 |
| 2 | சிலாபம் | 30,124 | 47.91 | 28,110 | 44.70 |
| 3 | நாத்தாண்டிய | 25,646 | 51.58 | 20,078 | 40.38 |
| 4 | ஆனமடுவ | 30,909 | 54.89 | 21,233 | 37.71 |
| 1 | புத்தளம் | 20,044 | 37.32 | 21,579 | 40.18 |

1994 பொதுத் தேர்தலில் புத்தளம் தேர்தல் மாவட்டத்தில் ஐந்து தொகுதிகளிலுமே பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. விருப்புத் தெரிவு வாக்குகளின் அடிப்படையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் 04 பிரதிநிதிகளும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 03 பிரதிநிதிகளும் தெரிவானர்.

2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அமைந்த பிரதிநிதித்துவம் வருமாறு:

## பொதுசன ஐக்கிய முன்னணி – 05 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | த. மு. தசநாயக்கா | 45,700 |
| 2 | மில்ரோய் பெர்னாண்டோ | 39,943 |
| 3 | தயாசீலி திசேரா | 38,685 |
| 4 | பிரியங்கார ஜயரத்ன | 32,741 |
| 5 | இவோன் ஸ்ரீயானி பெர்னாண்டோ | 28,536 |

## ஐக்கிய தேசியக் கட்சி 3 பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| 1 | நேவோமால் பெரேரா | 49,207 |
| 2 | பெஸ்டஸ் பெரேரா | 45,513 |
| 3 | பாலித ரங்க பண்டார | 40,296 |

## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 17 அனுராதபுரம் தேர்தல் மாவட்டம்

தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 8
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் : 472,661
அளிக்கப்பட்ட வாக்குகள் : 371,143 (78.52%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் : 20,561
செல்லுபடியான வாக்குகள் : 350,582



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்






| Political party/ Independent group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 169,424 | 48.33% | 5 |
| UNP | 144,662 | 41.26% | 3 |
| JVP | 21,274 | 6.07% | 0 |
| NUA | 9,369 | 2.67% | 0 |
| NLF | 2,461 | 0.70% | 0 |
| SU | 976 | 0.28% | 0 |
| PP | 854 | 0.24% | 0 |
| ESMS | 494 | 0.14% | 0 |
| DUNF | 194 | 0.06% | 0 |
| SMBP | 192 | 0.05% | 0 |
| LP | 150 | 0.04% | 0 |
| NPP | 142 | 0.04% | 0 |
| Ind. 2 | 132 | 0.04% | 0 |
| Ind. 1 | 103 | 0.03% | 0 |
| SLPF | 102 | 0.03% | 0 |
| PFF | 53 | 0.02% | 0 |
| Valid | 350,582 | 94.46% | |
| Rejected | 20,561 | 5.54% | |
| Polled | 371,143 | 78.52% | |
| Registered | 472,661 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொதுசன ஐ. மு | 1,80,454(55.18%) | - |
| ஐ. தேசியக்கட்சி | 1,42,084(43.45%) | 92,726(56.19%) |
| ஸ்ரீ. ல. முற்போக்கு முன்னணி | 3,077(0.94%) | - |
| ம. ஐ. முன்னணி | 1,369(0.41%) | 531(0.32%) |
| ஐ. இ. ஐ. மு. | - | 1,397(0.85%) |
| ஐ. சோ. மு. | - | 1,724(1.05%) |
| ஸ்ரீ. ல. சு. கட்சி | - | 64,010(38.92%) |
| சுயேட்சை | - | 4.057(2.47%) |
| பதியப்பட்டவை | 4,69,026 | 3,34,073 |
| செல்லுபடியானவை | 3,26,984 | 1,64,445 |
| நிராகரிக்கப்பட்டவை | 14,620(4.27%) | 14,245(7.97%) |
| அளிக்கப்பட்டவை | 3,41,604(83.94%) | 1,78,690(43.81%) |

## அனுராதபுர தேர்தல் மாவட்டம்.

1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் அனுராதபு தேர்தல் மாவட்டத்தில் UNP, PA, MEP, SLPF ஆகிய நான்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் போட்டியிட்டு மாவட்ட வெற்றியை PA பெற்றுக்கொண்டது. அத்தேர்தலில் அனுராதபுர தேர்தல் மாவட்டத்தில் 06 தொகுதிகளில் PA வெற்றியீட்டியது. மதவாச்சி (58.76%) ஹொரவபொத்தானை (55.53%) அனுராதபுரம் கிழக்கு (54.52%) கலாவெவ (59.34%) மிஹிந்தலை (55.77%) கெகிராவை (52.11%) அதேநேரம் அனுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதியில் மாத்திரம் UNP 49.58% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது. அத்தேர்தலில் விருப்புத் தெரிவு வாக்குகளின் அடிப்படையில் PA 5 பிரதிநிதிகளையும், UNP 03 பிரதிநிதிகளையும் வெற்றிகொண்டது.

2000 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 2 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டு மாவட்டவெற்றியை PA பெற்றுக்கொண்டது. 1994 பொதுத்தேர்தலைப் போலவே இம்முறையும் 6 தேர்தல் தொகுதிகளின் வெற்றியை PA பெற்றுக் கொண்ட அதேநேரத்தில் அனுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதியை மாத்திரம் UNP வெற்றியீட்டியது.

**அனுராதபுரம் - மேற்கு**

UNP 24,330 (46.96%) PA 22.829 (44.06%)
JVP 2,715 (5.24%) NUA 1,093 (2.10%)

**அனுராதபுரம் - கிழக்கு**

PA 23,078 (46.10%) UNP 20, 825 (41.60%)
JVP 4,587 (9.16%)

**ஹொரவப்பத்தானை**

P A 19,196 (44.60%) UNP 18.084 (42.02%)
NUA 2,885 (6.70%) JVP 2,295 (5.33%)

**மிஹிந்தலை**

PA 16,577 (47.97%) UNP 13,850 (40.08%)
JVP 2,208 (6.39%) NUA 1,375 (3.97%)

**கெக்கிராவை**

PA 20,480 (46.36%) UNP 19.578 (44.32%)
JVP 1,738 (3.93%) NUA 1.665 (3.76%)

**மதவாச்சி**

PA 23,103 (52.82%) UNP 16.896 (38.82%)
JVP 2,225 (5.15%)

**கலாவெவ**

PA 35,026 (52.98%) UNP 24,754 (37.44%)
JVP 4,303 (6.50%)

விருப்புத்தெரிவு வாக்குகளின் அடிப்படையில் தெரிவான பிரதிநிதிகள் வருமாறு;

**பொதுசன ஐக்கிய முன்னணி**

| | | |
|---|---|---|
| 1. | துமிந்த திசாநாயக்க | 83,949 |
| 2. | திஸ்ஸ விஜேரத்ன கரலியத்த | 48,360 |
| 3. | சாந்த பிரேமரத்ண | 35,800 |
| 4. | எம். எச். பீ சேமசிங்க | 35,090 |
| 5. | புஞ்சி பண்டார திஸாதநாயக்க | 33738 |

**ஐக்கிய தேசியக் கட்சி**

| | | |
|---|---|---|
| 1. | பீ. ஹெரிசன் | 45,834 |
| 2. | சந்ராணி பண்டார | 41,874 |
| 3. | ஈ வில்பிரட் ஏக்கநாயக்க | 41,461 |

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 18 பொலநறுவை தேர்தல் மாவட்டம்

தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 5
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் : 229,434
அளிக்கப்பட்ட வாக்குகள் : 187,940 (81.91%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் : 10,069
செல்லுபடியான வாக்குகள் : 177,871



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்






| Political party/ independent group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| UNP | 82,399 | 46.32% | 3 |
| PA | 80,023 | 44.98% | 2 |
| JVP | 11,161 | 6.27% | 0 |
| NUA | 1,977 | 1.11% | 0 |
| NLF | 1,165 | 0.65% | 0 |
| SU | 615 | 0.34% | 0 |
| PP | 159 | 0.08% | 0 |
| LP | 93 | 0.05% | 0 |
| SMBP | 77 | 0.04% | 0 |
| Ind 2 | 70 | 0.03% | 0 |
| DUNF | 66 | 0.03% | 0 |
| Ind 1 | 43 | 0.02% | 0 |
| PFF | 23 | 0.01% | 0 |
| Total valid votes | 177,871 | 94.64% | 5 |
| Rejected votes | 10,069 | 5.35% | - |
| Total polled | 187,940 | 81.91% | - |
| Registered No. of electors | 229,434 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொதுசன ஐ. மு | 82,438(51.17%) | - |
| ஐ. தே. கட்சி | 76,706(47.62%) | 43,473(62.33%) |
| ஸ்ரீ. ல. மு. முன்னணி | 1,934(1.2%) | - |
| ஐ. இ. ஐ. முன்னணி | - | 1,933(2.77%) |
| ஐ. சோ. முன்னணி | - | 1,117(1.60%) |
| ஸ்ரீ. ல. சுதந்திரக் கட்சி | - | 23,221(33.29%) |
| பதியப்பட்டவை | 2,00,192 | 1,63,745 |
| செல்லுபடியானவை | 1,61,078 | 69,744 |
| நிராகரிக்கப்பட்டவை | 6,434(3.84%) | 5,266(7.02%) |
| அளிக்கப்பட்டவை | 1,67,512(83.68%) | 75,010(45.8%) |

**பொலநறுவை தேர்தல் மாவட்டம்.**

1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் UNP, PA, SLPF ஆகிய கட்சிகள் மும்முனைப் போட்டியில் ஈடுபட்டன.இத்தேர்தல் மாவட்டத்தில் மின்னேரியா (53.79%) மெதிரிகிரிய (49.68%)பொலநறுவை (50.05%) ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளிலும் PA வெற்றியீட்டியதுடன் மாவட்டவெற்றியையும் PA க்கே கிடைத்தது.

2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 11 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் போட்டியிட்டதுடன் 2 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. பொலநறுவை தேர்தல் மாவட்டத்தில் 3 தேர்தல் தொகுதிகளிலுமே UNP வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| மின்னேரியா - | UNP 22,693 (47.12%) | PA 21,014 (43,68%) |
| | JVP 3,811 (7.91%) | |
| மெதிரிகிரிய - | UNP 22,243 (47.30%) | PA 21,075 (44.88%) |
| | JVP 2,435 (4.54%) | NUA 1,048 (2.23%) |
| பொலநறுவை - | UNP 35,197 (45.76%) | PA 34,979 (45.48%) |
| | JVP 4.691 (8.09%) | |

1994 -ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகளின்படி பொலநறுவை தேர்தல் மாவட்டத்தில் PA யும் UNP யும் முறையே 3,2 பிரதிநிதிகளைப் பெற்றுக் கொண்டன. 2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலின்படி பிரதிநிதித்துவம் வருமாறு.

**ஐக்கிய தேசியக் கட்சி - 03 பிரதிநிதிகள்.**

1, அர்ல் குணசேகர - 56,216
2, எச். ஜீ. பீ. நெல்சன் - 31,241
3, ருக்மன் சேனாநாயக்க - 27,297

**பொதுசன ஐக்கிய முன்னணி - 02 பிரதிநிதிகள்**

1, மைத்திரிபால சிறிசேன - 57,072
2, நந்தசேன ஹேரத் - 22,872



## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 19 பதுளை தேர்தல் மாவட்டம்

| | |
|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள் | 8 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 477,760 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 389,203 (81.46%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 28,187 |
| செல்லுபடியான வாக்குகள் | 361,016 |



**கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்**



| Political party/ Independent Group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| UNP | 167,351 | 46.35% | 5 |
| PA | 154,172 | 42.70% | 3 |
| JVP | 16,414 | 4.54% | 0 |
| CWC | 12,092 | 3.34% | 0 |
| NUA | 5,052 | 1.39% | 0 |
| NLF | 2,022 | 0.56% | 0 |
| SU | 1,777 | 0.49% | 0 |
| PP | 597 | 0.16% | 0 |
| LP | 325 | 0.09% | 0 |
| DUNF | 279 | 0.07% | 0 |
| Ind.1 | 207 | 0.05% | 0 |
| PFF | 179 | 0.04% | 0 |
| Ind.4 | 178 | 0.04% | 0 |
| Ind.3 | 148 | 0.04% | 0 |
| JSP | 80 | 0.02% | 0 |
| SLPF | 77 | 0.02% | 0 |
| Ind.2 | 66 | 0.01% | 0 |
| Total Valid Votes/Total Seats | 361,016 | 92.75% | 8 |
| Rejected Votes | 28,187 | 7.24% | |
| Total Polled | 389,203 | 81.46% | |
| Registered No. of Electors | 477,760 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| ஐ. தேசியக் கட்சி | 1,82,131(54.03%) | 1,35,089(58.57%) |
| பொ. ச ஐக்கிய முன்னணி | 1,46,546(43.47%) | - |
| ஸ்ரீ. ல. மு முன்னணி | 3,555(1.05%) | - |
| சுயேட்சை 2. | 2,601(0.77%) | - |
| ம. ஐ. முன்னணி | 1,541(0.45%) | 1,693(0.74%) |
| சுயேட்சை 1 | 685(0.2%) | - |
| அ. இ. ஐ. முன்னணி | - | 5,589(2.44%) |
| ஐ. சோ. முன்னணி | - | 5,712(2.49%) |
| ஸ்ரீ. ல. சுதந்திரக்கட்சி | - | 81,011(35.36%) |
| பதியப்பட்டவை | 4,35,260 | 3,29,321 |
| செல்லுபடியானவை | 3,37,059 | 2,29,094 |
| நிராகரிக்கப்பட்டவை | 28,540(7.8%) | 19,704(7.92%) |
| அளிக்கப்பட்டவை | 3,65,599(83.99%) | 2,48,798(75.55%) |



பதுளை தேர்தல் மாவட்டம்.

1994 -ம் ஆண்டு பொதுத்தேர்தலில் UNP , PA , MEP , SLPF ஆகிய அரசியல்கட்சிகளும், இரண்டு சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. இத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள 9 தேர்தல் தொகுதிகளிலுமே ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிபெற்றது.

| | | |
|---|---|---|
| 1, | மஹியங்கனை | 61.60% |
| 2. | வியலுவை | 52.25% |
| 3, | பஸ்ஸரை | 61.01% |
| 4, | பதுளை | 48.84% |
| 5, | ஹாலி எல | 56.04% |
| 6, | ஊவா - பரணகமை | 52.04% |
| 7, | வெலிமடை | 49.13% |
| 8, | பண்டாரவெல | 51.20% |
| 9, | ஹபுதலை | 56.09% |

★ இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 05 பிரதிநிதிகளையும், பொதுசன ஐக்கிய முன்னணி 03 பிரதிநிதிகளையும் வென்றெடுத்தன.

2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 13 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 4 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. 05 தேர்தல் தொகுதிகளில் UNP யும், 4 தேர்தல் தொகுதிகளில் PA யும் வெற்றி கொண்ட அதேநேரத்தில் மாவட்ட வெற்றியையும் UNP யே பெற்றுக்கொண்டது.

1, பஸ்ஸரை — UNP 15,491 (44.13%) PA 13,848 (39.45%)
CWC 4,135 (11.78%)

2, மஹியங்கனை — UNP 28,850 (57.12%) PA 17.792 (35.23%)
JVP 2.990 (5.92%)

3, வெலிமடை — UNP 19.377 (44.49%) PA 18.661 (42.84%)
NUA 2,577 (5.91%) JVP 1,835 (4.21%)

4, பண்டாரவளை — UNP 20,912 (45.30%) PA 19.836 (42.97%)
JVP 1,928 (4.17%) CWC 1,927 (4.17%)

| | | |
|---|---|---|
| 5, | ஹபுத்தளை | UNP 16,430 (46.62%) PA 13,699 (38.87%) CWC 2,975 (8.44%) JVP 1,046 (2.96%) |
| 6, | பதுளை | PA 14,638 (46.57%) UNP 13,312 (43.25%) JVP 1,778 (5.65%) |
| 7, | ஹாலி எல | PA 17,588 (45.50%) UNP 17, 338 (44.85%) JVP 1,802 (4.66%) |
| 8, | வியலுவை | PA 13,082 (46.52%) UNP 12,880 (45.80%) JVP 1,131 (4.02%) |
| 9, | ஊவா பரணகமை | PA 18,162 (46.96%) UNP 17,582 (45.46%) JVP 1,815 (4.69%) |

விருப்புத்தெரிவு வாக்குகளின் அடிப்டையில் பெற்றுக்கொண்ட பிரதிநிதித்துவம் வருமாறு.

| **ஐக்கிய தேசியக் கட்சி** | 05 பிரதிநிதிகள் |
|---|---|
| 1, வீ. ஜே. மு. லொகுபண்டார | 75,417 |
| 2, லக்ஸ்மன் செனவிரத்ன | 51,382 |
| 3, உபாலி செல்டன் சமரவீர | 45,839 |
| 4, ரவீந்தர சமரவீர | 44,257 |
| 5, ஆர். எம். ரத்நாயக்கா | 38,947 |

| **பொதுசன ஐக்கிய முன்னணி** | 03 பிரதிநிதிகள். |
|---|---|
| 1, நிமல் சிரிபால த சில்வா | 98,917 |
| 2, S.R.M. மத்தும பண்டார | 47,152 |
| 3, டிலான் பெரேரா | 38,415 |



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 20 மொனராகலை தேர்தல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 5 | | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | : | 237,935 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | : | 197,519 (83.1%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | : | 13,588 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 183,931 |



**கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்**



| | | | |
|---|---|---|---|
| PA | 91,404 | 49.69% | 3 |
| UNP | 75,900 | 41.26% | 2 |
| JVP | 13,159 | 7.15% | 0 |
| NLF | 1,547 | 0.84% | 0 |
| PP | 431 | 0.23% | 0 |
| ESMS | 355 | 0.19% | 0 |
| SU | 327 | 0.17% | 0 |
| DUNF | 165 | 0.08% | 0 |
| LP | 138 | 0.07% | 0 |
| Ind. 1 | 101 | 0.05% | 0 |
| SMBP | 93 | 0.05% | 0 |
| Ind. 6 | 64 | 0.03% | 0 |
| Ind. 4 | 59 | 0.03% | 0 |
| Ind. 3 | 57 | 0.03% | 0 |
| PFF | 38 | 0.02% | 0 |
| Ind. 2 | 34 | 0.01% | 0 |
| Ind. 5 | 33 | 0.01% | 0 |
| SLPF | 26 | 0.01% | 0 |
| Total valid votes | 183,931 | | 5 |
| Rejected votes | 13,588 | | |
| Total polled | 197,519 | 83.1% | |
| Registered No. of electors | 237,935 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொ. ச ஐக்கிய முன்னணி | 77,955(50.40%) | |
| ஐக்கிய தேசியக்கட்சி | 67,753(43.80%) | 46,313(52.42%) |
| சுயேட்சை 4 | 6,592(4.26%) | |
| ஸ்ரீ.ல.மு.முன்னணி | 1,896(1.22%) | |
| சுயேட்சை 5 | 207(0.13%) | |
| சுயேட்சை 2 | 106(0.06%) | |
| சுயேட்சை 1 | 90(0.05%) | 349(0.40%) |
| சுயேட்சை 3 | 64(0.04%) | |
| ஐ. சோ. முன்னணி | - | 2,149(2.43%) |
| ம.ஐ.முன்னணி | - | 451(0.51%) |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | - | 38,640(43.73%) |
| ஸ்ரீ. ல.முஸ்லிம் காங்கிரஸ் | - | 450(0.51%) |
| பதியப்பட்டவை | 1,99,391 | 1,61,927 |
| செல்லுபடியானவை | 1,54,663 | 88,352 |
| நிராகரிக்கப்பட்டவை | 16,306(9.53%) | 12,317(12.24%) |
| அளிக்கப்பட்டவை | 1,70,969(85.74%) | 1,00,669(62.17%) |



***மொனராகலை தேர்தல் மாவட்டம்.***

மொனராகலை தேர்தல் மாவட்டத்தில் 1994 - ம் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் UNP, PA, SLPF ஆகிய கட்சிகளும் 5 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. இத்தேர்தல் தொகுதியில் 3 தொகுதிகளிலுமே பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. பிபிலை 47.85% மொனராகலை 55.40%, வெல்லவாய 47.75% விருப்புத் தேர்வு வாக்குகளினடிப்படையில் PA 3 பிரதிநிதிகளையும், UNP -2 பிரதிநிதிகளையும் வென்றெடுத்தன.

2000 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 12 அரசியல் கட்சிகளும் 6 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. இம்முறையும் 3 தொகுதிகளையும் PA வெற்றிகொண்டது.

| | |
|---|---|
| பிபிலை | PA 22,011 (49.11%) UNP 19,022 (42.44%)<br>JVP 2,783 (6.20%) |
| மொனராகலை | PA 29,668 (53.86%) UNP 21,063 (38.24%)<br>JVP . 3,228 (5.86%) |
| வெல்லவாயா . | PA 36,697 (47.06%) UNP 33,390 (48.12%)<br>JVP 6,581 (8.44%) |

**விருப்புத்தெரிவு வாக்குகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்**

**பொதுசன ஐக்கிய முன்னணி - 03 பிரதிநிதிகள்.**

| | |
|---|---|
| 1, காமினி விஜித் விஜயமுனி சொய்சா | 37,312 |
| 2, சுமேதா குணவதி ஜயசேனா | 33,946 |
| 3, ஜயசுந்தர விஜேகோன். | 33,784 |

ஐக்கிய தேசியக் கட்சி - 02 பிரதிநிதிகள்.

| | |
|---|---|
| 1, J.N ஆனந்த குமாரசிரி | 36,487 |
| 2, ரன்ஜித் மத்தும பண்டார | 32,269 |

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
## இல 21 இரத்தினபுரி தேர்தல் மாவட்டம்

தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள்: 10
பதிவு செய்யப்பட்ட வாக்குகள் : 609,655
அளிக்கப்பட்ட வாக்குகள் : 509,073 (83.50%)
நிராகரிக்கப்பட்ட வாக்குகள் : 26,819
செல்லுபடியான வாக்குகள் : 482,254



### கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்




| Political party/ Independent Group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 244,142 | 50.62% | 6 |
| UNP | 204,017 | 42.30% | 4 |
| JVP | 22,222 | 4.60% | 0 |
| LDA | 6,158 | 1.27% | 0 |
| SU | 1,703 | 0.35% | 0 |
| ULF | 882 | 0.18% | 0 |
| PP | 716 | 0.14% | 0 |
| LP | 579 | 0.12% | 0 |
| DUNF | 395 | 0.08 | 0 |
| Ind 4 | 276 | 0.05% | 0 |
| SMBP | 248 | 0.05% | 0 |
| ESMS | 237 | 0.04% | 0 |
| PLSF | 176 | 0.03% | 0 |
| Ind 3 | 116 | 0.02% | 0 |
| PFF | 95 | 0.01% | 0 |
| SLPF | 95 | 0.01% | 0 |
| Ind 2 | 93 | 0.01% | 0 |
| Ind 1 | 54 | 0.01% | 0 |
| JSP | 50 | 0.01% | 0 |
| Total valid votes | 482,254 | 94.73% | 10 |
| Rejected votes | 26,819 | 5.26% | - |
| Total polled | 509,073 | 83.50% | - |
| Registered | 609,655 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| பொ. ச. ஐக்கிய முன்னணி | 2,33,687(50.77%) | - |
| ஐ. தேசிய கட்சி | 2,20,750(47.95%) | 1,96,323(57.89%) |
| ஸ்ரீ. ல. மு. முன்னணி | 2,330(0.50%) | - |
| ம. ஐ. முன்னணி | 1,634(0.35%) | - |
| சுயேட்சை 1 | 1,565(0.33%) | 779(0.23%) |
| சுயேட்சை 3 | 202(0.04%) | - |
| சுயேட்சை 2 | 127(0.02%) | - |
| ஐ. இ. ஐ. க | - | 1,337(0.39%) |
| ஐ. சோ. முன்னணி | - | 17,323(5.11%) |
| ஸ்ரீ. ல. சு. கட்சி | - | 1,23,360(36.38%) |
| பதியப்பட்டவை | 5,54,607 | 4,57,224 |
| செல்லுபடியானவை | 4,60,285 | 3,39,122 |
| நிராகரிக்கப்பட்டவை | 23,611(4.87%) | 20,248(5.63%) |
| அளிக்கப்பட்டவை | 4,83,896(87.25%) | 3.59,370(78.60%) |

## இரத்தினபுரி தேர்தல் மாவட்டம்.

1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்தில் UNP, PA, MEP, SLPF ஆகிய கட்சிகளும், 3 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. இம்மாவட்டத்தில் PA 5 தேர்தல் தொகுதிகளிலும், UNP 3 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றியீட்டின.

| | | |
|---|---|---|
| PA வெற்றியீட்டிய தொகுதிகளாவன : | எஹலியாகொடை | - 54.18% |
| | இரத்தினபுரி | - 51.95% |
| | நிவித்திகலை | - 49.59% |
| | கலவானை | - 50.50% |
| | கொலன்னவை | - 58.41% |
| UNP வெற்றியீட்டிய தொகுதிகளாவன: | பெல்மடுல | - 53.36% |
| | பலாங்கொடை | - 50.78% |
| | ரக்குவானை | - 54.66% |

1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்தில் PA - 06 பிரதிநிதிகளையும், UNP - 04 பிரதிநிதிகளையும் வென்றெடுத்தது.

2000 -ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 15 அரசியல்கட்சிகளும் 4 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. தொகுதிரீதியாக அனைத்து தேர்தல் தொகுதிகளிலுமே PA வெற்றியீட்டியது.

விபரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| Ratnapura | PA<br>JVP | 36,981 (51.49%) UNP 30,189 (42.03%)<br>3,165 (4.40%) |
| Kalawana | PA<br>JVP | 21,224 (55.48%) UNP 15,246 (39.85%)<br>1,237 (3.23%) |
| Eheliyagoda | PA<br>LDA | 27,885 (47.37%) UNP 23,985 (40.74%)<br>4,272 (7.25%) JVP 1,907 (3.24%) |
| Pelmadulla | PA<br>JVP | 25,563 (52.99%) UNP 20,385 (42.25%)<br>1,556 (3.22%) |
| Balangoda | PA<br>JVP | 31,411 (52.01%) UNP 25,789 (42.70%)<br>2,232 (3.69%) |
| Rakwana | PA<br>JVP | 28,497 (48.41%) UNP 27,685 (47.04%)<br>1,937 (3.29%) |
| Nivitigala | PA<br>JVP | 31,798 (54.47%) 24,062 (41.21%)<br>1,631 (2.79%) |
| Kolonnawa | PA<br>JVP | 36,592 (46.47%) UNP 33,729 (42.46%)<br>7,895 (9.94%) |



விருப்புத்தெரிவு வாக்குகளின் அடிப்படையில் தெரிவான பிரதிநிதிகள் வருமாறு.

**பொதுசன ஐக்கிய முன்னணி - 06 பிரதிநிதிகள்.**

| | | |
|---|---|---|
| 1, | பவித்ரா தேவி வன்னியாரச்சி | 108,324 |
| 2, | ஜோன் செனவிரத்ன | 86,744 |
| 3, | சுரங்கனி எல்லாவல | 54,518 |
| 4, | தர்மதாச வன்னியாரச்சி | 39,972 |
| 5, | உடகம லியனகே ஹீன் மாத்தயா | 39,285 |
| 6, | ஜயதிஸ்ஸ ரணவீர | 38,631 |

**ஐக்கிய தேசியக்கட்சி -4 பிரதிநிதிகள்.**

| | | |
|---|---|---|
| 1, | காமனி அதுகோரலை | 109,102 |
| 2, | சுசந்த புஞ்சிநிலமே | 77,198 |
| 3, | மஹிந்த ரத்னதிலக்க | 49,803 |
| 4, | அபேநாயக்க பியதாச | 41,365 |

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000
# இல 22 கேகாலை தேர்தல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள் | : | 9 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | : | 545,238 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | : | 434,140 (79.62%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | : | 22,728 |
| செல்லுபடியான வாக்குகள் | : | 411,412 |



## கட்சிகள் பெற்ற பருமட்டான வாக்கு வீதம்






| Political party/ independent group | Votes obtained | Percentage | Seats |
|---|---|---|---|
| PA | 201,114 | 48.88% | 5 |
| UNP | 175,627 | 42.69% | 4 |
| JVP | 22,028 | 5.35% | 0 |
| NUA | 4,797 | 1.17% | 0 |
| SU | 4,549 | 1.11% | 0 |
| Ind. 4 | 497 | 0.12% | 0 |
| MULF | 464 | 0.11% | 0 |
| PP | 422 | 0.10% | 0 |
| LP | 381 | 0.09% | 0 |
| LDA | 344 | 0.08% | 0 |
| PLSF | 300 | 0.07% | 0 |
| SMBP | 289 | 0.07% | 0 |
| DUNF | 273 | 0.07% | 0 |
| SLPF | 73 | 0.02% | 0 |
| Ind. 3 | 64 | 0.02% | 0 |
| JSP | 61 | 0.01% | 0 |
| PFF | 45 | 0.01% | 0 |
| Ind. 1 | 44 | 0.01% | 0 |
| Ind. 2 | 40 | 0.01% | 0 |
| Valid | 411,412 | 94.76% | |
| Rejected | 22,728 | 5.24% | |
| Polled | 434,140 | 79.62% | |
| Registered | 545,238 | | |

| கட்சிகள் | 1994 | 1989 |
|---|---|---|
| ஐக்கிய தேசியக்கட்சி | 2,03,938(51.24%) | 1,74,334(61.12%) |
| பொதுசன ஐ முன்னை | 1,90,689(47,91%) | - |
| ஸ்ரீ. ல. முற்போக்கு மு | 3,383(0.85%) | - |
| ஐ. இ. ஐ. மு | - | 14.056(4.93%) |
| ஐ. சோ. முன்னணி | - | 15.168(5.32%) |
| ம. ஐ. முன்னணி | - | 1.028(0.36%) |
| ஸ்ரீ. ல. சு. கட்சி | - | 80,668(28.28%) |
| பதிவுபட்ட வாக்குகள் | 5,00,947 | 4,37,134 |
| செல்லுபடியானவை | 3,98010 | 2,85,254 |
| நிராகரிக்கப்பட்டவை | 17,043(4.10%) | 18,362(6.05%) |
| அளிக்கப்பட்டவை | 4,15,053(82.85%) | 3,03,616(69.46%) |

கேகாலை தேர்தல் மாவட்டம்.

1994 -ம் ஆண்டு பொதுத்தேர்தலில் 05 பிரதிநிதிகளைப் பெற்று UNP இத்தேர்தல் மாவட்டத்தில் வெற்றிவாகை சூடியது. பொதுசன ஐக்கிய முன்னணியால் 04 பிரதிநிதிகளையே வெற்றிகொள்ள முடிந்தது. தொகுதிரீதியாக கேகாலை தேர்தல் மாவட்டத்தில் 06 தேர்தல் தொகுதிகளில் ஐக்கிய தேசியக்கட்சியும் (டெடிகம 51.12%) மாவனெல்லை 53.79%, அரநாயக்கா 52.57%, யட்டியந்தோட்டை 55.26% ருவன்வெல 50.29% தரனியாகலை 58.89%) பொதுசன ஐக்கிய முன்னணி 03 தொகுதிகளிலும் (கலிகமுவை 49.73% ,கேகாலை 55.04%, ரம்புக்கனை 51.19% வெற்றிகண்டன.

2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் கேகாலை தேர்தல் மாவட்டத்தை பொதுசன ஐக்கியமுன்னணி வெற்றியீட்டியது. இத்தேர்தலில் 15 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 4 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. கேகாலை மாவட்டத்தில் 8 தொகுதிகளில் PA யும் 1 தொகுதியில் UNP யும் வெற்றியீட்டியது.

| | | | | |
|---|---|---|---|---|
| Rambukkana | PA | 20,907 (51.25%) | UNP | 16,647 (40.81%) |
| | JVP | 2,356 (5.77%) | | |
| Ruwanwella | PA | 23,375 (51.83%) | UNP | 18,298 (40.57%) |
| | JVP | 2,196 (4.86%) | | |
| Dedigama | PA | 25,961 (45.78%) | UNP | 25,938 (45.74%) |
| | JVP | 3,153 (5.56%) | | |
| Kegalle | PA | 22,237 (51.63%) | UNP | 16.091 (37.36%) |
| | JVP | 3,598 (8.14%) | | |
| Aranayake | PA | 18,340 (52.67%) | UNP | 14.160 (40.67%) |
| | JVP | 1,688 (4.84%) | | |
| Yatiyantota | PA | 22,659 (51.62%) | UNP | 18.738 (42.69%) |
| | JVP | 1,347 (3.06%) | | |
| Galigamuwa | PA | 20.284 (48.51%) | UNP | 18.109 (43.31%) |
| | JVP | 2,468 (5.90%) | | |
| Dereniyagala | PA | 19,715 (48.43%) | UNP | 18.443 (45.30%) |
| | JVP | 1,848 (4.53%) | | |
| Mawanella | UNP | 23,751 (47.49%) | PA | 19.976 (39.94%) |
| | NUA | 2,901 (5.80%) | JVP | 2,428 (4.85%) |

விருப்புத்தெரிவு வாக்குகளின் அடிப்படையில் தெரிவான பிரதிநிதிகள் வருமாறு;

**பொதுசன ஐக்கிய முன்னணி -05 பிரதிநிதிகள்**

| | | |
|---|---|---|
| 1, | அதாவுட செனவிரத்ன | 76,510 |
| 2, | மஹிபால ஹேரத் | 61,625 |
| 3, | ரன்ஜித் சியம்பலாபிட்டிய | 49,582 |
| 4, | ஜகத் பாலசூரிய | 45,862 |
| 5, | லலித் திசாநாயக்கா | 40,624 |

**ஐக்கிய தேசியக்கட்சி - 04 பிரதிநிதிகள்**

| | | |
|---|---|---|
| 1, | ஜயதிலக பொடிநிலமே | 48,504 |
| 2, | (சம்பிக்க) பிரேமதாச | 47,342 |
| 3, | ஆர். ஏ. டீ. சிறிசேன | 43,002 |
| 4, | மனோ விஜேரத்ன | 41,069 |

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000 ஒரு மதிப்பீடு

பேரினவாதக்கட்சிகளின் இனவாதப் பிரசாரங்களை தேசியரீதியில் முன்னெடுத்துச் செல்ல ஒரு களமாகப் பயன்படுத்தப்பட்ட தேர்தல் அரங்கில் இனவாத விசமத்தை விளைத்த அரசியல் கட்சிகளுக்கு தக்க பாடத்தைப் புகட்டிய 2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலானது இலங்கை தேர்தல் வரலாற்றில் புதியதொரு பரிணாமத்தைத் தோற்றுவித்தது. 1994 -ம் ஆண்டில் சிறுபான்மை இனவாதக்கட்சிகளும் சேர்ந்து ஆட்சியை அமைத்ததைப்போலவே 2000-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் முடிவுகளும் அமைந்துவிட்டன.

2000 -ம் ஆண்டு பொதுத்தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 29 அரசியல் கட்சிகளும், 99 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டன. முதலில் தேசியரீதியில் கட்சிகள் பெற்ற வாக்குகளை வரிசைப்படுத்தி நோக்குவோம்.

## அகில இலங்கைரீதியில் கட்சிகள் நிலை பொதுத்தேர்தல் 2000

| | |
|---|---|
| தெரிவாக வேண்டிய அங்கத்தவர்கள் | : 225 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | : 12,071,062 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | : 9,128,832 (75.62%) |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | : 481,155 |
| செல்லுபடியான வாக்குகள் | : 8,647,668 |

| | | |
|---|---|---|
| PA | 3,900,901 | 45.10% |
| UNP | 3,477,770 | 40.21% |
| JVP | 518,774 | 5.99% |
| NUA | 197983 | 2.28% |
| SU | 127,863 | 1.47% |
| TULF | 106,033 | 1.22% |
| EPDP | 50,890 | 0.58% |
| NLF | 32,275 | 0.37% |
| ACTC | 27,323 | 0.31% |
| TELO | 26,112 | 0.30% |
| CWC | 23,013 | 0.26% |
| DPLF | 20,848 | 0.24% |
| PP | 20,006 | 0.23% |
| IND2-D13 | 19,812 | 0.22% |
| LDA | 9,731 | 0.11% |
| SMBP | 7,293 | 0.08% |
| NUW | 5,737 | 0.06% |
| IND1-D12 | 5,556 | 0.06% |
| LP | 5,188 | 0.06% |
| IND2-D10 | 4,907 | 0.05% |
| DUNF | 4,406 | 0.05% |
| ULF | 4,048 | 0.04% |
| ESMS | 3,927 | 0.04% |
| IND4-D11 | 3,511 | 0.04% |
| IND2-D14 | 2,621 | 0.03% |
| MULF | 2,575 | 0.02% |
| IND1-D11 | 2,414 | 0.02% |
| IND7-D11 | 2,359 | 0.02% |
| IND5-D10 | 2,254 | 0.02% |
| IND6-D10 | 2,190 | 0.02% |
| IND5-D11 | 1,819 | 0.02% |
| IND1-D10 | 1,657 | 0.01% |
| IND3-D10 | 1,649 | 0.01% |
| NPP | 1,542 | 0.01% |
| IND3-D14 | 1,434 | 0.01% |
| SLMK | 1,287 | 0.01% |
| PFF | 1,242 | 0.01% |
| SLPF | 1,136 | 0.01% |
| IND5-D13 | 1,079 | 0.01% |

முன்பக்கம் இடம்பெற்றுள்ள பட்டியலில் தேசியரீதியாக 1000 வாக்குகளுக்குக் குறைவாகப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளோ, அல்லது சுயேற்சைக்குழுக்களோ சோக்கப்படவில்லை.

2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி தேசியரீதியில் 3,900,901 (45.10%) வாக்குகளைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தது. இரண்டாமிடத்தை 3,477,770 (40.21%) வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி பெற்றுக்கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சியை விட பொதுசன ஐக்கிய முன்னணி 423,131 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விகிதாசார தேர்தல் முறையின் கீழ் 1989 ம் ஆண்டு முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 47.15% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது. இத்தேர்தல் மக்கள் விடுதலை முன்னணியின் (J.V.P.) எதிர்ப்பின் மத்தியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. 1988 / 1989 -ம் ஆண்டுகளில் J.V.P. யின் அடக்குமுறை தென்னிலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் வியாபித்திருந்தது. ஒரு வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்களிக்கச் செல்லும் முதல் பத்துப் பேரைக் கொலை செய்வதாக பகிரங்கமாக அச்சுறுத்தியிருந்தது. தேர்தலுக்கு முன்னைய தினங்களில் நாட்டின் பல பாகங்களிலும் வன்முறைகள் இடம்பெற்றன. இப்படிப்பட்ட பிரச்சினைகளின் மத்தியில் நடைபெற்ற தேர்தலில் இரண்டாமிடத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (29.72%) பெற்றுக்கொண்டது. இந்த முதலாவது விகிதாசார தேர்தலில் இலங்கையின் பிரதான இருகட்சிகளுமான UNP யும் SLFP யும் 76.86% வாக்குகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விகிதாசார முறையின் கீழ் இரண்டாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 1994 -ம் ஆண்டு நடைபெற்றது. இத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிரதானமாகக் கொண்டு ஏனைய சில இடதுசாரிக் கட்சிகளின் கூட்டாக உருவாக்கம் பெற்ற புதிய கட்சியே பொதுசன ஐக்கிய முன்னணியாகும். 1994 -ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி 3,887,823 (48.94%) வாக்குகளையும், ஐக்கிய தேசியக்கட்சி 3,498,370 (44.03%) வாக்குகளையும் பெற்றுக்கொண்டன. இவ்விரு கட்சிகளும் பெற்ற வாக்கு விகிதம் 92.97% ஆகும்.

2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் இலங்கை அரசியல் வரலாற்றில் 29 அரசியல் கட்சிகளும், 99 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிட்டு சாதனை படைத்தன. இருப்பினும் தேர்தல் முடிவுகளின் படி பொதுசன



ஐக்கிய முன்னணி 45.10% வாக்குகளையும், ஐக்கிய தேசியக்கட்சி 40.21% வாக்குகளையும் பெற்றுக் கொண்டன. இரண்டு கட்சிகளும் பெற்ற வாக்குவீதம் 85.31% ஆகும்.

1956 ம் ஆண்டில் இருந்து பார்க்கும் போது மக்களின் வாக்குகள் பிரதானமாக UNP, SLFP (P.A) இருகட்சிகளையுமே சுற்றியதாக உள்ளன. பொதுவாக 80 வீதமான வாக்குகள் இவ்விரு கட்சிகளுக்குமே அளிக்கப்படுகின்றன. அதேநேரத்தில் அரசாங்கத்தை அமைப்பதிலும் இவ்விருகட்சிகளுமே அங்கம் பெறுகின்றன. ஆனாலும் இலங்கையின் கட்சிமுறையை எம்மால் இருகட்சிமுறை என வரையறை செய்யமுடியாது. காரணம் அமைக்கப்படும் அரசாங்கங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கூட்டரசாங்கங்களாக அமைகின்றன.

2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகளும் கூட்டரசாங்கத்துக்கே வழிவகுத்துள்ளன. இத்தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்கள் வருமாறு.

| கட்சி / குழு | மாவட்டரீதியில் | தேசியபட்டியல் | மொத்தம். |
|---|---|---|---|
| பொதுசன ஐக்கிய முன்னணி( PA) | 94 | 13 | **107** |
| ஐக்கிய தேசியக்கட்சி (UNP) | 77 | 12 | **89** |
| மக்கள் விடுதலை முன்னணி (JVP) | 08 | 02 | **10** |
| தமிழர் விடுதலைக்கூட்டணி (TULF) | 05 | 00 | **05** |
| தேசிய ஐக்கிய முன்னணி (NUA) | 03 | 01 | **04** |
| ஈழமக்கள் ஜனநாயக முன்னணி (EPDP) | 04 | 00 | **04** |
| தமிழ் ஈழ விடுதலை முன்னணி(TEL) | 03 | 00 | **03** |
| சிஹல உருமய (SU) | 00 | 01 | **01** |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC) | 01 | 00 | **01** |
| சுயேட்சை -2 (திகாமடுலை (IND - D) | 01 | 00 | **01** |
| **மொத்தம்** | **196** | **29** | **225** |

மாவட்ட ரீதியாக கட்சிகள் / குழுக்கள்
பெற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை - 196

| தேர்தல் மாவட்டம் | PA | UNP | JVP | NUA | EPDP | TULF | ACTC | TELO | Ind-2 (d-13) | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) கொழும்பு | 08 | 10 | 02 | - | - | - | - | - | - | 20 |
| 2) கம்பஹா | 10 | 07 | 01 | - | - | - | - | - | - | 18 |
| 3) களுத்துரை | 05 | 04 | 01 | - | - | - | - | - | - | 10 |
| 4) கண்டி | 06 | 05 | - | 01 | - | - | - | - | - | 12 |
| 5) மாத்தளை | 03 | 02 | - | - | - | - | - | - | - | 05 |
| 6) நுவரெலியா | 04 | 03 | - | - | - | - | - | - | - | 07 |
| 7) காலி | 05 | 04 | 01 | - | - | - | - | - | - | 10 |
| 8) மாத்தரை | 05 | 02 | 01 | - | - | - | - | - | - | 08 |
| 9) ஹம்பாந்தோட்ட | 02 | 04 | 01 | - | - | - | - | - | - | 07 |
| 10) யாழ்ப்பாணம் | - | 01 | - | - | 04 | 03 | 01 | - | - | 09 |
| 11) வன்னி | 01 | 01 | - | 01 | - | - | - | 03 | - | 06 |
| 12) மட்டக்களப்பு | 01 | 01 | - | 01 | - | 02 | - | - | - | 05 |
| 13) திகாமடுல்லை | 04 | 02 | - | - | - | - | - | - | 01 | 07 |
| 14) திருகோணமலை | 03 | 01 | - | - | - | - | - | - | - | 04 |
| 15) குருநாகலை | 08 | 06 | 01 | - | - | - | - | - | - | 15 |
| 16) புத்தளம் | 05 | 03 | - | - | - | - | - | - | - | 08 |
| 17) அனுராதபுரம் | 05 | 03 | - | - | - | - | - | - | - | 08 |
| 18) பொலநறுவை | 02 | 03 | - | - | - | - | - | - | - | 05 |
| 19) பதுளை | 03 | 05 | - | - | - | - | - | - | - | 08 |
| 20) மொனராகலை | 03 | 02 | - | - | - | - | - | - | - | 05 |
| 21) இரத்தினபுரி | 06 | 04 | - | - | - | - | - | - | - | 10 |
| 22) கேகாலை | 05 | 04 | - | - | - | - | - | - | - | 09 |
| மொத்தம் | 94 | 77 | 08 | 03 | 04 | 05 | 01 | 03 | 01 | 196 |



**தேசியபட்டியல்**

இலங்கைப் பாராளுமன்றத்தின் மொத்தப்பிரதிநிதிகளின் எண்ணிக்கை 225 ஆகும், இவர்களில் 196 பிரதிநிதிகள் மாவட்டரீதியாக நேரடியாக வாக்களார்களினால் தேர்ந்தெடுக்கப்படுவர்.மீதமான 29 பிரதிநிதிகளும் அகில இலங்கைரீதியில் கட்சிகள் பெறும் வாக்குவிகிதாசாரத்துக்கு ஏற்ப தேசியபட்டியல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.தேசியபட்டியல் மூலம் தெரிவான பிரதிநிதிகள் வருமாறு.

**பொதுசன ஐக்கிய முன்னணி - 13 பிரதிநிதிகள்.**

1, லக்ஸ்மன் கதிர்காமர்.
2, அலவி மௌலானா.
3, ரொனி - டி - மெல்.
4, விஜயபால மென்டிஸ்.
5, பெட்டி வீரகோன்.
6, யூ. எல். எம். ஹனிபா (மருதூர்கனி)
7, டாக்டர் லெஸ்லி குணவர்தனா.
8, ராஜா கொல்லுரே.
9, மாரிமுத்து.
10, மேர்வின் சில்வா.
11, சமரவீர சந்திரசிரி.
12, ஹரேந்திர கொரயா.
13, ரிஸ்வி சின்னலெப்பை.

**ஐக்கிய தேசியக்கட்சி - 12 பிரதிநிதிகள்.**

1, ரவிந்திர ரன்தெனிய.
2, ஏ. எச். எம். அஸ்வர்.
3, எம். எஸ். செல்லச்சாமி.
4, அப்துல் மஜீட்.
5, பீ.பீ. தேவராஜ்.
6, மாலிந்த மொரகொட.
7, திலக் மாரப்பன.
8, கணகசபை கணகராஜா.
9, சிரிநாத் - டி - மெய்.
10, நிகால் பக்மீவெவ
11, தகம் விமலசேன
12, கே. எம். சொக்ஸி.

**மக்கள் விடுதலை முன்னணி - 02**

1, அம்ஜான் உடம்மா.
2, அனுர திஸாநாயக்கா.

**தேசிய ஐக்கிய முஸ்லிம் முன்னணி -01**

1, பஷீர் சேகு தாவூத்.

**சிஹல உருமய -01**

1, திலக் கருணாரத்ன

**தொகுதி ரீதியான வெற்றி.**

இலங்கையில் விகிதாசார தேர்தல் முறைகாரணமாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிட்ட கட்சிகள் / குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்கு விகிதாசாரத்துக்கு அமைய பிரதிநிதிகள் ஒதுக்கப்பட்டமையால் சில கட்சிகளுக்கு அதிகமான பிரதிநிதிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. உதாரணமாக 2000 -ம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிவுகளை தொகுதிவாரியாக நோக்குமிடத்து மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) ஒரு தொகுதியிலேனும் வெற்றிபெறவில்லை. இருப்பினும் JVP யினரால் 10 பிரதிநிதிகளை வெற்றி பெறமுடிந்தது. பொதுவாக இலங்கையில் நடைமுறையிலுள்ள விகிதாசார தேர்தல் முறையில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகள் அல்லது குழுக்கள் பெறும்வாக்கு விகிதாசாரத்துக்கு அமைய ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப் படுகின்றமையினாலேயே மேற்படி நிலை ஏற்படுகின்றது.

தேர்தல் தொகுதிரீதியாக (160)
கட்சிகளின் நிலை வறுமாறு;

தொகுதி ரீதியாக கட்சிகள் பெற்ற நிலை

இலங்கையின் மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கை :160

| தேர்தல் மாவட்டம் | PA | UNP | EPDP | TULF | ACTC | TELO | NUA | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1) கொழும்பு (UNP) | 07 | 08 | - | - | - | - | - | 15 |
| 2) கம்பஹா (PA) | 11 | 02 | - | - | - | - | - | 13 |
| 3) களுத்துரை (PA) | 08 | - | - | - | - | - | - | 08 |
| 4) கண்டி (PA) | 09 | 04 | - | - | - | - | - | 13 |
| 5) மாத்தளை (PA) | 03 | 01 | - | - | - | - | - | 04 |
| 6) நுவரெலியா (PA) | 04 | - | - | - | - | - | - | 04 |
| 7) காலி (PA) | 09 | 01 | - | - | - | - | - | 10 |
| 8) மாத்தரை (PA) | 07 | - | - | - | - | - | - | 07 |
| 9) ஹம்பாந்தோட்டை(UNP) | 01 | 03 | - | - | - | - | - | 04 |
| 10) யாழ்ப்பாணம் (EPDP) | - | 01 | 05 | 04 | 01 | - | - | 11 |
| 11) வன்னி (TELO) | 01 | - | - | - | - | 02 | | 03 |
| 12) மட்டக்களப்பு (TULF) | - | - | - | 01 | - | - | 02 | 03 |
| 13) திகாமடுல்லை (PA) | 04 | - | - | - | - | - | - | 04 |
| 14) திருகோணமலை (PA) | 02 | 01 | - | - | - | - | - | 03 |
| 15) குருநாகலை (PA) | 10 | 04 | - | - | - | - | - | 14 |
| 16) புத்தளம் (PA) | 04 | 01 | - | - | - | - | - | 05 |
| 17) அனுராதபுரம் (PA) | 06 | 01 | - | - | - | - | - | 07 |
| 18) பொலன்நறுவை (UNP) | - | 03 | - | - | - | - | - | 03 |
| 19) பதுளை (UNP) | 04 | 05 | - | - | - | - | - | 09 |
| 20) மொனராகலை (PA) | 03 | - | - | - | - | - | - | 03 |
| 21) இரத்தினபுரி (PA) | 08 | - | - | - | - | - | - | 08 |
| 22) கேகாலை (PA) | 08 | 01 | - | - | - | - | - | 09 |
| மொத்தம் | 109 | 36 | 05 | 05 | 01 | 02 | 02 | 160 |



## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2000 அகில இலங்கை ரீதியில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை.



நடைபெற்று முடிந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்தில் அரசாங்க பலத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்கு எந்தக்கட்சியும் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. விகிதாசார தேர்தல் முறையின் பிரதான ஒரு பண்பாகவே இது இருந்து வருகின்றது.

பராளுமன்றத்தில் அங்கத்தவர் எண்ணிக்கை 225 ஆகும். இதில் அரசாங்க பலத்தை ஒரு கட்சி பெறவேண்டுமாயின் குறைந்தது 113 உறுப்பினர்களையாவது பெறவேண்டும். 1989 -ம் ஆண்டில் விகிதாசார தேர்தல் முறையின் கீழ் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 125 உறுப்பினர்களை வென்றெடுத்த ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் அரசாங்கத்தை அமைத்தது. ஆனால் 1994 ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 105 பிரதிநிதிகளை பொதுசன ஐக்கிய முன்னணி வென்ற போதிலும் கூட பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மற்றும் நுவரெலியா - சுயேட்சைக்குழு (திரு சந்திரசேகரன்) என்பவற்றுடன் இணைந்து கூட்டரசாங்கத்தை அமைத்தது.

2000 ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளும் இந்நிலையைத் தான் தோற்றுவித்தது. பொதுசன ஐக்கிய முன்னணி இத்தேர்தலில் 107 ஆசனங்களை வெற்றிகொண்டது. எனவே அரசாங்க பலத்தைப் பொதுசன ஐக்கிய முன்னணி பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் கூட்டரசாங்கமொன்றினை அமைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. எனவே தேர்தல் காலங்களில் நகைப்புக்குரிய ஒரு பொருளாக்கப்பட்ட சிறுபான்மைக் கட்சிகளின் உதவியை மீண்டும் நாடவேண்டிய நிலை பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டது. எனவே 11 வது பாராளுமன்றத்திலும் தேசிய ஐக்கிய முன்னணி (NUA), ஈழமக்கள் ஜனநாயக முன்னணி (EPDP) ஆகியவற்றின் கூட்டுடனே அரசாங்கமமைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பாராளுமன்ற ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை | : | 225 |
| அரசாங்க பலத்தைப் பெற தேவையான பிரதிநிதித்துவம் | : | 113 |
| பொதுசன ஐக்கிய முன்னணி பெற்ற பிரதிநிதிகள். | : | 107 |
| EPDP பெற்ற பிரதிநிதிகள் | : | 05 |
| NUA பெற்ற பிரதிநிதிகள் | : | 04 |

PA கூட்டரசாங்கத்தின் பலம் : 116 பிரதிநிதிகள்.
எனவே 1994 -ம் ஆண்டு அமைக்கப்பட்ட 10-வது பாராளுமன்றத்தைப் போலவே இப்பாராளுமன்றமும் ஓரிரு பெரும்பான்மைப் பலத்துடன் அமைக்கப்பட்டிருப்பது அவதானிக்கத்தக்கதாகும்.

32676 116

இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறை காணப்படுவதினால், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார பலத்தினால் 10 வது பாராளுமன்றத்தைப் போலவே 11 - வது பாராளுமன்றமும் நிலைத்திருக்கும் என எதிர்பார்க்கலாம். வெஸ்மினிஸ்டர் ஆட்சிமுறை காணப்படின் பலகட்சிமுறை நிலவும் இலங்கையில் தற்போது அமைந்துள்ள பாராளுமன்றம் நிலைத்திருப்பது கடினமானது.

11 -வது பாராளுமன்றத்தில் பொதுசன ஐக்கிய முன்னணிக் கட்சியில் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) போன்ற இடதுசாரிக் கட்சிகளும், மேலும் சில கட்சிகளும் இணைந்துள்ளன. மறுபுறமாக பொதுசன ஐக்கிய முன்னணி கூட்டரசாங்கத்தை அமைத்துள்ளமையால் EPDP. NUA போன்றனவும் இணைந்துள்ளன. எனவே பொதுசன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள கட்சிகளினதும், கூட்டரசாங்கத்தைத் தோற்றுவித்துள்ள கட்சிகளினதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய இக்கட்டான நிலை PA தலைமைத்துவத்துக்கு உண்டு. பொதுசன ஐக்கிய முன்னணி கட்சியுடன் இணைந்துள்ள சிறுகட்சிகளின் ஒப்பந்தத்துக்கமைய அமைச்சரவைப்பதவிகள், அதேபோல கூட்டரசாங்கத்துடன் பேரம் பேசப்பட்ட அமைச்சரவைப்பதவிகள் போன்றவற்றை வழங்குவதுடன், கூட்டரசாங்கம் உடைந்து விடாது பாதுகாத்துக் கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையும் பொதுசன ஐக்கிய முன்னணித் தலைவி சந்திரிக்கா குமாரதுங்க அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நெருக்கடி நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணியினால் அமைக்கப்பட்ட அமைச்சரவை, மறுபக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

## பொதுசன ஐக்கிய முன்னணியின் புதிய அமைச்சரவை.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் புதிய அமைச்சர்கள் ஒக்டோபர் 19ம் திகதி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டனர்.
இவ்வமைச்சரவையில் 7 சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட மொத்தமாக 44 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

★ பாதுகாப்பு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் - ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க.
★ பௌத்த சாசன, சமய விவகாரம் மற்றும் தோட்டத்துறை அமைச்சர். பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க.
★ விவசாய அமைச்சர் - தி. மு. ஜயரட்ன.
★ சமுர்த்தி, கிராமிய அபிவிருத்தி, பாராளுமன்ற விவகார அமைச்சர் - எஸ். பி. திசாநாயக்க.
★ நீதி அமைச்சர் - பெட்டி வீரக்கோன்.
★ உயர்கல்வி, தகவல், தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சர் - இந்திக குணவர்தன.
★ தோட்டத்துறை உட்கட்டமைப்பு, கால்நடைகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்.
★ உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக, வாணிப, முஸ்லிம் சமய கலாசார மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் - ரவூப் ஹக்கீம்.
★ புனர்வாழ்வு அபிவிருத்தி, வடமாகாண புனரமைப்பு, வடக்கு, கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் - டக்ளஸ் தேவானந்தா.
★ போக்குவரத்து அமைச்சர் - தினேஷ் குணவர்த்தன.
★ இலாகா அற்ற அமைச்சர் - விஜேபால மெண்டிஸ்.
★ துறைமுக அபிவிருத்தி மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் - ரொனி டி மெல்.
★ மீன்பிடித்துறை, நீரியல் வள அமைச்சர் - மஹிந்த ராஜபக்ஷ.
★ பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், நிர்வாக சீர்திருத்த அமைச்சர்- ரிச்சர்ட் பத்திரன.
★ தொழில் பயிற்சி அமைச்சர் - அமரசிறி தொடங்கொட.
★ தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர் - நிமல் சிறிபால டி சில்வா.
★ நகர அபிவிருத்தி, நிர்மாண, பொது உபயோக அமைச்சர் - மங்கள சமரவீர
★ எரிபொருள், மின்சக்தி அமைச்சர் - அநுருத்த ரத்வத்த.
★ நெடுஞ்சாலைகள் அமைச்சர் - ஏ. எச். எம். பௌஸி.
★ வெளிவிவகார அமைச்சர் - லக்ஷ்மன் கதிர்காமர்.



★ அரசியலமைப்பு விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ்
★ விமான, விமான நிலைய அபிவிருத்தி அமைச்சர் - ஜெயராஜ் பெர்னான்டோ பிள்ளை.
★ மகாவலி அபிவிருத்தி அமைச்சர் - மைத்திரிபால சிறிசேன.
★ தொழில் அமைச்சர் - அலவி மௌலானா.
★ மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் -நந்தமித்ர ஏக்கநாயக்க.
★ சுகாதார அமைச்சர் - டபிள்யூ டி. ஜே. செனவிரத்ன.
★ மகளிர் விவகார அமைச்சர் - திருமதி சுமேதா ஜயசேன.
★ வனவள, சுற்றாடல் அமைச்சர் - மஹிந்த விஜேசேக்கர.
★ நீர்ப்பாசன, நீர்வள, முகாமைத்துவ அமைச்சர்- சரத் அமுனுகம.
★ உணவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் - ரெஜி ரணதுங்க.
★ கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் - எச். பி. சோமசிங்க.
★ கலாசார அமைச்சர் - எம். சி கோபல்லாவ.
★ சமூகசேவைகள், மீனவ சமூகத்துக்கான வீட்டு அபிவிருத்தி அமைச்சர். மில்ரோய் பெர்ணான்டோ.
★ இளைஞர் விவகார அமைச்சர் -ஜீவன் குமாரதுங்க.
★ திட்ட அமுலாக்க அமைச்சர் - திருமதி பவித்ரா வண்ணியாரச்சி.
★ சுற்றுலா, விளையாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல.
★ இன விவகார, தேசிய நல்லிணக்க அமைச்சர் - ரெஜினால்ட் குரே.
★ நில அபிவிருத்தி, சிறு ஏற்றுமதி, விவசாய அமைச்சர்- சாலிந்த திசாநாயக்க.
★ தொடர்பு சாதன வெகுசனத்தொடர்பு அமைச்சர் அநுர பிரியதர்ஷனயாப்பா.
★ சுதேச வைத்திய அமைச்சர் - திஸ்ஸ கரலியத்த.
★ கிராம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் - மஹிபால ஹேரத்.
★ கல்வி அமைச்சர் - சுசில் பிரேம ஜயந்த.
★ விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் - பேராசிரியர் லெஸ்லி குணவர்தன.
★ கிழக்கு அபிவிருத்தி, கிராம வீடுகள், புனரமைப்பு அமைச்சர் - திருமதி ஃபேரியல் அஷ்ரப்.
(இவர் ஜனாதிபதி மாளிகையில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள வில்லை. பின்னர் இவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்)

இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம் பெண் அமைச்சர் ஒருவர் இடம்பெற்றிருப்பது இதவே முதற்தடவை. சுசில் பிரேமஜயந்த, பேராசிரியர் வெஸ்லி குணவர்தன மற்றும் திருமதி ஃபேரியல் அஷ்ரப் ஆகிய மூவரும் முதற்தடவையாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவான அதேநேரம் அமைச்சரவைப் பொறுப்பையும் ஏற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பொதுசன ஐக்கியமுன்னணியின் பிரதியமைச்சர்கள்.

1. புத்த சாசனம் மற்றும் சமய விவகாரம் : எதிரிவீர பிரேமரட்ன.
2. பெருந்தோட்டத்துறை : நொயல் பத்மசிறி
3. துறைமுக அபிவிருத்தி மற்றும் தென்மாகாண அபிவிருத்தி : சமல் ராஜபக்ஷ.
4. விவசாயம் : சரத் கீர்த்திரத்ன, டி. எம். தஸநாயக்க.
5. கடற்றொழில், நீரியல்வள அபிவிருத்தி : எம். பி. எம். அப்துல்காதர்.
6. தொழில் பயிற்சி : சந்திரசிறி கஜதீர
7. தபால்,தொலைத்தொடர்பு : அப்துல் மஜீத்.
8. சமுர்த்தி, கிராம அபிவிருத்தி, பாராளுமன்றவிவகார, மலைநாட்டு அபிவிருத்தி. : டளஸ் அழகப்பெரும
9. நகர அபிவிருத்தி, நிர்மாண, பொது வசதிகள : சந்தன ஆரச்சி, ஜகத் பாலசூரிய
10. எரிசக்தி, மின்சக்தி : பீலிக்ஸ் பெரேரா.
11. நெடுஞ்சாலைகள் : அலுத்கமகே மஹிந்தானந்த, முனிதாஸ பிரேமசந்திர.
12. வெளிவிவகாரம் : ஹரேந்திர கொயரா.
13. அரசியல் சாசன விவகார, கைத்தொழில் அபிவிருத்தி : பியதாஸ கமகே
14. மகாவலி அபிவிருத்தி : விஜிதமுனி சொய்ஸா.
15. தொழில் : நீல்ருபசிங்க.
16. சுகாதாரம் : ஜனகபண்டார தென்னகோன், லயனல் குணவர்தன.
17. வனவள, சுற்றாடல்: பண்டுக பண்டாரநாயக்க.
18. நீர்ப்பாசன, நீரியல்வள முகாமைத்துவம் : சாந்த பிரேமரத்ன.
19. தோட்ட உட்கட்டமைப்பு, கால் நடை அபிவிருத்தி : ஹீன்மாத்தயா லியனகே.
20. உணவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி : நந்தசேன ஹேரத்.
21. கலாசார விவகாரம் : டி.பி. ஏக்கநாயக்க.
22. சமூகசேவைகள், மீனவ வீடமைப்பு அபிவிருத்தி : மேர்வின் சில்வா.
23. இளைஞர்விவகாரம் : பிரியங்கர ஜயரத்ன.
24. இன விவகார, தேசிய நல்லிணக்கம் :கணேசமூர்த்தி, நூர்தீன் மசூர்.
25. காணி அபிவிருத்தி மற்றும் சிறு ஏற்றுமதி விவசாயம் : ஜே. ஏ. ரணவீர.
26. வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் விவகாரம் : பி. சுமதிபால
27. கல்வி : டியூடர் தயாரத்ன, ஏ. எல். எம். அதாவுல்லாஹ்
28. போக்குவரத்து : குமார வெல்கம.
29. கிழக்கு அபிவிருத்தி ,புனர்வாழ்வு, புனரமைப்பு, கிராமிய வீடமைப்பு : எதிரிவீர வீரவர்தன.



அமைச்சரவை அமைக்கப்பட்டு சுமார் இரண்டு வாரங்களின் பின்னர் (2000 - 11 - 03 ம் திகதி) பிரதியமைச்சர்கள் ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். அமைச்சரவையின் எண்ணிக்கையினைப் பார்க்கும் போதும், அமைச்சரவை அமைக்கப்பட்டு பிரதியமைச்சர்களை நியமிக்க ஏற்பட்ட தாமத்தினைப் பார்க்கும் போதும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

**அரசாங்க சார்பு பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| பொதுசன ஐக்கிய முன்னணி | 107 |
| ஈழமக்கள் ஜனநாயக முன்னணி | 05 |
| தேசிய ஐக்கிய முன்னணி | 04 |
| **மொத்தம்** | **116** |

| | |
|---|---|
| அமைச்சரவை அங்கத்தினர் | 44 |
| பிரதியமைச்சர்கள் | 35 |
| **மொத்தம்** | **79** |

ஆளும்கட்சியின் மொத்தப்பிரதிநிதிகளுள் 68.10% நிர்வாகம் சார்ந்திருப்பதை அவதானிக்கலாம். இப்புத்தகம் அச்சுக்குப் போகும் போது (2000 - 11 - 05 ம் திகதி) காணப்பட்ட நிலை இதுவாகும். ஆனால் பிரதியமைச்சர் பதவிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்க இடமுண்டு. ஏனெனில் அமைச்சரவையில் பாதுகாப்பு, நிதி உட்பட மேலும் 15 அமைச்சர்களுக்கு இன்னும் பிரதியமைச்சர்கள் நியமிக்கப்படவில்லை. எனவே இந்த அமைச்சர்களுக்கும் பிரதியமைச்சர்கள் நியமிக்கப்பட்டால் எண்ணிக்கை அதிகரிக்க இடமுண்டு.

1994 -ம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது தேர்தல் பிரசாரங்களில் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை எண்ணிக்கையைப் பலமாக விமர்சித்து தான் பதவிக்கு வந்தால் அமைச்சரவை எண்ணிக்கையை 20 ஆகக் குறைப்பதாக வாக்குறுதியளித்தது அதற்கமைய 1994 இல் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைச்சரவை எண்ணிக்கையை 23 ஆக வரையறை செய்தது. ஆனால் 2000 ஆண்டில் இந்நிலை நேர்மாற்றடைந்திருப்பதை அவதானிக்கலாம்.

## சுதந்திர இலங்கையின் அமைச்சர்களின் எண்ணிக்கை

| ஆண்டு | அரசாங்கம் | பிரதம மந்திரி / ஜனாதிபதி | அமைச்சர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1947 -1952 | ஐ. தே. க | D.S. சேனாநாயக்க | 14 |
| 1952 -1953 | ஐ. தே. க | டட்லி சேனாநாயக்க | 14 |
| 1953 -1956 | ஐ. தே. க | சார் ஜோன்கொத்தலாவல | 14 |
| 1956 -1959 | ம. ஐ. மு. | S.W.R.D. பண்டாரநாயக்க | 14 (பின் 16) |
| 1959 -1960 | எல். பி. பி. | W. தஹநாயக்க | 28 |
| 1960 | ஐ. தே. க. | டட்லி சேனாநாயக்க | 08 |
| 1960 -1965 | ஸ்ரீ. ல.சு. க | ஸ்ரீமாவோபண்டாராநாயக்க | 11 (பின் 12) (பின் 15) |
| 1965 -1970 | ஐ. தே. க | டட்லி சேனாநாயக்க | 17 |
| 1970 -1977 | ஐ. சோ. மு | ஸ்ரீமாவோபண்டாரளநாயக்க | 20 |
| 1977 -1989 | ஐ. தே. க. | J.R. ஜயவர்தனா | 24 (பின் 27) |
| 1989 -1994 | ஐ. தே. க. | R. பிரேமதாச | 22 (பின் 26) (பின்27) |
| 1994 -2000 | பொ. ஐ. மு. | சந்திரிக்கா குமாரதுங்க | 23 (பின் 38) |
| 2000 | பொ. ஐ. மு. | சந்திரிக்கா குமாரதுங்க | 44 (பின் ?) |

## சில உலக நாடுகளின் அமைச்சர்களின் எண்ணிக்கை.

| நாடு | சனத்தொகை (மில்லியனில்) | அமைச்சாகள் எண்ணிக்கை |
|---|---|---|
| இந்தியா | 1000 | 26 |
| ஐ. அமெரிக்கா | 274.6 | 14 |
| ரஷ்யா | 150 | 25 |
| பாகிஸ்தான் | 130.6 | 13 |
| பங்களாதேஷ் | 130 | 22 |
| ஜப்பான் | 120 | 19 |
| ஐ. இராச்சியம் | 59.2 | 22 |
| கனடா | 31.1 | 36 |
| மலேசியா | 22.5 | 23 |
| இலங்கை | 18 | 44 |



## 1989 / 1994 / 2000 ம் ஆண்டுப் பொதுத்தேர்தல்களில் மாவட்டரீதியான முடிவுகள்.

| தேர்தல் மாவட்டம் | 1989 | 1994 | 2000 |
|---|---|---|---|
| 1) கொழும்பு | ஐ. தே. க. | பொ. ஐ. மு | ஐ. தே. க. |
| 2) கம்பஹா | ஐ. தே.க. | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 3) களுத்துறை | ஐ. தே. க. | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 4) கண்டி | ஐ. தே. க. | ஐ. தே. க. | பொ. ஐ. மு |
| 5) மாத்தளை | ஐ. தே. க. | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 6) நுவரெலியா | ஐ. தே. க. | ஐ. தே. க | பொ. ஐ. மு |
| 7) காலி | ஐ. தே. க | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 8) மாத்தரை | ஐ. தே. க | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 9) ஹம்பாந்தோட்டை | ஐ. தே. க | பொ. ஐ. மு | ஐ. தே. க |
| 10) யாழ்ப்பாணம் | சுயேட்சை | சுயேட்சை | ஈ. பீ. டீ. பி |
| 11) வன்னி | த.வி.கூ | புளொட் | டெலோ |
| 12) மட்டக்களப்பு | த.வி.கூ | த.வி.கூ | த.வி.கூ |
| 13) திகாமடுல்லை | ஐ. தே. க | ஐ. தே. க | பொ. ஐ. மு |
| 14) திருகோணமலை | ஸ்ரீ.ல.சு.க. | ஐ. தே. க | பொ. ஐ. மு |
| 15) குருநாகலை | ஐ. தே. க | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 16) புத்தளம் | ஐ. தே. க | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 17) அனுராதபுரம் | ஐ. தே. க | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 18) பொலன்நறுவை | ஐ. தே. க | பொ. ஐ. மு | ஐ. தே. க |
| 19) பதுளை | ஐ. தே. க | ஐ. தே. க | ஐ. தே. க |
| 20) மொனராகலை | ஐ. தே. க | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 21) இரத்தினபுரி | ஐ. தே. க | பொ. ஐ. மு | பொ. ஐ. மு |
| 22) கேகாலை | ஐ. தே. க | ஐ. தே. க | பொ. ஐ. மு |

# 2000 - ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் போக்குகளும், அரசியல் கட்சிகளின் நிலைகளும்

இலங்கை அரசியலில், மிலேனியத்தில் நடைபெற்ற முதலாவது தேர்தலானது - அதாவது பாராளுமன்றத்திற்கான 11 வது பொதுத்தேர்தலானது பல விமர்சனங்களுக்கு உட்பட்ட, அடாவடித்தனமிக்கதொரு தேர்தலாகவே விமர்சகர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

புராதன கிரேக்க நகர அரசுக்காலத்தில் காணப்பட்ட நேரடி ஜனநாயக முறையை இன்று காணமுடியாது. நாடுகளின் வியாபகமும், சனத்தொகைப் பெருக்கமும் நேரடிஜனநாயகத்துக்குத் தடைக்கல்லாக அமைகின்றன. எனவேதான் நவீன காலத்தில் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து - அப்பிரதிநிதிகளினூடாக ஆட்சி நடவடிக்கைகளில் ஈடுபடத்தக்க வகையிலான பிரதிநிதித்துவ ஜனநாயகம், உலக ஜனநாயகத்தின் மூலாதாரமாகக் கொள்ளப்படுகின்றது, அதாவது வாக்குரிமைதான் இன்றைய அரசியல் உரிமையின் அடிப்படையினை வழங்குகின்றது. எமது இலங்கையில் 1931 ம் ஆண்டில் டொனமூர் அரசியலமைப்பினூடாக இந்த உரிமை வழங்கப்பட்டது.

10 -வது பாராளுமன்றம் 2000 ஆகஸ்ட் மாதம் 16 -ம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டதையடுத்து இலங்கையில் தேர்தல்களம் சூடுபிடித்ததை விட, தேர்தல் வன்முறைகள் சூடுபிடிக்க ஆரம்பித்தன. முன்னெப்போதும் காணமுடியாத அளவிற்கு வர்ணவர்ண சுவரொட்டிகள் மதில்கள் முதல், குப்பைத்தொட்டி வரை அலங்கரித்தன. கட்சிக்கான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதை விட விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்வதிலேயே அதிகமான வேட்பாளர்கள் கரிசனை காட்டியதன் விளைவே மில்லியன் கணக்கில் பெறுமதிமிக்க சுவரொட்டிகள் தேசத்தை வர்ணமயமாக்கிச் சோடித்தன.

2000 -ம் ஆகஸ்ட் 16 -ம் திகதி ஸ்ரீலங்கா சனநாயகக் குடியரசின் 10 வது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து தேர்தல் வன்முறைகளுக்கான களம் திறக்கப்பட்டது.



2000 -ம் ஆகஸ்ட் 19 -ம் திகதி அதிகாலையில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளரும், கொழும்பு பாமன்கடையை வதிவிடமாகவும் கொண்ட 'சம்பிக்க' என்பவர் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த வேளையில் இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார். பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே இடம்பெற்ற இம்மனிதப் படுகொலை அநேகரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இலங்கையின் தனியார் தொலைகாட்சி நிறுவனங்களும், தனியார் பத்திரிகைகளும் இச்செய்திக்கு அதிமுக்கியத்துவத்தைக் கொடுத்தன.

இச்சம்பவம் நடைபெற்று சில தினங்களுக்குப்பின் அதாவது ஆகஸ்ட் 23 - ம் திகதி கேகாலை, கண்டி வீதியில் ஐக்கியதேசியக்கட்சி ஆதரவாளரான சமன்குமார என்பவர் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த போது இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கையின் பாராளுமன்றத்தை நிர்ணயிக்கப்போவது ஜனநாயக ரீதியான வாக்களிப்பா? அல்லது தேர்தல் வன்முறையா? என்ற அங்கலாய்ப்பு மக்கள் உள்ளங்களில் வேரூன்றத் தொடங்கியது. தொடர்ந்து பொலநறுவை மன்னம் பிட்டியவில் ஐ. தே. கட்சி ஆதரவாளர்களுக்கும் பொ. ஐ. முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பலர் காயமுற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறாக பல சம்பவங்கள் ஆனமடுவை, மஹியங்கனை, கண்டி, மாத்தளை, சிலாபம், புத்தளம், வாரியப்பொல, நுவரெலியா, அனுராதபுரம், பொலநறுவை... போன்ற பல இடங்களிலும் நடைபெற்றன.

விசேடமாக திகாமடுல்லை மாவட்டத்தில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று ஊர்வலமாக வாகனத்தில் சென்ற ஐ. தே. க. ஆதரவாளர்கள் மீது அக்கரைப்பற்று பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதினால் ஏழு பேர் காயமடைந்தனர். இருவர் மரணமடைந்தனர். செப்டம்பர் 10 -ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட பொதுசன ஐக்கிய முன்னணி முதன்மை வேட்பாளர் செழியன் பேரின்ப நாயகமும், திகாமடுல்லை மாவட்ட தமிழ்ப்பிரிவு பொ. ஐ. முன்னணியின் அமைப்பாளர் மனோகரன் பிள்ளையும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அக்டோபர் 2 -ம் திகதி பொதுசன ஐக்கிய முன்னணியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரான பைத்துல்லாஹ்வின் பிரசாரக் கூட்டமொன்று மூதூரில் நடைபெற்ற வேளையில் தற்கொலை குண்டுதாரியின் குண்டிற்கு பைத்துல்லாஹ் உட்பட 26 பேர் பலியாகினர். மேலும் அக்டோபர் 05 - ம் திகதி பொ. ச. ஐக்கிய

முன்னணியின் பிரசாரக் கூட்டமொன்று மதவாச்சியில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது வெடித்த மனிதக் குண்டினால் பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் பிரதி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த உட்பட பத்துப்பேர் பலியானதுடன் 43 பேர் படுகாயமடைந்தனர்.

இவ்வாறாக பாராளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் தினமான அக்டோபர் 10 -ம் திகதிவரை நாடளாவியரீதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. பல உயிர்கள் பலியாகின. துப்பாக்கிச் சூடுகள், மனிதப்படுகொலைகள், கைக்குண்டு வீசுதல், தீவைப்புச்சம்பவங்கள், தாக்குதல்கள் என்பன இத்தேர்தல் காலத்தில் சர்வசாதாரணமான நிகழ்வாகவே இருந்தது.

தேர்தல் தினத்தன்றும் பல பிரதேசங்களில் பயமுறுத்தல்கள், பலவந்தவாக்களிப்புகள் என்பன இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. வட பகுதியிலும் இதே நிலை நடைபெற்றிருக்கின்றது.

எப்படியோ -

தேர்தல் வன்முறைகளுடன் கூடிய 11 -வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்று முடிந்துவிட்டது. தேர்தலைக் கண்காணிப்பதற்கு தேசிய, சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டாலும் கூட தேர்தல் முடிவுகளைப் பெருமளவில் பாதிக்கக் கூடியதாக இவர்களின் அறிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. மக்களின் எதிர்கால அரசியல் உரிமைகளை கேள்விக்குறியாக்கிவிட்டு, தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. 107 பிரதிநிதிகளை வென்றெடுத்த பொதுசன ஐக்கிய முன்னணி முதலாமிடத்தையும், 89 பிரதிநிதிகளை வென்றெடுத்த ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாமிடத்தையும் 10 பிரதிநிதிகளை வென்றெடுத்த மக்கள் விடுதலை முன்னணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. இப்பொதுத்தேர்தலில் போட்டியிட்ட மீதமான 26 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும், 99 சுயேட்சைக்குழுக்களினாலும் மீதமான 19 ஆசனங்களை மட்டுமே வெற்றிகொள்ள முடிந்தது. எனவே மக்கள் அபிப்பிராயங்கள் பிரதானமாக பொதுசன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றைச் சுற்றியே உள்ளதென்பது மறுப்பதற்கு இயலாது.

ஆகவே இப்பொதுத்தேர்தலில் 100,000 வாக்குகளுக்கு மேல்பெற்ற கட்சிகளின் நிலைப்பாடுகள் பற்றி ஆராய்வது பயனுடையதாக இருக்கலாம்.

**11 *வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் பொதுசன ஐக்கிய முன்னணியும்.***

விகிதாசார தேர்தல் முறையின்கீழ் இலங்கையின் 3 வது பாராளு



மன்றப்பொதுத்தேர்தல் நடைபெற்று முடிந்து விட்டது. ஆட்சி அதிகாரத்தில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளவே முனையும். அதுவும் ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் அதிகாரத்தில் உள்ள சனாதிபதிக்கு இது பெருமளவில் சாத்தியப்படக்கூடிய வாய்ப்புண்டு.

1978 -ம் ஆண்டு அரசியலமைப்பின் 7 ஆவது அத்தியாயம் 30 வது உறுப்புரையின் 1 ஆம்பந்தி சனாதிபதியின் தத்துவங்களைப் பின்வருமாறு வரையறைசெய்கின்றது. அதாவது ''இலங்கைக் குடியரசுக்கு சனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவரே அரசின் தலைவரும், ஆட்சித்துறையின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும், ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவருமாவார்''. 30 வது உறுப்புரையின் 2 ஆம் பந்தி ''ஆறு ஆண்டுகளைக் கொண்ட பதவிக்காலத்துக்கென சனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்'' எனக் கூறப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 38 ஆவது உறுப்புரை 1 - ஆம் பந்தி சனாதிபதிப் பதவி வெற்றிடமாகக் கூடிய சந்தர்ப்பங்கள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது

1. பதவிக்காலத்தில் இறத்தல்.
2. தன் கைப்பட இராஜினாமாவை சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல்.
3. இலங்கைப் பிரஜை என்ற அந்தஸ்தை இழத்தல்.
4. பதவிக்காலம் தொடங்கி ஒரு மாதத்துக்குள் பதவி ஏற்காது விடல்.
5. 38 (2) இல் ஏதேனும் குற்றச்சாட்டின் படி பதவி நீக்கம் செய்யப்பட்டால்.
6. தெரிவு பிழையானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால். மேற்குறித்த நிலைகளிலேயே சனாதிபதிப்பதவி வெற்றிடமாகும்.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரமிக்க சனாதிபதிக்கெதிராக குற்றப்பிரேரணை கொண்டு வரக்கூடிய வழிமுறைபற்றி அரசியலமைப்பின் 38 (2) அ பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் எவரும் சபாநாயகருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் மனப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் காரணமாக அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதுள்ளார் எனச் சார்த்துகின்ற அல்லது சனாதிபதி பின்வருவனவற்றைப் புரிந்ததற்குக் குற்றவாளியாக உள்ளாரெனச் சார்த்துகின்ற தீர்மானம் பற்றி அறிவித்தல் ஒன்றைக் கொடுக்கலாம்.

1. அரசியலமைப்பினை வேண்டுமென்றெ மீறிய குற்றம்.
2. தேசத்துரோகம் புரிந்த குற்றம்.
3. இலஞ்சம் பெற்ற குற்றம்.
4. தமது பதவிக்குரிய அதிகாரத்தை துர்ப்பிரயோகம் செய்தமையை

உள்ளடக்கிய துர்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றம்.
5. அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் ஏதேனும் சட்டத்தின் தவறு.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை நடத்தும்படி உயர்நீதி மன்றத்தைக் கோர பாராளுமன்ற உறுப்பினர்களால் முடியும். இச்சந்தர்ப்பத்தில் குறித்த குற்றச் சாட்டுகள் எழுத்து மூலம் குறிக்கப்பட்டு பாராளுமன்ற அங்கத்தவர்களுள் 2/3 க்குக் குறையாதோர் கையொப்பத்துடன் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கலாம்.

குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டால் மூன்று படிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1, குறித்த பிரேரணை பாராளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விவாத முடிவில் நடத்தப்படும் வாக்கெடுப்பில் சமுகமளிக்காத உறுப்பினர் எண்ணிக்கை உட்பட 2/3 பெரும்பான்மை வாக்குகள் பெறப்படின் மேற்குறித்த பிரேரணை குறித்து விசாரிக்கலாம்.

2, உயர்நீதிமன்றம் குறித்த பிரேரணையை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் இவ்விடயத்தில் தான் குற்றவாளி அல்ல என நிருபிக்கவும், தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிருபிக்கவும் சனாதிபதியால் அல்லது அவரின் சட்டத்தரணியால் சாட்சியமளிக்க யாப்பில் இடம் வழங்கப்பட்டுள்ளது. (129 (2) உறுப்புரைப்படி இந்த விசாரணை இரண்டு மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படல் வேண்டும்).

3, சனாதிபதியால் மனப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் காரணமாக அவரது பதவியைத் தொடர்ந்தும் வகிக்க முடியாதென, அல்லது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை என உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிக்கை (தீர்ப்பு) சமர்ப்பிக்கும் இடத்து மீண்டும் பாராளுமன்றத்தில் சமுகமளிக்காத உறுப்பினர் உட்பட 2/3 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று சனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யலாம்.

சனாதிபதியைப் பதவி நீக்கம் செய்வது தொடர்பான சட்டவிதிகள் யாப்பில் இடம் பெற்ற போதிலும் கூட இது நடைமுறைக்கு சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறியே. இக்கருத்தினை 1978 -ம் ஆண்டில் இரண்டாம் குடியரசு யாப்பு பற்றிய விவாதத்தில் கலாநிதி N.M. பெரேரா குறிப்பிட்டிருந்தார். இந்த அடிப்படையில் நோக்கும் போது தாம் பதவிக்கு வந்தால் மூன்று மாதத்துக்குள் சனாதிபதியை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தெரிவித்த கருத்து நகைப்புக்குரியதாகவே இருந்தது.



எனவே அவர் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட தினமான 1999 - 12 - 22ம் திகதியிலிருந்து இன்னும் ஆறு ஆண்டுகளுக்கு (2005 .02. 20 வரை) சனாதிபதியாக இருப்பார் என எதிர்பார்க்கலாம்.

சனாதிபதியாக பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவி இருக்கும்போது அரசாங்கமும் பொதுசன ஐக்கிய முன்னணியே அமைய வேண்டும் என மக்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

நடந்து முடிந்த 11 -வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 107 பிரதிநிதிகளைப் பெற்று பொதுசன ஐக்கிய முன்னணி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. 1994 -ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்பு தேசியமட்டத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுளை ஒப்பு நோக்கும் போது பொதுசன ஐக்கிய முன்னணியின் பால் மக்களின் விருப்புக்கள் தளம்பல் நிலையிலிருப்பதை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அட்டவணைகளில் இணைக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களை நோக்கும் போது புரிந்து கொள்ள முடியும்.

பொதுவாக பொதுசன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளில் ஸ்திரத்தன்மையின்மை இதற்கு ஒரு காரணமாக சுட்டிக் காட்டப்படுகின்றது. 1977 முதல் 1994 ம் ஆண்டுவரை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாலனயுகத்திலிருந்து வெற்றிகொள்வதற்காக பொதுசன ஐக்கிய முன்னணி பல வாக்குறுதிகளை மக்கள் முன்னிலையில் வைத்து, 1994 -ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியது. ஆனால் கடந்த ஆறுஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளில் அதிகமானவை நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கத்தக்கது. குறிப்பாக இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்க்குமுகமாக தீர்வுத்திட்டமொன்றினை முன்வைப்பதில் பொதுசன ஐக்கிய முன்னணி அன்று தேர்தல் நேரத்தில் காட்டிய வேகம் தேர்தல் முடிந்த பிற்பாடு காணப்பட வில்லை. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு நேரம் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் ஆகஸ்ட் மாதம் 3 -ம் திகதி இத்தீர்வுப்பொதி பாராளுமன்ற விவாதத்திற்கு முன்வைக்கப்பட்டது. இலங்கையில் பௌத்த பிக்குகளின் எதிர்ப்புகளினாலும், ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சில பேரினவாதக் கட்சிகளின் எதிர்ப்பினாலும் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடாமல் பிற்போட்டப்பட்டது.

இது மட்டுமல்லாமல் இளைஞர்கள் மத்தியில் வேலையின்மை அதிகரித்தமையாலும், அத்தியவசியப்பொருட்களின் விலையேற்றம் காரணமாகவும், வாலிப, பாமர மக்கள் மத்தியில் பொதுசன ஐக்கிய முன்னணி பற்றிய நம்பிக்கை தளர்ந்திருந்தது. குறிப்பாக ஹம்பாந்தோட்டை,

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 1994
கட்சிகள் பெற்ற மாவட்ட வெற்றி






# பொதுசன ஐக்கிய முன்னணி

| மாவட்டம் | 1994 சனாதி பதித் தேர்தல் | 1999 மாகாண சபைத் தேர்தல் | 1999 சனாதி பதித் தேர்தல் | 2000 பாராளு மன்றப் பொதுத் தேர்தல் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 557,708 | 313,576 | 474,310 | 394,146 |
| கம்பஹா | 550,654 | 376,176 | 532,796 | 470,018 |
| களுத்துறை | 295,686 | 198,702 | 281,217 | 255,175 |
| கண்டி | 320,110 | 247,250 | 308,187 | 282,282 |
| மாத்தளை | 121,449 | 95,115 | 111,232 | 110,213 |
| நுவரெலியா | 168,929 | 79,264 | 147,210 | 158,018 |
| காலி | 285,398 | 214,714 | 281,154 | 264,601 |
| மாத்தறை | 227,865 | 157,762 | 205,685 | 203,690 |
| ஹம்பாந்தோட்டை | 132,873 | 89,483 | 120,275 | 110,308 |
| யாழ்ப்பாணம் | 16,934 | | 52,043 | - |
| வன்னி | 33,858 | | 16,202 | 7,837 |
| மட்டக்களப்பு | 144,725 | | 58,975 | 16,510 |
| திகாமடுல்லை | 168,289 | | 118,499 | 136,423 |
| திருகோணமலை | 77,943 | | 56,691 | 53,860 |
| குருநாகலை | 403,838 | 405,431 | 373,483 | 358,794 |
| புத்தளம் | 165,795 | 160,722 | 141,725 | 138,747 |
| அனுராதபுரம் | 200,146 | 156,291 | 189,073 | 169,424 |
| பொலன்நறுவை. | 88,907 | 75,466 | 88,683 | 80,023 |
| பதுளை | 182,810 | 140,293 | 167,000 | 154,172 |
| மொனராகலை | 96,620 | 66,870 | 92,049 | 91,404 |
| இரத்தினபுரி | 257,265 | 191,502 | 250,409 | 244,142 |
| கேகாலை | 211,676 | 165,041 | 210,185 | 201,114 |
| மொத்தம் | 4,709,205 | 3,133,658 | 4,312,157 | 3,900,901 |
| சதவீதம் | 62.28% | 46.87% | 51.12% | 45.10% |

## 2000/1994/1989ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் P.A., (S.L.F.P.) பெற்ற வாக்கு வீதம்

| தேர்தல் மாவட்டம் | 2000 | 1994 | 1989 |
|---|---|---|---|
| 1) கொழும்பு | 38.86% | 50.94% | 28.29% |
| 2) கம்பஹா | 48.87% | 56.79% | 41.34% |
| 3) களுத்துரை | 46.86% | 53.77% | 40.94% |
| 4) கண்டி | 46.66% | 46.43% | 31.91% |
| 5) மாத்தளை | 50.53% | 49.85% | 32.82% |
| 6) நுவரெலியா | 52.53% | 32.35% | 27.18% |
| 7) காலி | 50.08% | 56.39% | 41.87% |
| 8) மாத்தரை | 51.47% | 59.90% | 35.28% |
| 9) ஹம்பாந்தோட்டை | 39.94% | 53.51% | 39.70% |
| 10) யாழ்ப்பாணம் | - | - | - |
| 11) வன்னி | 09.42% | 13.20% | 03.63% |
| 12) மட்டக்களப்பு | 08.86% | 11.07% | 02.66% |
| 13) திகாமடுல்லை | 51.13% | 22.49% | 21.24% |
| 14) திருகோணமலை | 40.46% | 19.19% | 22.61% |
| 15) குருநாகலை | 47.16% | 51.86% | 36.35% |
| 16) புத்தளம் | 48.39% | 53.64% | 32.22% |
| 17) அனுராதபுரம் | 48.33% | 55.18% | 38.92% |
| 18) பொலன்நறுவை | 44.98% | 51.17% | 33.29% |
| 19) பதுளை | 42.70% | 43.47% | 35.36% |
| 20) மொனராகலை | 49.69% | 50.40% | 43.73% |
| 21) இரத்தினபுரி | 50.62% | 50.77% | 36.38% |
| 22) கேகாலை | 48.88% | 47.91% | 28.28% |

1989 -ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி தோற்றம் பெற்றிருக்கவில்லை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனித்தே போட்டியிட்டது.



பொலநறுவை போன்ற தேர்தல் மாவட்டங்களில் பொ. ஐ. முன்னணியின் தோல்விக்கு இது பெருமளவில் பாதிப்பைச் செலுத்தியிருக்கலாம் எனக் கருதலாம். மறுபுறமாக கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி பெரியஅளவிலான பின்னடைவைக் கண்டுள்ளது வழமையாக நகர்சார் ஆதரவு ஐக்கிய தேசியக்கட்சிக்கு உண்டு என்பதை இது உறுதிப்படுத்துகின்றது.

எப்படியோ பொதுசன ஐக்கியமுன்னணியினால் தேர்தல் காலங்களில் முன்வைக்கப்பட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல், இளைஞர்களுக்குத் தொழில்வாய்ப்புக்களை வழங்குதல், இலங்கையில் வட பகுதியில் இடம்பெறும் யுத்தநிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து இலங்கையில் தலைவிரித்தாடும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை ஏற்படுத்துதல். மற்றும் வாழ்க்கைச் செலவினைக் குறைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடிவடிக்கை எடுத்தல் ... போன்றன முக்கிய சவால்களாக இருப்பதை அவதானிக்கலாம். அது மட்டுமல்லாமல் பொதுசன ஐக்கிய முன்னணியின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் முடிந்த பிற்பாடு மக்களை விட்டு வெகுதூரம் ஒதுங்கியிருப்பதை இம்முறையாவது குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பொதுவாக தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளை வாரிவழங்குவது மூன்றாம் உலக நாடுகளில் காணக்கூடிய ஒரு முக்கிய பண்பாகும். தேர்தல் விஞ்ஞாபனங்கள் மக்களுக்கு முன்வைக்கப்படும் போது மக்களின் வாக்குகளைக் கவரக்கூடிய வகையில்: செயற்படுத்தமுடியாத அளவிற்கு விடயங்களைக் குறிப்பிடுவது அண்மைக்காலங்களில் காணக்கூடிய மற்றுமொரு பொதுநிலையாக மாறியுள்ளது.

பொதுவாக தேர்தல் காலங்களில் கட்சிகளினால் முன்வைக்கப்படும் இத்தகைய வாக்குறுதிகளைப்பற்றியும், விருப்புவாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக தொலைக்காட்சி, பத்திரிகைகள், சுவரொட்டிகள், நோட்டீஸ்கள் போன்றனவற்றினூடாக மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் பற்றியும் வாக்காளர்களின் கருத்துக்களைப் பெற எத்தனித்தேன். 10 வது பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்திலிருந்து 11 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் முடிவடையும் தினம்வரை (2000 - 08 -16 முதல் 2000 - 10 - 07 ம் திகதி வரை) பாராளுமன்றப்பொதுத்தேர்தலில் தான் வாக்களிப்போம் எனக்கூறிய (வாக்களிக்கும் ஆர்வம் கொண்டிருந்தோர்) சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ வாக்காளர் மத்தியில் (படித்த, பாமர, வாலிப,

முதியோர், ஆண், பெண்) என்னால் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இருந்து (என்னால் வழங்கப்பட்ட கேள்வி கொத்தில் வினவப்பட்டிருந்த 7 வினாக்களுக்கு அமைய) பின்வரும் முடிவிற்கு என்னால் வர முடிந்தது. (இந்த ஆய்வினை கண்டி மாவட்டத்தில் மாத்திரமல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையில் திகாமடுல்லை, மட்டக்களப்பு, காலி, கொழும்பு, குருநாகலை, புத்தளம், நுவரெலியா, மாத்தளை, பதுளை, கம்பஹா போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த வாக்காளர்களிடத்தேயும் என்னால் மேற்கொள்ள முடிந்தது)

1, தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளினாலும், அபேட்சகர்களினாலும் வழங்கப்படும் வாக்குறுதிகளை நம்பி தமது வாக்கினைப் பிரயோகிக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள்

ஆண்கள் 07%, பெண்கள் 08%

2, அரசியல் கட்சிகளினால் வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனங்களை வாசித்து விளங்கி தமது வாக்கினைப் பிரயோகிக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள் (அரசியல் கட்சிகளினால் வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வாக்காளர் கைகளுக்குக் கிடைப்பதில்லை என இவர்கள் 83% மானோர் குறிப்பிட்டிருந்தனர்.)

ஆண்கள் 13%, பெண்கள் 06%

3, தொலைக்காட்சி, பத்திரிகை, நோட்டீஸ், சுவரொட்டி விளம்பரங்களைப் பார்த்து வாக்கினைப் பிரயோகிக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள்.

ஆண்கள் 03%, பெண்கள் 06%

4, வேட்பாளர்களின் கவர்ச்சி, பேச்சாற்றல், என்பவற்றை அவதானித்து வாக்கினைப் பிரயோகிக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள்.

ஆண்கள் 07%, பெண்கள் 06%

5, சமூக நோக்கிலும், வேட்பாளர்களின் ஆளுமைத்திறனிலும் தமது வாக்கினைப் பிரயோகிக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள்.

ஆண்கள் 22%, பெண்கள் 15%

6, ஏதாவது அரசியல் கட்சியொன்றின் மூலமாக (அல்லது ஒரு பிரதிநிதிமூலமாக) செய்நன்றிக்காக வாக்களிக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள்

ஆண்கள் 09%, பெண்கள் 18%

7, பெற்றோர் எந்த அரசியல் கட்சியை சார்ந்திருக்கிறார்களோ அல்லது கணவன் / மனைவி / குடும்ப அங்கத்தினர் எந்தக் கட்சியை சார்ந்திருக்கிறார்களோ அதேகட்சிக்கு வாக்களிக்க விருப்பம் கொண்டுள்ளவர்கள்.

ஆண்கள் 26%, பெண்கள் 37%



## 11 வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலும் ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடும்.

சுதந்திரத்தின் பின்னர் நீண்டகாலம் இலங்கையை ஆட்சிபுரிந்த அரசியல் கட்சி ஐக்கிய தேசியக்கட்சியாகும். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் இறுதித்தசாப்தங்களில் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்த தேசிய காங்கிரஸ் 1946 -ம் ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சியாக மாற்றமடைந்தது. அன்றிலிருந்து இன்றுவரை வலதுசாரிப்போக்கு மிக்கதாக செயல்படும் இக்கட்சி 1947 முதல் 1956 வரையும், 1965 முதல் 1970 வரையும் 1977 முதல் 1994 வரையும் இலங்கையை ஆட்சி புரிந்து வந்துள்ளது. 1977 ம் ஆண்டில் 4/5 பெரும்பான்மைப் பலத்துடன் அரசாங்கத்தை அமைத்த ஐக்கிய தேசியக் கட்சி 1978 பெப்ரவரி 04 ம் திகதி 2 -ம் குடியரசு யாப்பினை இலங்கையில் அமுல்படுத்தியது. இன்று வரை இலங்கையில் அமுலிலுள்ள அரசியல் யாப்பும் இதுவாகும். இந்யாப்பிலே நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஆட்சிமுறை, மற்றும் விகிதாசார தேர்தல் முறை என்பன அறிமுகம் செய்யப்பட்டன. 1983 -ம் ஆண்டில் நடைபெறவிருந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தலை ஐ. தே. கட்சி மக்கள் தீர்ப்பின் மூலமாக ஆறு ஆண்டுகளுக்குப் பிற்போட்டமையினால் விகிதாசார முறைக்கமைய முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 1989 -ம் ஆண்டில் நடத்தப்பட்டது முதலாவது விகிதாசாரத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 125 பிரதிநிதிகளை வென்று வெற்றியீட்டியது.

இதைத்தொடர்ந்து 1994 -ம் ஆண்டில், 17 ஆண்டுகளின் பின்னர் தோல்வியைத் தழுவிய ஐ. தே. க. இன்றும் அதே பின்னணியில் இருந்து வருகின்றது. 2000 ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 3, 477, 770 வாக்குகளைப் (40.21%) பெற்று இரண்டாம் இடத்தைப்பெற்றுக் கொண்டது. இத்தேர்தலில் 4 தேர்தல் மாவட்டங்களை மாத்திரமே ஐ. தே. க. யினால் வெற்றி கொள்ளமுடிந்தது. இருப்பினும் 1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தல் வெற்றியை அடுத்து பொதுசன ஐக்கிய முன்னணியால் நடத்தப்பட்ட பிரதான தேர்தல்களான 1994 சனாதிபதித்தேர்தல், 1997 மாகாண சபைத்தேர்தல் 1999 சனாதிபதித்தேர்தல் மற்றும் 2000 பாராளுமன்றப் பொதுத்தேர்தல் என்பனவற்றில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திகாமடுல்லை, குருநாகலை, அனுராதபுரம், பொலநறுவை, மொனராகலை, இரத்தினபுரி ஆகிய தேர்தல் மாவட்டங்களில் படிப்படியாக அதிக வாக்குகளைப் பெற்று முன்னேற்றமடைந்து வருவது அவதானிக்கத்தக்கதாகும். இதனை மறுபக்கத்தில் உள்ள அட்டவணைகள் மூலமாக கண்டுகொள்ள முடியும்.

1994 ம் ஆண்டில் D. B. விஜேயதுங்க அவர்களைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டார். 1977 - 1994 இடைப்பட்ட 17 வருட ஐ. தே. க. பாலன காலத்தில் புரிந்ததாகக்கூறப்படும் அடாவடித்தனமான நடவடிக்கைகளின் பாதிப்பு

## 2000/1994/1989ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் U.N.P. பெற்ற வாக்கு வீதம்.

| தேர்தல் மாவட்டம் | 2000 | 1994 | 1989 |
|---|---|---|---|
| 1) கொழும்பு | 43.45% | 41.77% | 51.67% |
| 2) கம்பஹா | 39.33% | 41.91% | 54.14% |
| 3) களுத்துரை | 39.89% | 43.75% | 49.84% |
| 4) கண்டி | 40.27% | 52.35% | 61.72% |
| 5) மாத்தளை | 42.10% | 48.61% | 63.81% |
| 6) நுவரெலியா | 46.04% | 58.12% | 63.34% |
| 7) காலி | 40.14% | 41.23% | 30.40% |
| 8) மாத்தரை | 37.11% | 37.43% | 56.11% |
| 9) ஹம்பாந்தோட்டை | 43.12% | 38.67% | 55.92% |
| 10) யாழ்ப்பாணம் | 9.60% | - | 02.28% |
| 11) tddp | 13.88% | 18.50% | 19.74% |
| 12) மட்டக்களப்பு | 15.64% | 13.35% | 7.28% |
| 13) திகாமடுல்லை | 38.09% | 32.72% | 29.29% |
| 14) திருகோணமலை | 35.08% | 29.16% | 22.10% |
| 15) குருநாகலை | 43.72% | 47.01% | 58.51% |
| 16) புத்தளம் | 41.35% | 45.47% | 62.62% |
| 17) அனுராதபுரம் | 41.26% | 43.45% | 56.19% |
| 18) பொலன்நறுவை | 46.32% | 47.62% | 62.33% |
| 19) பதுளை | 46.35% | 54.03% | 58.57% |
| 20) nkhduhfiy | 41.26% | 43.80% | 52.42% |
| 21) இரத்தினபுரி | 42.30% | 47.95% | 57.89% |
| 22) கேகாலை | 42.69% | 51.24% | 61.12% |



## ஐக்கிய தேசியக் கட்சி

| மாவட்டம் | 1994 சனாதிபதித் தேர்தல் | 1999 மாகாண சபைத் தேர்தல் | 1999 சனாதிபதித் தேர்தல் | 2000 பாராளுமன்றப் பொதுத் தேர்தல் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 288,741 | 362,636 | 425,185 | 440,684 |
| கம்பஹா | 288,608 | 317,698 | 353,969 | 378,328 |
| களுத்துறை | 178,466 | 199,054 | 217,423 | 217,215 |
| கண்டி | 235,519 | 232,934 | 276,360 | 243,623 |
| மாத்தளை | 73,324 | 70,705 | 91,944 | 91,836 |
| நுவரெலியா | 116,928 | 88,020 | 152,836 | 126,486 |
| காலி | 173,282 | 188,921 | 195,906 | 212,055 |
| மாத்தறை | 118,224 | 130,843 | 139,667 | 146,855 |
| ஹம்பாந்தோட்டை | 77,735 | 82,786 | 95,088 | 119,074 |
| யாழ்ப்பாணம் | 223 | | 48,005 | 11,401 |
| வன்னி | 4,493 | | 43,803 | 11,545 |
| மட்டக்களப்பு | 14,812 | | 104,100 | 29,165 |
| திகாமடுல்லை | 59,074 | | 92,509 | 101,628 |
| திருகோணமலை | 28,006 | | 63,351 | 46,700 |
| குருநாகலை | 266,740 | 273,892 | 326,327 | 332,623 |
| புத்தளம் | 95,211 | 105.876 | 121,617 | 118,566 |
| அனுராதபுரம் | 107,342 | 111,285 | 139,180 | 144,662 |
| பொலன்நறுவை. | 59,287 | 60,022 | 72,598 | 82,399 |
| பதுளை | 139,611 | 137,437 | 172,884 | 167,351 |
| மொனராகலை | 52,026 | 65,340 | 73,695 | 75,900 |
| இரத்தினபுரி | 177,924 | 175,912 | 202,621 | 204,017 |
| கேகாலை | 159,707 | 158,503 | 176,376 | 175,627 |
| மொத்தம் | 2,715,283 | 2,673,752 | 3,602,748 | 3,477,770 |
| சதவீதம் | 35.91% | 39.99% | 42.71% | 40.21% |

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 1989
மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகள்.






இன்னும் இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது. 2000 பொதுத்தேர்தல் பிரசாரகாலங்களில் 'பட்டலந்த சித்திரவதைமுகாம்' பற்றிய சம்பவங்களை ரூபாவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலி சேவைகள், லேக்ஹவுஸ் நிறுவன பத்திரிகைகள் என்பன மீண்டும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன. ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு இது ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. மறுபுறமாக ரணில் விக்கிரம சிங்க அவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கு இடையில் தொடர்புகள் இருப்பதாகவும், அதனாலேயே யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திகாமடுல்லை, திருகோணமலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் 1999 சனாதிபதித் தேர்தல் ரணில் விக்ரமசிங்க அவர்கள் அதிகவாக்குகளைப் பெற்றார் எனவும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டன. இதுவும் சிங்கள மக்கள் மத்தியில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

எப்படியோ -

2000 ஆண்டு பொதுத்தேர்தலில் ஆளும்கட்சியாகக் காணப்பட்ட பொதுசன ஐக்கிய முன்னணியுடன் சரிசமமாக மோதிய ஒரு கட்சியாகவே ஐக்கிய தேசியக் கட்சி இருந்தது. இப்பொதுத்தேர்தலில் ஐ. தே. கட்சியானது 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்டன. (பொதுசன ஐக்கிய முன்னணி கூட 21 தேர்தல் மாவட்டங்களில் மட்டுமே போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். பொ. ஐ. மு. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவில்லை.)

இத்தேர்தலில் அவதானிக்கக் கூடியதாக இருந்த விசேட அம்சம் பொ. ஐ. முன்னணியைப் போலவே நிலையான கொள்கைத் திட்டமொன்று இருக்கவில்லை. மக்களுடன் எனது ஒப்பந்தம் என்ற அடிப்படையில் குறுங்கால கவர்ச்சிகரமான திட்டங்களை முன்வைத்ததேயன்றி. நிலையான பொருளாதாரத் திட்டங்களையோ, அன்றேல் இலங்கையில் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டவட்டமான வழிமுறைகளையோ விசேடமாக குறிப்பிட்டிருக்கவில்லை.

## 11 வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலை.

இலங்கையின் கட்சிமுறை வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்க்கும் போது 1930 -ம் தசாப்தங்களின் ஆரம்பத்தில் ''சூரியப்பூக்கள்'' இயக்கத்தை ஆரம்பித்த கலாநிதிகளான கொல்வின் R.D. சில்வா, N.M. பெரேரா, விக்கிரமசிங்க, பிலிப்குணவர்தன, லெஸ்லி குணவர்தனா போன்றோரால் 1935 ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் கட்சியான லங்கா சமசமாஜக்கட்சியே இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகும். எனவே இலங்கையின் கட்சிமுறை வரலாறு இடதுசாரிக்கட்சியின் தோற்றத்துடனே ஆரம்பமாகின்றது.

# 2000/ 1994 / 1989ம் ஆண்டுப் பொதுத்தேர்தல்களில் J.V. P பெற்ற வாக்கு வீதம்.

| தேர்தல் மாவட்டம் | 2000 | 1994 | 1989 |
|---|---|---|---|
| 1) கொழும்பு | 7.70% | 1.24% | - |
| 2) கம்பஹா | 7.60% | 1.30% | - |
| 3) களுத்துரை | 7.04% | 1.24% | - |
| 4) கண்டி | 3.56% | 0.53% | - |
| 5) மாத்தளை | 4.89% | 0.69% | - |
| 6) நுவரெலியா | 2.09% | 0.30% | - |
| 7) காலி | 7.88% | 1.46% | - |
| 8) மாத்தறை | 9.79% | 2.30% | - |
| 9) ஹம்பாந்தோட்டை | 15.22% | 6.21% | - |
| 10) யாழ்ப்பாணம் | 0.14% | - | - |
| 11) வன்னி | 0.53% | - | - |
| 12) மட்டக்களப்பு | 0.16% | - | - |
| 13) திகாமடுல்லை | 2.13% | 0.27% | - |
| 14) திருகோணமலை | 2.82% | 0.49% | - |
| 15) குருநாகலை | 5.36% | 0.7% | - |
| 16) புத்தளம் | 3.92% | 0.57% | - |
| 17) அனுராதபுரம் | 6.07% | 0.94% | - |
| 18) பொலன்நறுவை | 6.27% | 1.2% | - |
| 19) பதுளை | 4.54% | 1.05% | - |
| 20) மொனராகலை | 7.15% | 1.22% | - |
| 21) இரத்தினபுரி | 4.20% | 0.50% | - |
| 22) கேகாலை | 5.35% | 0.85% | - |

1994 -ம் ஆண்டு பொதுத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி (J. V. P.) ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது.



ஆனாலும் இலங்கையின் அரசாங்கமொன்றினை அமைக்கும் பெரும்பான்மையையோ அன்றேல் எதிர்க்கட்சித் தனிப்பலத்தையோ இடதுசாரிக்கட்சிகள் பெறவில்லை. விசேடமாக கட்சியின் தலைமைத்துவ முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் காரணமாக இடதுசாரிக் கட்சிகள் பலதாக உடைவுபெற்று வந்துள்ளமையை கடந்தகால வரலாறுகளில் இருந்து கண்டுகொள்ள முடியும்.

1940 ம் ஆண்டில் LSSP யில்இருந்து பிரிந்த கலாநிதி விக்கிரமசிங்ஹ ஐக்கிய சோசலிஸக் கட்சியை ஆரம்பித்தார். இக்கட்சியே 1943 இல் கம்யூனிசக் கட்சியாக மாற்றமடைந்தது. தொடர்ந்து 1945 இல் பொல்சவிக் லெனினிஸ்ட் கட்சி (BLP), 1950 இல் விப்லவகார லங்கா சமசமாஜக் கட்சி (VLSSP), 1963 இல் CP (R) இவ்வாறாக பல இடதுசாரிக்கட்சிகள் உதயமாகின.

1960 களின் இறுதிப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட தீவிரவாதப்போக்குமிக்க அமைப்பே மக்கள் விடுதலை முன்னணி (JVP) ஆகும். இது 1971 -ம் ஆண்டில் புரட்சிமூலமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற நடவடிக்கை மேற்கொண்டது. ரோகனவிஜயவீர தலைமையிலான JVP யின் புரட்சியை அப்போதைய ஐக்கிய சோசலிஸ முன்னணி அரசு வன்முறை நடவடிக்கையால் அடக்கியதுடன் விஜயவீர உட்பட முக்கிய தலைவர்களைக் கைதுசெய்தது. 1977 இல் பதவிக்கு வந்த UNP கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்து JVP அங்கத்தினரை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்தது. இதையடுத்து JVP யினர் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்தனர். 1982 -ம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற முதலாவது சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட J.V.P தலைவர் ரோகன விஜயவீர 273,428 வாக்குகளைப் பெற்று (4.19%) மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். J.V.P போட்டியிட்ட முதலாவது தேர்தலில் 273,428 வாக்குகளை தேசியமட்டத்தில் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1983 -ம் ஆண்டு ஜுலை கலவரத்தையடுத்து J.V.P. கட்சி தடைசெய்யப்பட்டது. 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை இவர்கள் பலமாக எதிர்த்ததுடன் நாட்டில் அரசியல் வன்முறையிலும் ஈடுபட்டனர். பலகோடிக் கணக்கான பொதுச்சொத்துக்களை அழித்ததுடன். அரசியல் ரீதியில் பல உயிர்களைப் பலியெடுத்தனர். 1989/ 1990 இல் J.V.P யினர் அரசினால் அடக்கி ஒடுக்கப்பட்டதுடன் ரோகனவிஜயவீரவும் சுட்டுக்கொல்லப்பட்டார். இதையடுத்து J.V.P தலைமறைவில் செயற்பட்டது. அதன் புதிய தலைமைத்துவம் வன்முறையைக் கைவிட்டு ஜனநாயகத்தின் பால் ஈடுபடுவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

1994 பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஸ்ரீ. ல. மு. முன்னணி (SLPF) யுடன் இணைந்து போட்டியிட்ட J.V.P 90,078 (1.13%) வாக்குகளைப்

# மக்கள் விடுதலை முன்னணி

| மாவட்டம் | 1994 சனாதி பதித் தேர்தல் | 1999 மாகாண சபைத் தேர்தல் | 1999 சனாதி பதித் தேர்தல் | 2000 பாராளு மன்றப் பொதுத் தேர்தல் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 1,819 | 55,361 | 44,009 | 78,133 |
| கம்பஹா | 1,832 | 58,277 | 40,742 | 73,110 |
| களுத்துறை | 1,388 | 28,347 | 23,770 | 38,373 |
| கண்டி | 1,370 | 16,065 | 15,512 | 21,565 |
| மாத்தளை | 680 | 8,010 | 7,922 | 10,673 |
| நுவரெலியா | 1,044 | 4,909 | 5,879 | 6,299 |
| காலி | 1,487 | 38,817 | 27,257 | 41,620 |
| மாத்தறை | 1,397 | 40,276 | 26,229 | 38,757 |
| ஹம்பாந்தோட்டை | 1,685 | 47,296 | 33,739 | 42,042 |
| யாழ்ப்பாணம் | 25 | | 413 | 172 |
| வன்னி | 118 | | 482 | 444 |
| மட்டக்களப்பு | 484 | | 290 | 295 |
| திகாமடுல்லை | 574 | | 3,736 | 5,696 |
| திருகோணமலை | 324 | | 2,307 | 3,301 |
| குருநாகலை | 1,842 | 31,221 | 27,354 | 40,780 |
| புத்தளம் | 625 | 10.759 | 7,770 | 11,256 |
| அனுராதபுரம் | 1,083 | 14,197 | 14,612 | 21,274 |
| பொலன்நறுவை. | 469 | 8.498 | 8,020 | 11,161 |
| பதுளை | 1,372 | 12,106 | 12,025 | 16,414 |
| மொனராகலை | 824 | 10,759 | 10,456 | 13,159 |
| இரத்தினபுரி | 1,279 | 17,200 | 16,482 | 22,222 |
| கேகாலை | 1,028 | 15,537 | 14,987 | 22,028 |
| மொத்தம் | 22,749 | 417,168 | 344,173 | 518,774 |
| சதவீதம் | 0.30% | 6.24% | 4.08% | 5.99% |



பெற்று ஐந்தாவதுஇடத்தையடைந்து 1 பிரதிநிதியை வென்றெடுத்தது. முக்கிய அம்சம் என்னவெனில் இத்தேர்தலில் போட்டியிட்ட வேறு எந்தவொரு இடதுசாரிக்கட்சியினாலும் ஒரு பிரதிநிதியையாவது வெற்றி கொள்ள முடியவில்லை என்பதாகும்.

ஆனால் இதைத்தொடர்ந்து படிப்படியாக இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களில் J.V.P யினது வளர்ச்சி அதிகரித்து வருவதை அவதானிக்கலாம். இதனை மறுபக்கத்திலுள்ள அட்டவணைகள் மூலம் எம்மால் கண்டு கொள்ள முடியும். 2000 ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 10 பிரதிநிதிகளை இக்கட்சி வென்றெடுத்ததனூடாகவும், கடந்த தேர்தல்களில் இதன் வளர்ச்சியை அவதானிப்பதனூடாகவும் இலங்கை அரசியலில் 3 -வது சக்தியாக மாறிவருகின்றதென்றால் மிகையாகாது. இதன் தலைமைத்துவத்தைப் பற்றி இன்னும் மக்களுக்கு நம்பிக்கையீனம் காணப்படுகின்றது. இக்கட்சியின் தலைவர் எனக் கூறப்படும் சோமவங்ச லண்டனில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. தலைமைத்துவ ஸ்திரத்துடன் தமது கொள்கைகளை மேலும் சரளமானமுறையில் மக்கள் முன் எடுத்துச் சென்றால் இன்னும் முன்னேறலாம் எனக்கருத இடமுண்டு.

## 11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலும், தேசிய ஐக்கிய முன்னணியும் (NUA)

நடைபெற்றுமுடிந்த பாராளுமன்றப்பொதுத்தேர்தலில் 4வது இடத்தைப் பெற்ற கட்சி இதுவாகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - தனது கொள்கைகளை தேசிய மட்டத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் மறைந்த தலைவர் M.H. M அஷ்ரப் அவர்களினால் உருவாக்கப்பட்ட கட்சியே தே. ஐ. மு. (NUA) ஆகும். இத்தேர்தலில் தே. ஐ. முன்னணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 'மரச்' சின்னத்தின் கீழ் தேர்தல் களத்தில் குதித்தது. நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு அஷ்ரப் - சந்திரிகா பேச்சுவார்த்தையின் பயனாக திகாமடுல்லை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தேர்தல் மவட்டங்களில் பொதுசன ஐக்கிய முன்னணியின் நாற்காலி சின்னத்தின் கீழ் போட்டியிடுவதென்றும், ஏனைய மாவட்டங்களில் தேசிய. ஐ. மு. மரச்சின்னத்தின் கீழ் போட்டியிடுவதென்றும் முடிவாக்கப்பட்டது. நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் போது ஏற்பட்ட பிரச்சினையொன்றை அடுத்து மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் தே. ஐ. மு. தனித்தே நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களுக்குத் தனித்துவமான அரசியல் கட்சியொன்று தேவை எனக் குரல் கொடுத்துவந்த எம். எச். எம். அஷ்ரப் 1981 செப்டம்பர் 21 -ம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் இயக்கத்தை ஆரம்பித்தார். இந்த

இயக்கம் 1988 பெப்ரவரி 11 -ம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சியாக தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டது. (இலங்கையின் முஸ்லிம்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட முதல் அரசியல் கட்சியும் இதுவாகும்.)

1988 -ம் ஆண்டில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டு வடக்கு, கிழக்கு மாகாணசபையில் 17 ஆசனங்களை வென்றெடுத்ததுடன் எதிர்கட்சியாகப் பணியாற்றும் தகுதியைப் பெற்றது.

1989 ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் 202,016 வாக்குகளை அகில இலங்கைரீதியில் பெற்றுக்கொண்டது. இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 132,460 வாக்குகளும், ஏனைய மாகாணங்களில் 69,556 வாக்குகளும் பெறப்பட்டன. இத்தேர்தலில் அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் அஷ்ரப்பும், மட்டக்களப்பில் ஹிஸ்புல்லாவும், வன்னியில் S.S.M அபூபக்கரும், தேசிய பட்டியல் பிரதிநிதியாக N.M. புகார்தீனும் தெரிவாகினர்.

1994 -ம் ஆண்டில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைப்பதில் பங்குதாரக்கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் வளர்ச்சிகண்டமை முக்கிய அம்சமாகும். 1994 தேர்தலில் ஸ்ரீ. ல. மு. காங்கிரஸ் 1,43,307 வாக்குகளைப் பெற்றதுடன் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் 2 பிரதிநிதிகளைப் பெற்றுக்கொண்டது. மாவட்ட அடிப்படையில் 6 பிரதிநிதிகளும், தேசியபட்டியல் மூலமாக 1 பிரதிநிதியும் ஆக 07 பிரதிநிதிகளை மொத்தமாகப் பெற்றுக்கொண்டது.

2000 ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்காக 10 வது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்துக்கும், பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் விரிசல்கள் வளர ஆரம்பித்தன. விசேடமாக பௌஸி - அஷ்ரப் இடையே எழுந்த சவால்கள், பௌஸி - ரவூப்ஹக்கீம் இடையே எழுந்த சவால்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்பும் இந்நிலை தொடர்ந்தது. தேசிய ஐக்கிய முன்னணியின் பிரசார சுவரொட்டிகளில் சனாதிபதியின் புகைப்படத்தை சேர்க்கக்கூடாது என பொ. ஐ. மு. பொதுச்செயலாளர் டீ. மு. ஜயரத்ன ஆணைபிறப்பித்தார். இவ்வாறாக உறவு நிலையில் தளம்பல் காணப்பட்டு வந்தது. செப்டம்பர் 16 -ம் திகதியன்று கொழும்பிலிருந்து இறக்காமம் நோக்கிப் பயணம் செய்த எம். ஐ. 17 ரக ஹெலிகொப்டர் அரநாயக்க பகுதியில் உள்ள ''பைபிள்ரொக்'' மலைப்பகுதியில் விபத்துக்குள்ளானதினால் தே. ஐ. மு. ஸ்தாபகர் எம். எச். எம். அஷ்ரப் உட்பட 14 பேர் உயிரிழந்தனர். (திகாமடுல்லை மாவட்ட பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர்



கதிர்காமத்தம்பியும் இவ்விபத்தில் உயிரிழந்தார்.)

அஷ்ரபின் மறைவையடுத்து ரவூப்ஹக்கீம், ஃபேரியல் அஷ்ரப் ஆகியோர் கட்சியின் இணைத்தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தேசிய ஐக்கிய முன்னணியின் பிரசாரக்கூட்டங்களில் அஷ்ரபின் விபத்துச் செய்திகள் அவரின் கவிதைகள், உரைகள் என்பன வீடியோ படங்களாகவும், ஒலிப்பதிவு நடாக்களாகவும் மக்கள்முன் போட்டுக்காட்டப்பட்டன. தேர்தல் முடிவு வந்தவுடன் தே. ஐ. மு. 4 பிரதிநிதிகளையும் (தேசிய பட்டியல் பிரதிநிதி உட்பட), பொ. ஐ. முன்னணியுடன் இணைந்து திகாமடுல்லை, திருகோணமலை தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டு 6 பிரதிநிதிகளையும் (திகாமடுல்லை - 4 திருகோணமலை - 2) வெற்றி கொண்டது. புதிய பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவுப்பிரதிநிதிகள் என்றவகையில் தேசியபட்டியல் உட்பட 12 பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது.

தேர்தல் முடிந்த பிற்பாடு பொதுசன ஐக்கிய முன்னணியுடன் அரசாங்கத்தை அமைப்பதில் சிறுபான்மையினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈழமக்கள் ஜனநாயக முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி என்பன பங்குதாரர்களாக மாற்றமடைந்தது. பொ. ஐ. முன்னணி அரசாங்கத்துடன் இணைவதற்கு ரவூப் ஹக்கீப் மூலமாக முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் பாரிய அளவில் சிங்கள மக்களின் விமர்சனத்துக்கு உட்பட்டது.

### *11 வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் சிறுபான்மைப் பிரதிநிதித்துவமும்.*

நடைபெற்று முடிந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் சிஹலஉருமய, பூமிபுத்திர பக்ஷய போன்ற கட்சிகள் இனவாதத்தைத் தூண்டக்கூடிய வகையில் தொலைக்காட்சி, வானொலி, செய்தித் தள்கள், மற்றும் பொதுக்கூட்டங்களில் பிரசாரங்களை மேற்கொண்டன. சிஹல உருமய இந்தப்பொதுத் தேர்தலில் நிகழ்த்திய பிரசாரங்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் மனதைப் புண்படுத்தக் கூடியவகையில் இருந்ததை மறுப்பதற்கு இயலாது. வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது என்பதைவிட எரியும் நெருப்பில் எண்ணெய்யை வார்ப்பதைப்போல இனவாதத்தைத் தூண்டுவதாகவே இருந்தன. ஆனாலும் இத்தகைய இனவாத சக்திகளை சிறுபான்மை சமூகத்தினர் மாத்திரமல்லாமல் பெரும்பான்மை சமூகத்தினரும் நிராகரித்து விட்டனர். எனவே பெரும்பான்மை சமூகத்தில் விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சில வீதத்தினரைத் தவிர ஏனைய அனைத்துப் பெரும்பான்மை இனத்தினரையும் இனவாதிகளாக எம்மால் இனங்காட்ட முடியாது.

ஒவ்வொரு சமூகத்துக்கும் தத்தமது உரிமைகளை வெற்றிகொள்ள வேண்டும் என்ற உணர்வுகள் இருப்பது தவிர்க்கமுடியாது. ஆனால் அந்த உரிமைகளை வெற்றிகொள்ள விளையும் போது பிறருடைய உரிமைகளை பாதிக்காது இருக்க வேண்டியது முக்கியமானதாகும். சில அரசியல் கட்சிகளினதும், அரசியல் வாதிகளினதும் தனிப்பட்ட அபிலாஷைகளை

பூர்த்தி செய்துகொள்வதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்று இலங்கையை ஒரு யுத்த பூமியாக மாற்றிவிட்டது. எனவே சிறுபான்மைச் சமூகத்தினர் தமது உரிமைக்காக தமது உயிர், பொருள் அனைத்தையும் தியாகம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள். தள்ளப்பட்டுவருகின்றார்கள்.

-ஆம் யாதார்த்தத்தை கற்பனையால் மாற்றியமைக்க முடியாது. இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுவரும் விகிதாசாரதேர்தல் முறையினால் சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் இலங்கையில் அதிகரித்து வந்துள்ளது. 11-வது பாராளுமன்றப்பொதுத்தேர்தலில் 48 சிறுபான்மைப் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர். இவர்களுள் ஆளும்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுபான்மைப் பிரதிநிதிகளும், தேசிய பட்டியலின் மூலம் தெரிவாக்கப்பட்ட 5 பிரதிநிதிகளும் இடம்பெற்றுள்ள அதேநேரத்தில் பொ.ஐ. முன்னணிக்கு சார்பான கட்சிகளான EPDP இல் 4 பிரதிநிதிகளும், NUA வில் 4 பிரதிநிதிகளும், சுயேட்சைக்குழுவிலிருந்து 1 - பிரதிநிதியும் இடம்பெற்றுள்ளனர். இந்த 24 பிரதிநிதிகளும் நேரடியாக ஆளும் கட்சிக்கு சார்புடையவர்கள், ஆளும் அரசாங்கத்தை அமைப்பதில் பங்குதாரர்களானவர்கள்.

11- வது பாராளுமன்றத்தில் சிறுபான்மைப் பிரதிநிதிகளின் பட்டியல் கீழே இணைக்கப்பட்டுள்ளது.

## பொதுசன ஐக்கிய முன்னணி (P.A.)

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகளும், பெற்ற விருப்புவாக்குகளும்.**

| | | |
|---|---|---|
| 1. A.H.M. பௌசி | (கொழும்பு மாவட்டம்) | 100,200 |
| 2. ∴பேரியல் அஷ்ரப் | (திகாமடுல்ல மாவட்டம்) | 83,353 |
| 3. M. அதாவுள்ளாஹ் | (திகாமடுல்ல மாவட்டம்) | 65,647 |
| 4. U.L.M. மொஹிடீன் | (திகாமடுல்ல மாவட்டம்) | 65,378 |
| 5. நஜீப் . ஏ. மஜீட் | (திருமலை மாவட்டம்) | 18,173 |
| 6. மொஹம்மட் - சரீப் தவ்பீக் | (திருமலை மாவட்டம்) | 15,588 |

**தேசியபட்டியல் முஸ்லிம் பிரதிநிதிகள்.**

1. அலவி மௌலானா.
2. U.L.M ஹனிபா.
3. ரிஸ்வி சின்னலெப்பே.



**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் பிரதிநிதிகளும், பெற்ற விருப்பு வாக்குகளும்..**

| | | |
|---|---|---|
| 1. ஆறுமுகம் தொண்டமான் | (நுவரெலியா மாவட்டம்) | 61,779 |
| 2. முத்து சிவலிங்கம் | (நுவரெலியா மாவட்டம்) | 55,673 |
| 3. சண்முகம் ஜெகதீஸ்வரம் | (நுவரெலியா மாவட்டம்) | 50,735 |
| 4. S. கணேஷமூர்த்தி | (மட்டு - மாவட்டம்) | 9,883 |

**தேசியபட்டியல் - தமிழ் பிரதிநிதிகள்.**

1. லக்ஸ்மன் கதிர்காமர்
2. மாரிமுத்து

## ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P)

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகளும், பெற்ற விருப்பு வாக்குகளும்.**

| | | |
|---|---|---|
| 1. முஹம்மட் மஹ்ரூப் | (கொழும்பு மாவட்டம்) | 65,400 |
| 2. M.H. மொஹமட் | (கொழும்பு மாவட்டம்) | 49,239 |
| 3. இம்டியாஸ் பாக்கீர் மாக்கார் | (களுத்துறை மாவட்டம்) | 74,555 |
| 4. A. R. M. A. காதர் | (கண்டி மாவட்டம்) | 58,365 |
| 5. M.H.M. ஹலீம் | (கண்டி மாவட்டம்) | 45,177 |
| 6. அலி ஸாஹீர் மௌலானா | (மட்டு - மாவட்டம்) | 14,284 |
| 7. முஹம்மட் மஹ்ரூப் | (திருமலை - மாவட்டம்) | 21,348 |

**தேசிய பட்டியல் - முஸ்லிம் பிரதிநிதிகள்.**

1. A.H.M. அஸ்வர்
2. அப்துல் மஜீட்

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் பிரதிநிதிகளும், பெற்ற விருப்பு வாக்குகளும்.**

| | | |
|---|---|---|
| 1. பெ. சந்திரசேகரன் | (நுவரெலியா மாவட்டம்) | 54,681 |
| 2. எஸ். சதாசிவம் | (நுவரெலியா மாவட்டம்) | 47,472 |
| 3. மகேஷ்வரன் | (யாழ் மாவட்டம்) | 4,807 |

**தேசிய பட்டியல் - தமிழ் பிரதிநிதிகள்.**

1. M.S. செல்லசாமி
2. P. P. தேவராஜ்

## தமிழர் விடுதலைக் கூட்டணி (T.U.L.F)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆனந்த சங்கரி | (யாழ் - மாவட்டம்) | 12,888 |
| 2. | மாவை சேனாதிராஜா | (யாழ் - மாவட்டம்) | 10,965 |
| 3. | சிவ. மகாராஜா | (யாழ் - மாவட்டம்) | 7,187 |
| 4. | நிமலன் . எஸ். நாயகம் | (மட்டு - மாவட்டம்) | 16,542 |
| 5. | ஜோஸப் பரராஜசிங்கம் | (மட்டு - மாவட்டம்) | 12,602 |

## ஈழ மக்கள் ஜனநாயகமுன்னணி (E.P.D.P)

| | | | |
|---|---|---|---|
| 1. | டக்ளஸ் தேவானந்தா | (யாழ் - மாவட்டம்) | 7,658 |
| 2. | நடராஜா மதனராஜா | (யாழ் - மாவட்டம்) | 4,673 |
| 3. | வீ .குகேந்திரன் (ஜெகன்) | (யாழ் - மாவட்டம்) | 4,244 |
| 4. | கந்தையா சங்கரன் | (யாழ் - மாவட்டம்) | 2,902 |

## தேசிய ஐக்கிய முன்னணி (N.U.A)

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், பெற்ற விருப்புவாக்குகளும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ரவூப் ஹக்கீம் | (கண்டி - மாவட்டம்) | 28,332 |
| 2. | நூர்தீன் மசூர் | (வன்னி - மாவட்டம்) | 12,283 |
| 3. | அப்துல் காதர் | (மட்டு - மாவட்டம்) | 22,975 |

தேசிய பட்டியல் பிரதிநிதி :
பஷீர் சேகு தாவூத்

## தமிழ் ஈழ விடுதலை அமைப்பு (TELO)

| | | | |
|---|---|---|---|
| 1. | அ. அடைக்கல நாதன் | (வன்னி - மாவட்டம்) | 15,490 |
| 2. | செ. கேதாரலிங்கம் | (வன்னி - மாவட்டம்) | 10,959 |
| 3. | ராஜா குவனேஸ்வரன் | (வன்னி - மாவட்டம்) | |

## அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC

| | | | |
|---|---|---|---|
| 1. | அப்பாத்துரை விநாயகமூர்த்தி | (யாழ் - மாவட்டம்) | 3,825 |

## சுயேட்சை உ - திகாமடுல்லை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1. | எம். குணசேகரம் | 12,590 |

## மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) தேசியபட்டியல்

1. அமஜான உமமா



இம்முறை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த 7 அமைச்சர்களும், 4 பிரதி அமைச்சர்களும் இடம்பெற்றிருப்பது மற்றுமொரு விசேட அம்சமாகும். இவ்வாறு இடம்பெற்றுள்ள 7 அமைச்சர்களும் பின்வருவோராவார்.

1. ஆறுமுகம் தொண்டமான், 2. ரவூப்ஹக்கீம், 3. டக்ளஸ் தேவானந்தா, 4. A.H.M. பௌஸி, 5. லக்ஷ்மன் கதிர்காமர் 6. அலவிமௌலானா, 7. ∴பேரியல் அஷ்ரப், இவர்களுடன் பிரதி அமைச்சர்களாக அப்துல் காதர், அப்துல் மஜீட், நூர்தீன் மசூர், கணேஷமூர்த்தி, அதாவுள்ளாஹ் போன்றோரும் இடம் பெற்றுள்ளனர்.

எனவே பருமட்டாக சிறுபான்மைப் பிரதிநிதித்துவமும் அமைச்சர்களும் அதிகரித்துள்ள 11 வது பாராளுமன்றத்தில் சிறுபான்மையினரின் உரிமைகளின் பாற் இவர்கள் புரியப்போகும் பணிகள் சமூகத்தின் எழுச்சிக்காக அமையவேண்டும். என சிறுபான்மை சமூகத்தினர் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

## அரசாங்க கொள்கைப் பிரகடனம்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவி - ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் 2000 - 11 - 09 -ம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத்த அரசாங்க கொள்கைப் பிரகடனம் அனைவரினதும் கவனத்தை ஈர்ந்துள்ளது. இக்கொள்கைப் பிரகடனம் எழுத்தில் மாத்திரம் இல்லாமல் நடைமுறைப்படுத்தப்படின் இலங்கையில் தாண்டவமாடும் பிரச்சினைகள் ஓரளவேனும் தீர்வுபெறும் எனக் கருத இடமுண்டு. எனவே அக்கொள்கைப் பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## மாண்புமிகு சனாதிபதியின் உரையிலிருந்து ...

"....கடந்த அக்டோபர் மாதம் 10 ம் திகதி இடம் பெற்ற பொதுத் தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் பதவிக்கு வந்தமை ஒரு சிறப்பு மிக்க நிகழ்வாகும். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்ப்போமானால், அரசாங்கமொன்று தமது பதவிக்காலத்தை முடித்துவிட்டு, உரியகாலத்தில் தேர்தல்களை நடாத்தி, பெரும்பான்மையான மக்களது ஆணையினால், மீண்டும் அதே அரசாங்கமே தெரிவு செய்யப்பட்ட முதல் தருணமும் இதுவேயென்பது உங்களுக்குத்தெரியும். அதனால், மிகத் தெளிவாக அறியக்கூடியது யாதெனில், கடந்த ஆறாண்டுகாலத்தில் எமது அரசாங்கத்தினால் இந்த நாட்டு மக்களது முன்னிலையில் வைக்கப்பட்ட கொள்கைகள் சார்ந்த வருங்கால நோக்கத்தின் பாலும், செயற்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களினதும் சிறப்புடைமையை அவர்கள் அங்கீகரித்துள்ளனர்...."

...அத்தகைய வெற்றியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எமக்கு வாய்ப்பு அளித்த இந்நாட்டு மக்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். சகல விதமான இனவாதத்தையும், தீவிரவாதத்தையும் அவர்கள் தெட்டத்தெளிவாக நிராகரித்துள்ளனர். இது எமது எதிர்காலம் பற்றிய நல்லதோர் சகுனமாகும்.கடந்த ஆறாண்டு காலத்தில் எமது அரசாங்கம் புதிய அரசியல் கலாசாரமொன்றை மட்டுமன்றி அதனோடு இசைவுறும் புதிய பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து எமது அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் அதேநேரத்தில் கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 19 ம் திகதியன்று ''21 ஆம் நூற்றாண்டுக்கான புதிய நோக்கு" என்ற வெளியீட்டின் வாயிலாக எமது வருங்கால வேலைத்திட்டங்களை விரிவாக எடுத்துரைத்தோம். 2010 வரை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முறைகளும், செயன்முறைகளும் அதில் அடங்குகின்றன. அது எமது தற்காலக் கொள்கைப் பிரகடனமாகவும் அமைகின்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலின் கொள்கைப் பிரகடனத்துக்கும் அது அடிப்படையாக அமைந்தது. எமது எதிர்கால வேலைத்திட்டமாகவும் அது அமைகின்றது....

...அவ்வெதிர்கால நோக்கின் மீது பொதுமக்கள் வைத்த நம்பிக்கை காரணமாக அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடியவாறு சகல மாகாண சபைகளினதும், 17 மாவட்டங்களின் 236 உள்ளூராட்சி சபைகளில் 196 சபைகளும், மற்றும் பாராளுமன்றத்தினதும் அதிகாரம் எனது அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது. நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை செவ்வனே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு அது தக்கதோர் சான்றாகும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் எங்களைத் தாக்கிய பல்வேறு தடைகளையும், சவால்களையும் வெற்றி கொண்டு கடந்த ஆறு ஆண்டுகாலத்தில் எமது நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை நிலைபெற்றுள்ள பாங்கு பற்றி சர்வதேச சமுதாயத்தினரும் எம்மைப்புகழ்ந்துரைக்கின்றனர்.ஒரு வகையில் நோக்கும்போது பொதுநிர்வாகம் என்பது சவால்களைச் சமாளிக்கும் செயல் முறையாகும். தனிப்பட்டமுறையில் நோக்குமிடத்து அது எனக்கு பரிச்சயமற்ற விடயமல்ல. அரசநிர்வாகத்தை உற்று நோக்குமிடத்து சவால்கள் என்பது தேர்தல் போராட்டத்தின் கட்சிக்குள்ளே மட்டுமன்றி, கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட நெருக்கடிகளையும் இலங்கை மக்களிடையில் உள்ள நெருக்கடிகளின் தன்மையோடு ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். தேர்தல் சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு ஒவ்வொரு கட்சிக்கும் இடையில் காணப்பட்ட முரண்பாடுகளை மறந்துவிட்டு நாடு எதிர்நோக்கியுள்ள உண்மையான சவால்களைப் பற்றி ஆழமாகச் சிந்திப்பதற்கு எம் அனைவருக்கும் இப்பொழுது வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது தெரிகின்றது. நாங்கள் முகம்கொடுக்க வேண்டிய அந்தச் சவால்கள் யாவை?...



அவற்றைப் பிரதான தலைப்புகள் மூன்றின் கீழ் எடுத்துரைக்க நான் முயல்கிறேன்.

1. அனைத்துத் துறைகளிலும் அடிப்படை மனித உரிமைகளை மேலும் உறுதிப்படுத்துவதன் மூலம் அரசினையும், சமூகத்தினையும் ஜனநாயகமயப்படுத்துகைக்கு உட்படுத்துதல்.

2. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருதலும், தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்திக் கொள்ளலும்.

3. உறுதியான பொருளாதார அபிவிருத்திச் செயல் முறையொன்றின் மூலம் வறுமையினை ஒழிப்பதன் வாயிலாக எமதுநாட்டை மூன்றாம் உலகத்தின் அபிவிருத்தியும், வளர்ச்சியும் கொண்டதொரு நாடாகக்கட்டியெழுப்புதல்.

பொருளாதார அபிவிருத்தி, சமூகத்தை ஜனநாயக மயப்படுத்தல், யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணுதல் ஆகிய இந்த மூன்று விடயங்கள் வெவ்வேறாக எடுத்துரைக்கப்பட்ட போதிலும், உண்மையில் அவை ஒரே பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட பல்வேறு அம்சங்கள் எனக்குறிப்பிடுதல் மிகப் பொருத்தமானதாகும். பொருளாதார அபிவிருத்தி இல்லாதவிடத்து சமூக சமத்துவமுமில்லை. அது இல்லாவிடத்து இன சமத்துவமற்ற உண்மையான ஜனநாயகமும் நிலவமாட்டாது. அத்தகைய பின்னணியால் தோன்றுகின்ற அநீதியானது துப்பாக்கிகளாகவும், குண்டுகளாகவும் உருமாற்றம் பெறுவது நவீன உலகுக்கே சிறப்பான ஒரு தோற்றப்பாடாகும். எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பற்றிய விடயத்திலும், இனப்பிரச்சினை பற்றிய விடயத்திலும் யுத்தத்தோடு தொடர்பு கொண்ட பிரச்சினை முதலாவது இடம்வகிக்கின்றது. எவ்வாறாயினும் நாங்கள் பொருளாதார அபிவிருத்தி என்ற விடயத்திலிருந்து ஆரம்பிப்போம்...

....எமது வருங்கால வேலைத்திட்டம் பற்றிய சிறு குறிப்பொன்று எமது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தத் தேர்தல் பிரகடனம், நான் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று 1999 ஆகஸ்ட் மாதத்தில் நாங்கள் நாட்டில் முன்வைத்த ''21ஆம் நூற்றாண்டுக்கான எமது புதிய நோக்கு" ஆகும்.. அங்கு குறிப்பிட்டுள்ள இலக்குகளை எய்தும்பொருட்டு, இடைக்கால மற்றும் நீண்டகாலத்திட்டங்கள் இரண்டு எம்மிடம் உள்ளன. இடைக்கால அபிவிருத்தித் திறமையானது, 2000 முதல் 2005 வரையானதாகும். இதன் முக்கிய குறிக்கோள்கள் யாவையெனில், அரசதுறைத் திட்டப்பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துதல், மற்றும் உள்நாட்டுக் கடன் பெறுகைகளைக் குறைத்தல், வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல் என்பனவாகும்...

தற்பொழுது 4% திலிருந்து 5% வரையான ஆண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை, எதிர்வரும் சில ஆண்டுகளில் 8% வரைகொண்டு வருவது எமது நோக்கமாகும். அதனைச் சாதிப்போமாயின் தொழில்வாய்ப்பின்மையை 4% வரை குறைத்துக் கொள்ளலாம்.

...அத்துடன் நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகள் பல உள்ளனவென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் மூன்று முக்கிய இலக்குகள் உள்ளன. அவற்றின் முதலாவதானது, பல்வேறுபட்ட பொருளாதார அபிவிருத்தியாகும். இது முக்கியமாக உட்கட்டமைப்பு வசதிகளைத் துரிதமாக விருத்தி செய்வதன் மீது கவனம் செலுத்தப்படுன்றது. இரண்டாவது அம்சமானது உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதன் மூலம் உற்பத்தியை மென்மேலும் மேம்படுத்தலாம். தனிநபர் வருவாயை அதிகரிப்பதன் மூலம் வறுமை நிலையை இல்லாதொழிக்கலாம். இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கையைத் தென்ஆசியா, தென்கிழக்கு ஆசியா ஆகியவற்றில் பிரதான நிதியியல் மற்றும் சேவை மத்திய நிலையமாக மாற்றுவது எமது இலக்காகும், பெருந்தெருக்கள், மின்வசதி, தொலைபேசி, இலத்திரனியல், தொழில்நுட்பம், நீர் வழங்கல், வங்கி மற்றும் செயற்றிறன் வாய்ந்த அரசதுறை ஆகியவற்றின் மீது நமது விசேடகவனத்தைச் செலுத்த இதுவே காரணமாகும். எதிர்வரும் மூன்றாண்டுக் காலத்தில் இலங்கை தென் ஆசியப் பிராந்தியத்தில் ''கணனித்தீவாக" உருமாற்றம் செய்வதைக் கருத்திற்கொண்டு நாங்கள் அதற்கெனப் புதிய அமைச்சொன்றையும் நிறுவியுள்ளோம். கோளமயப்படுத்துகை என இன்று பலராலும் பயன்படுத்தப்படும் கருத்துருவினை ''சந்தைப் பொருளாதாரத்தை அரச வரையறைகளைக் கடந்து வியாபித்தல் என்னும் பொருளாதார கருத்துக்கு மட்டும் வரையறை செய்வதற்கு நான் கருதமாட்டேன் , கோளமயப்படுத்துகையானது உலகின் கலாசார, சமூக. தொடர்பாடல் ஆகிய துறைகளைப் பெரிதும் பாதித்துள்ளது. கோளமயமாக்குகை அறிவார்ந்த கருத்துருவாகும். எனினும் அதனால் கிடைக்கும் இதமற்ற பெறுபேறுகளும் உள்ளன. குறிப்பாக கோளமயப்படுத்துகைச் செயல்முறை காரணமாக சமூக அபிவிருத்திச் செயல்முறையில் புறக்கணிக்கப்படுகின்ற மக்கள் இனங்களை கட்டியெழுப்புவதிலும் எமது கவனம் செலுத்தப்படவேண்டும். கமக்காரர்கள், சிறு கைத்தொழிலாளர்கள், தொழிலற்ற இளைஞர்கள் ஆகியோர் இவர்களுள் முக்கிய இடம்வகிக்கின்றனர். அதேபோன்று பொதுவாக கிராமிய மற்றும் நகர வறுமை ஒழிப்புப் பற்றிய சக்தி தேவைப்படுகின்றது. இதுபற்றி ஆழமாகக்கருத்திற் கொள்ள வேண்டிய கட்டாயநிலை எம்மீது கடந்த தேர்தல் பெறுபேறுகள் மூலம் எமக்கு ஏற்பட்டது. எங்களால் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டத்தை மேலும் விரிவாக்க வேண்டியகடப்பாடு இந்தப் பின்னணியில் ஏற்படுகிறது.. ஆயினும், வறிய நாடு என்ற வகையில் வறியமக்களுக்காக சமூகப் பாதுகாப்புக் கருத்திட்டங்களுக்கும், நலனோம்புகை செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பது எமது வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். காலஞ்சென்ற எஸ். டபிள்யூ . ஆர். டி. பண்டாரநாயக்க பிரதம அமைச்சர் அவர்கள் இந்நாட்டின் பெரும்பான்மையினரான ஏழை, எளிய மக்களது பொருளாதார, சமூக, கலாசார அந்தஸ்த்தினை உயர்த்தும் பொருட்டே எமது கட்சியை ஆரம்பித்தார். ஆயினும் எமது நோக்கு இன்று மூன்று காரணிகளையும் ஒன்றாகச் சேர்த்து அபிவிருத்தியை நோக்கி எங்ஙனம் செல்லமுடியுமென்பதை



நோக்குகின்ற வழிகளின் ஊடாக எடுத்துச் செயற் படுத்தப்படுகின்றது....

...நாம் முகம் கொடுக்கும் மூன்று சவால்களுள் முதலாவது விடயம் பற்றி நான் எடுத்துரைத்தேன். எஞ்சிய இரண்டு சவால்களாகிய சமூகத்தை ஜனநாயகப்படுத்துகை, யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து தேசியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுத்து சமாதானத்தை நிலைநாட்டுதல் ஆகிய விடயங்களை முதலாவது சவாலின் பின்னணியிலேயே ஆராய்தல் வேண்டும். நாம் எதிர்நோக்கும் சவால் என்னவென்பதைச் சரிவர புரிந்து கொள்ளும் பொருட்டு நாங்கள் கடந்த காலத்தைச் சற்றுப் பின்நோக்கிப் பாரக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

...மனித சமுதாயத்தின் சரித்திரம் பல்வேறுயுகங்களையும், காலங்களையும் கடந்து தான் முன்னேறியுள்ளது. எமது நாட்டிற்குரிய நீண்டசரித்திரத்தில் அத்தகைய காலப்பகுதிகள் சிலவற்றைக்கடந்துள்ளோம். முதலாவதாக ; நாகரிகமாக வாழ்ந்த யுகத்தைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். அதன் பின்னர் குடியேற்றநாட்டு யுகத்தைப் பற்றியும், அடுத்ததாக குடியேற்ற நாட்டு காலத்திற்குப்பிற்பட்ட யுகத்தைப்பற்றியும் குறிப்பிடல் வேண்டும். அந்த யுகங்களைக் கடந்து வந்த நாங்கள் 1956 முதல் 1977 வரை புதுமலர்ச்சி கொண்ட ஒரு யுகத்தை நோக்கிக் காலடி வைத்துள்ளோம். வேறு விதமாகக் கூறின் பொதுமக்களது யுகத்திற்கு நாங்கள் காலடி வைத்துள்ளோம்.

....யுத்தத்தை நிறுத்துவதும், தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணுதலும் எமது மூன்றாவது சவாலாகும். அதுவும் முன்னைய இரண்டு சாவால்களோடு பின்னிப் பிணைந்துள்ள சவாலாகும். பூரணஜனநாயகப் படுத்துகை, எமது நாட்டினை மூன்றாம் உலகத்தின் அபிவிருத்தியும், வளர்ச்சியும் கொண்டவொரு நாடாக கட்டியெழுப்புதல், தேசியப்பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காணுதல் ஆகிய மூன்று விடயங்கள் இணைபிரிக்க முடியாதவாறு ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ள சவால்களாகும். இப்பிரச்சினையானது இந்நாட்டின் ஜனநாயக முறைபற்றிய பிரச்சினையாகும்..

....இன்று நிலவும் தேசியப்பிரச்சினைக்குத் தெளிவானதும், சக்திவாய்ந்ததுமான அரசியல் காரணமொன்று ஏதுவாகியுள்ளது என்பதும் எமது கருத்தாகும். யுத்தம் அதன் பக்கவிளைவொன்றாகும். தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை யாதென்பது பற்றி மிக நுண்ணிய விவாதங்கள் பல இடம்பெற்று வருகின்றன. மூன்றில் இரண்டு பங்கு வாக்குப்பலமின்றி இன்றைய அரசியல் அமைப்பு கட்டுக்கோப்பினுள், புதிய அரசியலமைப்பை எங்ஙனம் நிறைவேற்ற முடியும் என மேலும் சிலர் வினா எழுப்புகின்றனர். ஆயினும் 50 ஆண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட அந்த வாத விவாதங்களாலும், நியாயங்களாலும் பிரச்சினைக்குத் தீர்வொன்று கிடைக்கவில்லையென்பது எமது நம்பிக்கையாகும். ..கப்பல் பாரம் கொண்ட நியாயங்களைவிட மஞ்சாடி அளவான பிரயோக முறை மதிப்புடையது எனச்சொல்வார்கள். இன்றைய பிரச்சினைக்கு பிரயோகமுறையில் அமைந்த தீர்வுகளைக் காண அர்பணித்தக்கொண்ட எமது தீர்வு வழிக்கு நெறிகாட்டுகின்ற கொள்கையினை எடுத்துரைக்க எனக்கு அனுமதி அளியுங்கள். சிறுபான்மையின மக்கள் நியாயமான முறையில்

அரசியல்,சமூக, பொருளாதார அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பின்மை நாட்டின் இனப்பிரச்சினைக்கு அடிப்படையான காரணமாகும். அது உங்களது அல்லது எனது நாட்டின் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பர்கர்கள் ஆகிய மக்களது பிரச்சினையல்ல. அது நாட்டில் அமுலில் உள்ள ஆட்சிமுறை சார்ந்த பிரச்சினையாகும். அரைநூற்றாண்டுக்காலமாக நீண்டகாலம் சகோதரப்பிணைப்புடன் வாழ்ந்த மக்கள் இனங்களுக்கிடையில் யுத்தம் என்ற தீ பற்றிக்கொண்ட துர்ப்பாக்கியமான கதியொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. நாட்டுக்குப் பொருத்தமற்ற அதிகார உடன்படிக்கையொன்றை வகுத்தமைத்த குடியேற்ற நாட்டு அரசியலமைப்பு கட்டுக்கோப்பிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்ள முடியாத காரணத்தினால் அமுலில் உள்ள அரசாங்கங்களினூடாகத் தமக்கு அநீதி விளையும் என்ற உணர்ச்சி சிறுபான்மையின மக்களிடையே பரவியது. உண்மையில் அத்தகைய அநீதிகள் இழைக்கப்பட்டன. 1983 ஆம் ஆண்டின் பின்னர் நேருக்கு நேரான யுத்தமொன்றாக உருமாற்றமடைந்த இந்த மோதலானது யுத்தம் காரணமாகவே ஏற்பட்ட காரணிகளுடன் இழுத்துக்கொண்டு போகின்றது. அதன் பிரயோக முறையின் பாற்பட்டதீர்வுகளைக்காணும் போது மூன்று மாற்றத்துறைகளில் செயற்படவேண்டிய நிலையில் நாங்கள் உள்ளோம். அவையாவன.

1. அரசியலமைப்புச்சீர்திருத்தம்.
2. தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புதல்.
3. பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் என்பனவாகும்.

மேற்போந்த மாற்று வழிகளை நான் வரன் முறையில் சமர்ப்பித்துள்ளேன். எனினும் ஒன்றன் பின் ஒன்றாக செயற்படுத்தப்பட வேண்டியவை அல்ல. அவையொன்றிற்கும் சமாந்தரமாக ஒரே நேரத்தில் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளவாறு செயற்படுத்தப்படல் வேண்டும்.

தற்போது அமுலில் உள்ள 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு உள்ளிட்ட இலங்கையின் அரசியல் அமைப்புக்கட்டுக்கோப்பிற்குள் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாது என நாங்கள் கண்டோம். இந்த விடயம் பற்றி இச் சீருயர் சபையில் பல்வேறு கட்சிகளைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்த போதிலும் இக்காரணம் பற்றி அவர்கள் பொதுவாக இணக்கத்துக்கு வருவர் என நான் அறிவேன். எமக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகள் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் போது நாங்கள் பயன்படுத்தும் சில நடவடிக்கைகள் பற்றியே எழுந்துள்ளன. ஆயினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் இலக்கினைக் கொண்ட அரசியல் அமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளும் போது எவராலும் புறக்கணிக்க முடியாத அடிப்படைக்கோட்பாடு ஒன்று உள்ளது. அதாவது எமது சமுதாயத்தின் பல்லின அடிப்படையினை ஏற்றுக்கொண்டு 'குடிமகனைப் பல்லின ஜனநாயக முறைசார்ந்த செயல் ஆர்வம் மிக்கபங்காளியாக ஊக்குவிக்கக்கூடிய அரசியல் அமைப்பொன்றை வகுத்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையாகும்....



... அதிகாரப் பகிர்வு அத்தகைய அரசியல் அமைப்பொன்றின் அடிப்படை இலட்சணமாகும். மையத்திலுள்ள அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல், சுயாதீன ஆணைக்குழுக்கள் பலவற்றிற்கு ஆட்சி மட்டத்திலும், நிர்வாகத்தினதும் முக்கிய பிரிவுகளை ஒப்படைத்தல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை ரத்துச் செய்தல். பொருளாதார மற்றும் சமூக உரிமைகளும் உள்ளிட்ட சிறந்த அடிப்படை உரிமைகள் தொகுதியொன்றை அறிமுகப்படுத்தல் முதலிய முக்கிய குணாம்சங்கள் பலவற்றைக்கொண்ட புதிய அரசியல் அமைப்பு வரைவொன்றை நாங்கள் தயாரித்தோம். கடந்த பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட செயற்குழுவொன்றில் விவாதத்திற்கு உட்படுத்தி அதனைப்பாராளுமன்றத்தில் முன் வைக்க எங்களால் முடிந்தது. அந்த அரசியல் அமைப்பின் மேற்குறிப்பிட்ட பண்புகள் எங்களால் தான்தோன்றித்தனமாகச் சேர்க்கப்படவில்லை. 1959 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கையிலிருந்து 1992 ஆம் ஆண்டு மங்கள முனசிங்க தெரிவுக்குழு அறிக்கை வரையான அரசியல் தீர்வுயோசனைகளைத் தயாரிக்கும் போதுகாணப்பட்ட சாதகமான யோசனைகளையும், சர்வதேச அனுபவங்களையும் கருத்திற்கொண்டுதான் அவை அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டன. 1999 டிசம்பர் ஜனாதிபதித்தேர்தலில் வெற்றிகண்ட பின்னர் சகல அரசியல் கட்சிகளோடும், விசேடமாக ஐக்கிய தேசியக் கட்சியோடு நீண்ட பேச்சுவார்த்தையை மேற்கொண்டது. வரைபு சட்டமூலத்தில் அடங்கிய விடயங்கள் பலவற்றை பற்றி இணக்கத்திற்கு வர எங்களால் முடிந்தது. அதன்பின்னர் கடந்த ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதியில் நான் அதனை இச்சீருயர் சபைக்குச் சமர்ப்பித்தேன். ஆயினும் சரித்திரத்தை அளாவியவாறு செயற்பட்ட விரோத மனப்பான்மைக்கு உட்பட்ட அரசியல் அதற்குத்தடையாக அமைந்தது.

... அந்த வழியினைவிட மக்கட்சமுதாயம் என்ற வகையில் எங்களுக்கு வேறு ஜனநாயக முறையின் பாற்பட்டமாற்று வழிகள் உள்ளனவா? எனவே, வெறும் விரோத மனப்பான்மைகளுக்காக அன்றி நாட்டில் பிரச்சினைகள் பற்றிய பாரதூரமான அரசியல் ஒன்றிற்காகப் புதிய எண்ணங்களின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை பற்றி மீண்டும் ஆலோசனை செய்யுமாறு இந்த மாண்பு மிக்க மக்கள் பிரதிநிதிகளிடம் நான் பணிவாக வேண்டுகின்றேன். நாங்கள் மீண்டும் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் என்ற மாற்று வழியை நோக்கிச் செல்ல வேண்டியவர்களாக உள்ளோம்....

... மகாசங்கத்தினர் உள்ளிட்ட சிலருக்கு இது பற்றி எமது கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பு அளிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்டது. உண்மையில் 1995 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நாங்கள் அத்தகைய எண்ணிறந்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். ஆயினும், அதுபோதாது என்பது பற்றி மேலும் பிரச்சினை இருப்பின் அதற்கு வாய்ப்புக்களை அளிக்கத் தயாராக உள்ளேன். என இத்தருணத்தில் கூறுகின்றேன்.

... இனபேதமற்ற ஐக்கிய இலங்கையொன்று பற்றி எமது நாட்டிற்குச் சுதந்திரத்தை வென்றெடுத்த பெரியவர்கள் இலங்கைக்கு சுதந்திரச் சூரியன் உதித்த ஆரம்ப காலத்திலேயே கனவு கண்டனர்.

...அன்று 1948 ஆம் ஆண்டில் எமது முன்னோர்கள் சுதந்திரப் பாதையில் முதற்காலடியை எடுத்து முதலடி வைத்தபோது சரியான முறையில் சுதந்திரம் பெற்ற ஐக்கிய இலங்கையின் முதற் பிரதம அமைச்சரான டி. எஸ். சேனாநாயக்க அவர்கள் 1948 பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியில் தேசியக்கொடியை ஏற்றியபின்னர் பின்வருமாறு கூறினார்.

....எமது நாடு பல்லினங்களையும், பல சாதிகளையும் கொண்ட நாடாகும். அவர்கள் அனைவருக்கும் தமக்கே உரிய கலாசாரம் ஒன்றும் வரலாறு ஒன்றும் உள்ளது. சமாதானம், பாதுகாப்பு, சகலமக்கள் விடயத்திலும் நியாயத்தைப் பேணுதல் ஆகியவற்றின் போது எங்கள் மத்தியில் உள்ள சகல சிறந்த குணங்களையும் சேர்த்துக்கொள்ளுதல் எமது கடப்பாடாகும்.

....1945 நவம்பர் மாதம் 8 ஆம் திகதியில் அரசவை மன்றத்தில் அவர் பின்வருமாறு கூறியுள்ளார். பல நூற்றாண்டுகளாக சிங்களமக்களும், தமிழ்மக்களும் சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்துள்ளனர். தமிழ் அரசர்கள் எங்களையும் எமது அரசர்கள் அவர்களையும் ஆண்டுள்ளனர். இவ்வெல்லா இன மக்களையும் ஒன்று சேர்ப்பதைவிட வேறு நோக்கம் எனது வாழ்வில் எனக்கு இல்லை (அரசவை மன்றம் - 1945 - 11 - 09)

...1958 ஜுலை மாதம் 17 ஆம் திகதி தமிழ்மொழிச்சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து எஸ். டப்ளியூ. ஆர். டீ. பன்டாரநாயக்க அவர்கள் ஆற்றிய உரையினை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவர் பின்வருமாறுகூறினார்.

... நாங்கள் பெற்றுள்ள இந்தச் சுதந்திரத்திக் கீழ் வருங்காலத்தை நோக்கிச் சென்று முன்னேற்றத்தை அடையக்கூடியவர்களாக இருக்கின்றோம்... இது சிங்கள மக்களுடைய சுதந்திரம் மாத்திரமன்று தமிழ் மக்களினதும், முஸ்லிம்மக்களினதும், மலே மற்றும் பார்கர் மக்களினதும் சுதந்திரம் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். சுதந்திரம் அங்கனம் நம் அனைவருக்குமாக வழங்கப்படவில்லையாயின் சுதந்திரத்திற்காகப்போராடி மறியற்சாலைக்குச் சென்று அதற்காக ஆண்டுகள் பல இடர்பட்ட ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள் கூறிய பொன்மொழிகளை மீண்டும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

...'' சுதந்திரம் என்பது உள்நாட்டு இனவாதக்கலவரங்கள் அல்லது சிறுபான்மையினருக்கு நேரும் அநியாயங்கள் அல்லது அவர்களை அடக்குதல் எனப் பொருள்படின் சுயராஜ்யம் தொலைந்து போகட்டும்" என அன்று நேரு அவர்கள் குறிப்பிட்டார்.

... அதிகாரப்பகிர்வுக்குரிய அரசியலமைப்பொன்றின் மூலம் யாருக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள இருக்கிறீர்கள் எனச்சிலர் வினவுகின்றனர். இந்த வினா வேறொருவரைப்பற்றி அல்ல. விடுதலைப்புலிகளின் இயக்கம்



பற்றியதாகும். நாட்டின் ஜனநாயகச்செயல் முறையில் சேருவதற்கு விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குள்ள வாய்ப்புக்களுக்கு நாங்கள் எவ்வகையிலும் தடைசெய்யவில்லை. அந்த இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம். ஆயினும், பேச வேண்டிய விடயங்கள் யாவை என்பது தீர்மானிக்கப்படல் வேண்டும். பேச்சுவார்த்தைகள் என்ற கோதாவில் விடுதலைப்புலிகள் இயக்கம் பொருட்களுக்கான கட்டுப்பாட்டினை நீக்குதல். உணவுகளை அனுப்புதல் போன்ற அவர்களுக்குப்பயன்படும் கோரிக்கைகளை விதிப்பார்களாயின், அதனால் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. காரணம் அந்த நடவடிக்கைகள் எங்களால் ஏலவே எடுக்கப்பட்டுள்ளமையாகும். யுத்தத்தினால் அழிந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் புனருத்தாரணம் செய்தலானது எமது அரசாங்கத்தின் முக்கிய பணியாகும். அதற்கென புதிய அமைச்சொன்றை நாங்கள் நிறுவியுள்ளதுடன், ஆயுதம் தாங்கிய அரசியலைக்கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் நுழைந்த தமிழ் அரசியல் கட்சியொன்றின் தலைவர் ஒருவருக்கு நாங்கள் அமைச்சுப்பதவியை வழங்கியுள்ளோம். எனவே எங்களுடன் விடுதலைப்புலிகள் இயக்கம் உறுதியான அரசியல் விடயங்கள் பற்றியே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். பிரதான சிறுபான்மையின மக்களான தமிழர்கள் வடக்கு, கிழக்கில் போன்று இந்நாட்டில் சகல இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மக்களது கண்ணோட்டத்தில் நோக்கினாலும் வடக்கு, கிழக்கும் மாத்திரம் தனி அரசொன்றை நிறுவுவதன் காரணமாகத் தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கப்போவதில்லை. அனைத்து இன மக்களுக்கும் விடுதலை கிடைக்கும் ஒரே வழி ஐக்கிய நாடொன்றில் அனைவரும் சகோதரர்களாக வாழுதலேயாகும். எனவே ஐக்கிய நாடொன்றில் அதிகாரப் பகிர்வு என இன்று முன்வைக்கப்பட்டுள்ள மிகச்சிறந்த ஜனநாயக மாற்று வழிக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் சிறந்த வரவேற்பு அளிக்க வேண்டியுள்ளது. அதற்காக எந்தவொரு கதவினையும் மூடாமல் இருக்கும் பொறுப்பினை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்...

.. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் பொருட்டு நோர்வே அரசாங்கம் முன்வந்தமை பற்றி இத்தருணத்தில் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். யுத்தத்தினால் ஏற்படும் அழிவுகளைத், தடுத்து சமாதான வழியில் பிரச்சனைக்குத்தீர்வு காண்பதற்கு நாங்கள் ஆரம்பத்திலிருந்தே முயன்றுள்ளோம் 1994 ல் நாங்கள் பதவிக்கு வந்த சில தினங்களிலே சமாதானச்செயல்முறையினை ஆரம்பித்து வைத்தோம். ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து எங்களுக்குச் சரியான வரவேற்புக் கிடைக்கவில்லை. சமாதானத்துக்காக நீட்டிய கரத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் நிராகரித்தபடியால் மீண்டும் யுத்தம் செய்ய வேண்டிய நிலைஏற்பட்டது.யுத்தம் இடம்பெறும் காலத்திலும் சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்காக அடிக்கடி எடுக்கப்பட்ட முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கவில்லை. இப்பொழுது நோர்வே அரசாங்கம் இதில் மத்தியஸ்தம்

பகிக்க முன்வந்துள்ளது. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு சிற்சில நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென அவர்கள் எமக்குத் தெரிவித்துள்ளனர் ஆயினும் இந்த நிபந்தனைகள் யாவை என இதுகாறும் தீர்மானிக்கவில்லை. சமாதானப் பேச்சுவாத்தைகளை பற்றிய முடிவொன்றை எடுக்கும்போது, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கடந்தகாலச்செயற்பாடுகளை அவதானித்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தோடு இச்சீருயர் சபையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். 15 வருடகாலமாகப் பல்வேறு அரசாங்கங்களை ஏமாற்றிய விதத்தில் அவர்கள் மீண்டும் என்னை ஏமாற்ற வருவார்கள் என்ற விடயம் தீவிரமாக ஆராயப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நோர்வே அரசாங்கம் தலையிட்டு சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் யாவை என்பதைக்கூறிய பின்னர் சம்பந்தப்பட்ட கட்சிகள் அனைத்தோடும் அதுபற்றிக் கலந்துரையாடி முடிவுக்கு வருதல் எமது எண்ணமாகும். அதுவரை பயங்கரவாதத்துக்கு யுத்தத்தினால் பதில் கொடுக்கும் எமது செயற்திட்டம் எவ்வகையிலும் கைவிடப்படமாட்டாது...

.... விடுதலைப் புலிகள்இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு நாங்கள் காட்டிய அக்கறை அதுவாகும். தமிழ் மக்களது நியாயமான பிரச்சினைகளக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான எமது அடிப்படைக் கொள்கை எவ்விதத்திலும் மாற்றப்படவில்லை என்பதை இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு நாங்கள் முன்வைத்த கொள்கைக்கு கடந்த ஏழாண்டுகாலத்தில் இடம் பெற்ற தேர்தல்களின் மூலம் தெளிவான ஆணைகிடைத்துள்ளது.

...ஜனநாயம் என்பது அனைவரினதும் ஒப்புதலைப பெற்றுக்கொள்ளல் என்ற தவறான முடிவுக்கு நாங்கள் வரவேண்டியதில்லை. ஜனநாயகம் என்பது பெரும்பான்மையோரின் இணக்கப்பாடாகும். எந்தவொரு பிரச்சினை சம்பந்தமாகவும் எந்தநாளிலும் நூற்றுக்குநூறு இணக்கப்பாடு எதிர்பார்க்கப்பட முடியாது. அத்தகைய முறைமையொன்று எவ்வித ஜனநாயக முறைக்குட்பட்டநாட்டிலும் அமுலில் இல்லை. எனவே பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணும்போது அனைவரினதும் இணக்கப்பாடு கிடைக்கும்வரை காத்திருத்தல் சரியான வழிமுறையல்ல என்பது எனது எண்ணமாகும்...

...இலங்கை அரசியல் வரலாற்றில் இதுகாறும் தோன்றியுள்ள அகல்விரிவான தேசியக்கூட்டணி எமது அரசாங்கமாகும். பல காலமாக தனி அரசொன்றுக்காகப் போராடிய சக்திகள் பல எமது ஜனநாயகத்தின் பாற்பட்ட மாற்றுத்தீர்வுகளின் மீது நம்பிக்கை வைத்து எம்மோடு சேர்ந்துள்ளமை நாம் பெற்ற வெற்றியாகும். இத்தேசியக்கூட்டணியை மேலும் விரிவாக்குதல் எமது அவாவாகும். ஆயுதந்தாங்கியவாறு போர் புரியும் சக்திகள் அங்ஙனம் போர் புரிவதற்கு ஏதுவான காரணங்களை நாங்கள் நீக்குதல் வேண்டும். இது தொடர்பில் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் தலைமையிலான முன்னணி அரசாங்கங்கள் சிறந்தமுன்மாதிரியைக் கொடுத்துள்ளன.

....அரசியல் தீர்வொன்றுக்காக அவசரசெயற்பாடுகள் சிலவற்றை ஏற்படுத்துவதற்கு எனது அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன் வண்ணம்,



அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினையும் மேலும் அத்தகைய அவசரத்தேவையாகக் கொண்டு வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் சிவில் நிருவாகத்தை உறுதிப்படுத்தும் திறமை என்றவகையில் வடக்கு, கிழக்கு அனைத்து இன மக்களினதும்பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் இடைக்கால நிருவாக சபையொன்றைத் தாபிப்பதற்கு நாங்கள் கருதியுள்ளோம்...

... தேசிய நிதியிலிருந்து யுத்தத்துக்காக மாபெரும் செலவினங்களை செய்ய வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். ஆயினும் இந்த நாட்டைப்பிரிப்பதற்கு நாங்கள் எவருக்கும் இடமளிக்க மாட்டோம். அந்நோக்கத்துக்காக அஞ்சாநெஞ்சம் கொண்டு போராடுகின்ற பாதுகாப்புப்படையொன்று எமக்குஉள்ளது. அவர்கள் இன்னொரு இனத்துக்கு எதிராக அன்றி பாசிஸ வெறியின் பிடிப்புக்கு உட்பட்டுள்ள மக்கள் அதிலிருந்து விடுவிப்பதற்கே போர் புரிகின்றனர். அந்த யுத்தத்தை விரைவில் முடிவுறுத்தல் எமது எண்ணமாகும். அந்த யுத்தமும் சர்வதேச சட்டத்தின் கீழ் நாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றது. நாங்கள் யுத்தத்துக்காகச் சிறுவர்களை சேர்த்துக்கொள்ளவில்லை. யுத்தத்தினால் ஊனமுற்றவர்களையும், விபத்துக்குள்ளான குடும்பங்களையும் பாதுகாக்கும் நோக்கிலும் விரிவான வேலைத்திட்டமொன்றை நாங்கள் செயற்படுத்தி வருகின்றோம். யுத்தத்தினால் அழிந்த பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்பவும் அங்கு மக்கள் வாழ்வினைப் புனருத்தாரணம் செய்யவும், வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். எனவே, எத்தகைய அச்சுறுத்தல்களுக்கு உட்பட நேர்ந்த போதிலும் ஆயுதம் தாங்கிய பயங்கர வாதத்திலிருந்து நாட்டை மீட்பதற்காக அஞ்சாநெஞ்சம் கொண்டு போர் புரிகின்றோம் என்று நான் வெளிப்படுத்துகின்றேன்.

... நான் இதுகாறும் எடுத்துக்கூறிய இக்குறிக்கோள்கள் யாவற்றையும் எய்தவேண்டுமாயின், எம்மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்பும் இணக்கப்பாடும் இன்றியமையாததாகும். 1999 டிசம்பர் 22 ம் திகதி இரண்டாவது ஜனாதிபதிப் பதவியில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் நாட்டு மக்களுக்காக ஆற்றிய உரையில் நான் கூறிய விடயங்கள். இந்தத்தேர்தல் பெறுபேறின் பின்னரும் நன்கு பொருத்தமுடையனவை என நான் கருதுகின்றேன். நான் அன்று பின்வருமாறு கூறினேன்.

...''இந்த நாட்டு மக்கள் தமது எண்ணம் யாதென்பதைத் தெளிவாகக் கூறியுள்ளனர். அவர்களுக்காகச் சமாதானம் அவசியமாகும். அதற்காக அவர்கள் சமாதானத்தின் பேரில் தோன்றுகின்ற தலைவியொருவரை தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்களுக்கு தேசிய ஒற்றுமை அவசியமாகும். அதன் வண்ணம் எமது சக்திகளை ஒன்றுபடுத்தும் வல்லமை கொண்டவரென நிருபித்துள்ள தலையியொருவரை அவர்கள் தெரிவு செய்துள்ளனர். அவர்களுக்கு சகோதரத்துவம் தேவையென்பதும் வெள்ளிடைமலை. அதன் வண்ணம் அவர்கள் சக்திவாய்ந்த ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்தது மட்டுமன்றி, மிகவும் பலம்கொண்ட எதிர்க்கட்சியொன்றுக்கும் தமது ஒத்துழைப்பினை நல்கியுள்ளனர்.

" நாங்கள் பெற்றுள்ள வெற்றியின் பொருள் யாது என்பதை நாங்கள் நன்றாகப்புரிந்து கொள்ள வேண்டுமென நான்நம்புகிறேன். சமாதானத்தின் தீபத்தை நாட்டின் ஒரு சிலர் தாங்கும்பொழுது ஏனையசிலர் வாளாவிருக்கின்ற நிலையை எமது நாட்டு மக்கள் எதிர்பார்க்க மாட்டார்கள் என நான் நன்கு அறிகின்றேன். விதியினால் என்மீது சுமத்தப்பட்டுள்ள இந்தப்பாரத்தை இரண்டு கட்சிகளும் பகிர்ந்து கொள்ளவேண்டுமென எமது மக்கள் கருதுகின்றார்கள் எனவும் நான் எண்ணுகின்றேன். மிகவும் சக்தி வாய்ந்த இரண்டு கட்சிகளையும் படைக்கும் வல்லமை இலங்கை மக்களுக்கு உள்ளது. நாட்டைக்கட்டியெழுப்புவதற்காக இவ்விரண்டு கட்சிகளையும் இந்த வல்லமையினையும் பயன்படுத்த வேண்டுமென நான் கருதுகின்றேன்"

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே :

உங்களை இச்சீருயர் புகழ்பூத்த சபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்த போது, இருகட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆரம்பித்து வைத்த புதிய அரசியல் கலாசாரத்துக்கு மேலும் வலுவூட்டி முன்னெடுத்துச்செல்வது எமது கடப்பாடாகும். நாட்டின் முன்னுள்ள பாரதூரமான பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் பொருட்டு நாங்கள் சகல வாத பேதங்களையும் மறந்து ஒன்று படுவோம். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இப்பயங்கரவாத மற்றும் கொலைக்களக் கலாசாரத்தைப் புறக்கணிப்போம். சமாதானத்துக்கான எமது அறிவுமிக்கதும், இன்றியமையாததும், வெகுஅவசரமானதுமான கடமையினைநிறைவேற்றும் பொருட்டு குறுகிய மனப்பாங்குகள், வேறுபாடுகள், பொறாமை, வஞ்சகத்தன்மை மற்றும் சகல வேறுபாடுகளைப் புறக்கணித்து ஒன்று சேருங்கள் என நான் இச்சீருயர் சபையில் உள்ள அனைத்துக்கட்சிகளையும் சேர்ந்த மாண்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

... இந்த அழகான நாட்டை மீண்டும் சுபீட்சத்தையும் சமுர்த்தியையும் நோக்கி எடுத்துச்செல்வதற்குத் தேவையான நல்ல சூழல் ஏற்பட்டுள்ளது. உங்களுக்குக்கிடைத்த இவ்வுயர்ந்த வாய்ப்பினை எமது மேன்மைதங்கிய தாய் நாட்டுக்குச் சேவை செய்யும் பொருட்டு உச்சமட்டத்தில் பயன்படுத்துங்கள் என நான் மாண்புமிக்க பாராளுமன்றஉறுப்பினர்களிடம் வேண்டுகிறேன். உங்கள் ஒத்துழைப்பினையும் பயன் தருவிமர்சனங்களையும் முற்போக்கான ஆதரவினையும் எமது நாட்டு மக்கள் அன்புடன் எதிர்பார்க்கின்றனர் என்பது திண்ணம்.

மாட்சிமையின் உச்சத்தை எட்டிப்பிடிப்பதற்காக தனிப்பட்ட நபரொருவருக்கு அல்லது இனத்துக்குச் சில சந்தர்ப்பங்கள் மட்டுமே சரித்திரம் வகுத்தமைத்துக் கொடுக்கின்றது. நாங்கள் பல சந்தர்ப்பங்களை கைவிட்டுள்ளோம். இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு எங்களுக்குக் கிடைத்துள்ள இந்த வளமான கடைசிச் சந்தர்ப்பமானது, மீண்டும் ஒரு முறை கைவிடப்படலாகாது. அதனைக்கைவிட வேண்டாம்.



சிந்தனை வட்டத்தின் 114 வது வெளியீடு